தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன்

பேராசிரியர் வெ. வரதராசன், எம்.ஏ., எம்.பில்.,
தமிழ்த்துறைத் தலைவர்,
கலவல கண்ணன் கல்லூரி,
பட்டாபிராம், சென்னை - 72.

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக் கழகக்
குறுகிய கால ஆய்வுத்
திட்டத்தின் கீழ்
உருவாக்கப்பட்டது.

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு : **50**

திருவள்ளுவர் ஆண்டு 2017 பங்குனி : மார்ச்சு 1986

ஆசிரியர் : **வெ. வரதராசன்**

நூல் : **தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன்**

விலை : **உரூ. 55/-**

அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக
மறுதோன்றி அச்சகம்,
தஞ்சாவூர்.

முன்னுரை

தொல்பழங்கால நாகரிகத்தில் தமிழர் நாகரிகம் தலைசிறந்த ஒன்று என ஐயமின்றிக் கூறலாம். தமிழினம் பல்வேறு கலைகளை வளர்த்து வாழ்வியலைப் பண்படுத்திய இனம். அக்கலைகளை அறுபத்து நான்கு[1] எனக் கூறும் மரபும் உண்டு. அவ்வறுபத்து நான்கு கலைகளில் ஒப்பனைக் கலையும் ஒன்று.

தமிழரின் முருகியல் உணர்ச்சியையும் கலைத்திறனையும் புலப்படுத்துவதே ஒப்பனைக் கலை. ஒருநாட்டு மக்களின் அழகு உணர்ச்சியின் அளவுகோலாகவும் அமைவது ஒப்பனைக் கலை. மேலும் ஒரு நாட்டின் கற்பனை வளத்தையும் செல்வச் செழிப்பையும் காட்டுவதாகவும் ஒப்பனைக் கலை அமைகிறது.

அழகில் சற்றுக் குறைந்தவர்கள் அழகுடையவர்களாகக் காட்சியளிக்கவும், இயல்பாகவே அழகுடையவர்கள் மேலும் அழகுடையவர்களாகக் காட்சியளிக்கவும் உறுதுணையாவது ஒப்பனைக் கலை.

ஒப்பனை செய்து கொண்டவர்களுக்கு மனமகிழ்ச்சியும், காண்பவர்களுக்குக் கண்கவர்ச்சியும் ஏற்படுகின்றன.

சங்க இலக்கியத்தின் துணைகொண்டு தமிழிலுள்ள பிற இலக்கிய நூல்களின் சான்றுகளுடனும் அமையும் இவ்வாய்வு 'தமிழரின் ஒப்பனைக் கலைத்திறனை' அறிந்துகொள்ளக் கருவியாகும்.

மயிலை சீனி. வேங்கடசாமி 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்னும் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். அந்நூலில் அவர் அழகுக் கலைகளைப் பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் கருதத்தக்கன:

''அழகுக் கலைக்கு இன்கலை என்றும், கவின்கலை என்றும் நற்கலை என்றும் வேறு பெயர்கள் உண்டு.

மனிதனுடைய மனத்தில் உணர்ச்சியை எழுப்பி அழகையும் இன்பத்தையும் அளிக்கிற பண்பு அழகுக் கலைகளுக்கு உண்டு. மனிதன் தன்னுடைய அறிவினாலும் மனோபாவத்தினாலும்

கற்பனையினாலும் அழகுக் கலைகளை அமைத்து அவற்றின் மூலமாக உணர்ச்சியையும் அழகையும் இன்பத்தையும் காண் கிறான். அழகுக்கலைகள் மனத்திலே உணர்ச்சியை எழுப்பி அழகுக் காட்சியையும் இன்ப உணர்ச்சியையும் கொடுத்து மகிழ்விக்கிறபடியினாலே, நாகரிகம் படைத்த மக்கள் அழகுக் கலைகளைப் போற்றுகிறார்கள்; பேணி வளர்க்கிறார்கள்; துய்த்து இன்புற்று மகிழ்கிறார்கள்.

அழகுக் கலையை விரும்பாத மனிதனை அறிவு நிரம்பாத விலங்கு என்றே கூற வேண்டும். அவனை முழு நாகரிகம் பெற்றவன் என்று கூற முடியாது.

அழகுக் கலைகள் எத்தனை? அழகுக்கலைகள் ஐந்து. அவை கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்பன''[2]

இதில் மயிலை சீனி. வேங்கடசாமி, ஒப்பனைக் கலையைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் தம் பத்துப் பாட்டாராய்ச்சியில் அழகுக் கலைகளைப் பற்றிக் கூறியுள்ளார்.

அவர் அத்தலைப்பில் ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக் கலை, நடனக்கலை ஆகியவற்றையே அழகுக்கலைகள் என வரைந்துள்ளார்.

அவற்றுடன் ஒப்பனைக்கலை என்னும் பெயர் சூட்டாமலேயே பண்டைத் தமிழரின் உடைகளைப் பற்றியும்[3] அணிகள் பற்றியும்[4] மணப்பொருள்கள் பற்றியும்[5] பத்துப்பாட்டிலுள்ள செய்திகளைத் திரட்டிப் பல உள்தலைப்புகளுடன் எழுதியுள்ளார்.

'பெருங்கதை ஆராய்ச்சி' என்னும் நூலின் ஆசிரியர் சு. செல்லப்பன், அணிகலன்களையும் ஆடை வகைகளையும் ஆராய்ந்ததுடன் ஒப்பனை குறித்தும் வரைந்துள்ளார்.

அதில் அவர், மகளிர்க்கு ஒப்பனை செய்யும் பணிப்பெண்கள் அக்காலத்தில் இருந்தனர் என்பதையும், அன்னார் 'வண்ண மகளிர்' எனப்பட்டனர் என்பதையும் ஒப்பனைக்குரிய அறையையும் நீராடும் முறையையும் ஆடை அணிந்த விதத்தினையும் அணி

களைப் பற்றிய விவரங்களையும் கூந்தல் ஒப்பனையையும் தொய்யில் எழுதலையும் ஆராய்ந்து எழுதியுள்ளார்.[6]

ஆடவரும் ஒப்பனை செய்து கொள்வதில் ஆர்வங் காட்டினர் எனவும், ஆடவர்க்கு ஒப்பனை செய்வோர் 'கோலவித்தகர்' எனப்பட்டனர் எனவும் கூறியுள்ளார்.[7]

தொய்யில் எழுதிக் கொள்ளும் வழக்கம் ஆடவர்க்கும் உண்டு எனவும் குறிப்பிட்டுள்ளார்.[8]

'ஆய கலைகள் அறுபத்து நான்கு' என்னும் நூலின் ஆசிரியரான செந்துறைமுத்து அவர்கள் பண்டைத் தமிழர் ஒப்பனைக் கலையில் உயர்ந்து விளங்கினர் என்பதையும், அக்கலை, தமிழரின் உயரிய நாகரிகத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது என்பதையும் விளக்கிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''பழங்காலத்தில் ஒப்பனைக் கலை மிகவும் சிறந்து விளங்கியது. நாகரிக முன்னேற்ற காலம் எனப்படுகின்ற இக்காலத்திற் கூட அத்தகைய ஒப்பனைக் கலை வளர்ச்சியில்லை. இன்றைய நவீன நாகரிகம் என்பதே-நவீன ஒப்பனை என்பதே அக்காலத்திய ஒப்பனைக் கலையின் மறுமலர்ச்சியே. இன்றைய மகளிர் ஒப்பனை இதனை நன்கு உணர்த்துகின்றது''[9]

எனினும் சங்க இலக்கியத்தில் ஒப்பனை என்னும் சொல், யாண்டும் காணப்படவில்லை. ஆனால், ஒப்பனை என்னும் பொருள்தரும் சொற்கள் உள்ளன. அவை 'கோலம்' 'செண்' என்பன.

வையையில் வந்த புதுவெள்ளம் ஒப்பனை பெறும் பொருட்டு மலர் மாலைகளையும் சந்தனம், கத்தூரி முதலியவற்றின் குழம்புகளையும் வேறு பல அணிகலன்களையும் அந்நீரில் இட்டனர் எனப் பரிபாடலில் கரும்பிள்ளைப்பூதனார் கூறியுள்ளார்.[10]

இந்நூலிலேயே ஆசிரியர் நல்லந்துவனாரும்,
''ஒரு பெண் கொற்றவை போலத் தன்னை ஒப்பனை
செய்து கொண்டாள்'' எனக் குறித்துள்ளார்.[11]
'செண்' என்னுஞ் சொல் அகநானூற்றுப் பாடலில்
பயின்று வந்துள்ளது.[12]

இப்பாடலின் ஓரடிக்கு உரை வகுத்த நாவலர் ந.மு. வேங்கட சாமி நாட்டார் அவர்கள் ''சென்-ஒப்பனை; ஒப்பனை செய்யப் படுவதால் கொண்டைக்குப் பெயராயிற்று'' என விளக்கமும் தந் துள்ளார்.

மதுரைக் காஞ்சியில் 'கைஇ' என்னும் சொல்லுக்கும், தம்மைக் கோலம் செய்து என நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.[13]

இவற்றால் ஒப்பனை பற்றிய அறிவும் ஆராய்ச்சியும் சங்க காலத்திலிருந்தே தமிழ் மக்கட்கு இருந்து வருகின்றன என்பதை அறியலாம்.

அடுத்து வரும் இயல்களில் தமிழரின் ஒப்பனைக் கலைத் திறனை விரிவாகவும் விவரமாகவும் காண்போம்.

நன்றியுரை

துறைதோறும் துறைதோறும் தமிழ் மொழியை வளர்த்தலும் வளப்படுத்தலும் உலகோர் அனைவரும் தமிழர் நாகரிகத்தை, பண்பாட்டை, கலைச்செல்வங்களை அறிந்து கொள்ள வகை செய்தலும், தஞ்சைத் தரணியில் தமிழ்ப் பல்கலைக் கழகம் தோற்றுவித்தவர்களின் உயர்ந்த நோக்கமாகும்.

இந்நோக்கத்தைக் குறைவற நிறைவேற்றத் தீட்டப்பட்டதே குறுகியகால ஆய்வுத் திட்டம்.

இவ்வுயரிய திட்டத்தின்கீழ் 'தமிழரின் ஒப்பனைக் கலைத் திறன்' என்னும் தலைப்பில் ஆய்வு நிகழ்த்த யான் விருப்பம் தெரிவித்தேன்.

பல்புகழ் நிறுத்தவரும் தொல்தமிழ் வித்தகருமான துணை வேந்தர் அவர்களும், விரிதமிழ் இயக்குநர் அவர்களும் என் எண்ணம் ஈடேறும் பொருட்டு இசைவு தந்தனர்.

தொலைநோக்கு வாய்க்கப்பெற்ற துணைவேந்தர் அவர் கட்கும் விரிதமிழ் இயக்குநர் அவர்கட்கும் என் உளமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டை அழகிய முறையில் தட்டச்சு செய்து தந்த அமிர்தலிங்கத்திற்கும் என் நன்றி உரியதாகும்,

— வெ. வரதராசன்

அடிக்குறிப்புகள்

1. கலைக்களஞ்சியம் தொகுதி 3: பக். 339, 340
2. மயிலை சீனி. வேங்கடசாமி, "தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்", பக். 509.
3. மா. இராசமாணிக்கனார், "பத்துப்பாட்டு ஆராச்சி" பக்.509
4. ,, ,, ,, பக்.520
5. ,, ,, ,, பக்.595
6. செல்லப்பன், சிலம்பொலி "பெருங்கதை ஆராய்ச்சி" பக்.274
7. ,, ,, ,, பக்.274
8. ,, ,, ,, பக்.274
9. புலவர் செந்துறைமுத்து, "ஆயகலைகள் அறுபத்து நான்கு"
10. பரிபாடல் 10: 92-93.
11. ,, 11: 100.
12. அகநானூறு, களிற்றியானை நிரை, ந. மு. வே; ரா. வே. பதவுரை பக். 144
13. மதுரைக்காஞ்சி, அடி 419. உரை.

பொருளடக்கம்

இயல்		பக்கம்
1.	ஒப்பனைக்கு முன்	... 1
2.	ஒப்பனையில் ஆடைகள்	... 7
3.	ஒப்பனையில் அணிகலன்கள்	... 31
4.	கூந்தல் ஒப்பனை	... 73
5.	முக ஒப்பனை	...117
6.	நக ஒப்பனை	...125
7.	ஒப்பனையில் நறுமணப் பொருள்களும் வண்ணப் பொருள்களும்	...129
8.	ஒப்பனைக்கு உதவியவர்களும் பயன்பட்ட கருவிகளும்	...145
9.	இலக்கிய மாந்தர் ஒப்பனைக் காட்சிகள்	...155
	நிறைவுரை	...165
	பின்னிணைப்புகள்	...167
	துணை நூற் பட்டியல்	...173

சுருக்க விளக்கம்

அகம்.	...	அகநானூறு
அடியார்க்.	...	அடியார்க்குநல்லார்
ஐங்	...	ஐங்குறுநூறு
கம்ப. அண்ணா.	...	கம்பராமாயணம் - அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு
கலி.	...	கலித்தொகை
குறிஞ்.	...	குறிஞ்சிப்பாட்டு
குறுந்.	...	குறுந்தொகை
சிலம்பு.	...	சிலப்பதிகாரம்
சிறுபாண்.	...	சிறுபாணாற்றுப்படை
சீவக.	...	சீவகசிந்தாமணி
திருமுரு.	...	திருமுருகாற்றுப்படை
திருவா. திருவெம்.	...	திருவாசகம். திருவெம்பாவை
நச்சர்.	...	நச்சினார்க்கினியர்
நற்.	...	நற்றிணை
நாலா. திவ்விய.	...	நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
நெடுநல்.	...	நெடுநல்வாடை
பதிற்று.	...	பதிற்றுப்பத்து
பட்டினப்.	...	பட்டினப்பாலை
பரி.	...	பரிபாடல்
புறம்.	...	புறநானூறு
பெருங்.	...	பெருங்கதை
பெரும்பாண்.	...	பெரும்பாணாற்றுப்படை
பொருநர்.	...	பொருநராற்றுப்படை
மணிமே.	...	மணிமேகலை
மதுரைக்.	...	மதுரைக்காஞ்சி
மலைபடு.	...	மலைபடுகடாம்
மீனாட்சி. பிள்ளை.	...	மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்
முக்கூடற்.	...	முக்கூடற்பள்ளு
முல்லை.	...	முல்லைப்பாட்டு

இயல் 1

இயல் - 1

ஒப்பனைக்கு முன்

ஒப்பனை செய்துகொள்ளுமுன் உடல்தூய்மை செய்துகொள்வது இன்றியமையாததாகும்.

உடல்தூய்மை நீரால் அமையும் என்பதை அனைவரும் அறிவோம்.

உடலின் தூய்மை என்பது தோலின் தூய்மையே. தோல் நோயின்றி நலமுடன் இருக்க நல்ல நீரில், தூய நீரில் நீராட வேண்டும்.

சிலப்பதிகாரம் மாதவி நீராடிய விதம்குறித்துக் கூறியுள்ளது.

அவள் பத்துத்துவர், ஐந்துவிரை, முப்பத்திரண்டுவகை ஓமாலிகை என்னும் பொருள்களைத் தூய நீரில் ஊற வைத்து, அந்நீரைக் காய்ச்சிப் பின்னர் உடலையும் கூந்தலையும் கழுவித் தூய்மை செய்துகொண்டாள்[1].

மகளிர் நீராடியதைப் பெருங்கதையும் விளக்கமாக விவரிக்கின்றது.

பெண்கள் மணம் கூட்டிய நெய்யையும் எண்ணெயையும் கூந்தலில் தேய்த்து முழுகினர்[2].

வெட்டிவேர், தகரம் என்ற மணப்பொருள்களுடன் சந்தனம், அகில், கருப்பூரம், கத்தூரி, குங்குமம் என்னும் ஐவகை மணப்பொருள்களையும் தேய்த்துக் கொண்டனர்[3].

மணப்பொருள்கள் கூட்டும் தொழில் திறமுடைய 'வாதிகரால்' செப்பம் செய்து, உறுப்புகளில் பூசுதற்பொருட்டுச் சீர்செய்து நிறுத்துச் சரக்குகளை அமைத்து இயற்றப்பட்டதும் ஒருநாள் பூசிய விடத்தும் ஓராண்டு விடாது மணம் கமழ்வதுமான வாசவெண்ணெயை உடலில் பூசிக்கொண்டனர்[4]. பின்னர் சாலிலிட்டுப் பத்துத்துவர் ஊறவைத்த மணநீரில் குளித்தனர்[5].

குளிக்கும்போது தலையிலுள்ள நெய்ப்பசையை நீக்க அரைப்பு என்னும் பொருளைப் பயன்படுத்தினர்.

அரைப்புப் பொடி நெய்ப்பசையை நீக்கும் தன்மையது. ஊஞ்சை என்னும் ஒருவகை மரத்தின் இலைகளை உலரவைத்து இடித்துப் பொடியாக்கியது அரைப்பு எனப்பட்டது [6]

இதைத் தலையிலிட்டுத் தேய்க்கும்போது வெண்மையான நுரை தோன்றும். எனவே, இதனை 'நுரைத்தலையுடைய அரைப்பு'[7] என்றார் பெருங்கதை ஆசிரியர்.

ஓடும் நீரில் ஆடும் இன்பம்

தமிழகத்தின் ஆறுகளில் புதுப்புனல் புரண்டு வரும்போது அதிற் சென்று நீராடல் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்ட ஒரு விழாவாகும். அது புதுப்புனல் விழா எனப்பட்டது.

இதனைப் பரிபாடல் என்னும் சங்கநூல் திறம்பட இயம்புகிறது.

வையையில் வெள்ளம் வந்தது. அதைப் பின்வருமாறு வருணித்துள்ளார் கரும்பிள்ளைப்பூதனார்.

''மலையில் மாலையில் பெய்த பெருமழையால், காலையில் வையையானது வெள்ளத்துடன் கடலொடு கலக்கும்பொருட்டுப் பல மலர்களாகிய போர்வையையும் பருமணலையும் மேலே மூடிக் கொண்டு போந்தது.

அங்ஙனம் போந்த புனலில் ஆடும்பொருட்டு யாவரும் புறப் படலானார்கள்.

மகளிர் மேகலையை இறுகப் புனைந்தனர். வண்ணநீரை வீசும் கருவிகளையும் பனிநீர் கலந்த சந்தனத்தையும் எடுத்துக் கொண்டு குதிரைமீதும், பிடிமீதும், எருது பூண்ட வண்டியின் மீதும் கோவேறு கழுதையின்மீதும், குதிரை வண்டியின்மீதும், சிவிகையின்மீதும் ஏறினர்.

மலராத முகையைப் போன்ற பருவத்தினரும், புதுமலர் மலர்ந்தது போன்ற பருவத்தினரும், இளைய மாதரும்,

இவர்களுடைய தோழியரும், ஏவல் மகளிரும் மெல்ல நடந்து சென்று ஆற்றின் கரையை அடைந்தனர்.

Oriental Manuscript

நீர் விளையாட்டினால் இளைத்த மகளிரெல்லாம் புனலையை விட்டுக் கரையேறினர்.

அகிற்புகையால் உடம்பின் ஈரத்தைப் புலர்த்தி மார்பிலே கலவைக் குழம்பைப் பூசினர். அதன் மணம் திசையெல்லாம் கமழ்ந்தது.

சிலர் தம் கூந்தலில் வெள்ளையாடையைச் சுற்றி ஈரம்புலர முறுக்கினர்.

சிலர் குங்குமச்சேறு, அகிற்சாந்து, பச்சைக் கற்பூரம் ஆகிய இவற்றைச் சாந்தம்மியிலிட்டு நெருப்பைப் போன்ற நிறத்தை யடையும்படி குழவியினால் அரைத்தனர்...

சிலர் நீலமணி போன்ற கூந்தலில் பத்துத்துவர்களையும் தேய்த்துக்கொண்டு நீராடினர். சிலர் எண்ணெய் நீங்கும்படி அரைப்பினைத் தேய்த்துக் கொண்டனர்.

இங்ஙனம் அமைந்த மகளிருடைய முகம் நீர்விளையாட்டினால் ஒளிபெற்றது''[4].

இது ஒப்பனைக்கு முன் நீர்விளையாடலை மேற்கொண்டதை விவரிக்கிறது.

உடல் வனப்புக்குக் களிமண் பயன்பட்டது

பண்டைக் காலத்தில் தோல் நலத்திற்கும் வனப்பிற்கும் களி மண்ணை உடல் முழுதும் பூசியும் கூந்தலுக்குத் தேய்த்தும் சில நிமிடங்கள் கழித்துத் தூயநீரில் கழுவிக் குளித்தனர்.

இதனை இக்கால விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்கின்றனர்.

இயற்கை மருத்துவத்தில் களிமண் கைகண்ட மருந்து என்பது பலர் கருத்து.

கூந்தலுக்குக் களிமண் இட்டுத் தேய்த்துக் குளித்ததைக் குறுந்தொகைப் பாடல் ஒன்று அறிவிக்கின்றது.

'கூழைக் கெருமண் கொணர்கம் சேறும்'
என்னும் அடியைக் காண்க[9].

''கூந்தலிலுள்ள எண்ணெய்ப் பசை, சிக்கு முதலியன போகும்பொருட்டுக் களிமண்ணைத் தேய்த்துக் கொண்டு மகளிர் நீராடுதல் வழக்கு; இதனைச் சிற்றூர்களில் இன்றும் காணலாம்''[10] என உ. வே. சா. அவர்களும் விளக்கம் தந்துள்ளமையைக் காண்க.

அடிக்குறிப்புகள்

1. சிலம்பு. 6: 76-79.
2. பெருங்கதை. 4:14: 159-160.
3. ,, 4: 16: 6-7.
4. ,, 2:5: 97-101.
5. ,, 1:57:89.
6. செல்லப்பன், சிலம்பொலி. பெருங்கதை ஆராய்ச்சி. பக் 276
7. பெருங் 1:41:131.
8. பரிபாடல். 10:91
9. குறுந். 113-5.
10. குறுந். மூலமும் உரையும், உ.வே.சா., பக். 231.

இயல் 2

இயல் - 2

ஒப்பனையில் ஆடைகள்

அற்றம் மறைத்தற்காக மட்டுமன்றி அழகுக்காகவும் ஆடைகளை அணிந்தவர் தமிழ் மக்கள்.

தமிழகத்தின் தலைசிறந்த தொழில்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தது ஆடை நெய்யுந் தொழில். அக்காலத்திலேயே பட்டினாலும், பருத்தியினாலும், நாரினாலும், எலிமயிர் முதலியவற்றாலும் ஆடைகள் நெய்து வந்தனர். பழங்காலத்தில் இவற்றைக்கொண்டு ஆடை நெய்ததைச் சிலப்பதிகாரம் செப்புகின்றது.

''பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்''[1] என்னும் சிலப்பதிகார அடியும்; ''நூலினும் உலண்டினும் நாரினும் இயன்ற''[2] என்கிற பெருங்கதைஅடியும் மேற்கூறிய கருத்துக்களை வலியுறுத்துகின்றன.

ஆதிகால மக்கள் தழை உடையையும்,[2அ] மர வுரியையும் தோலாடைகளையும் உடுத்தி வாழ்ந்தனர். குறவரும் மறவரும் இத்தகைய உடைகளைப்பயன்படுத்தினர். ஆனால்,நாடுநகரங்களில் வாழ்ந்தவர்கள் பருத்தி, பட்டு, கம்பள ஆடைகளை உடுத்தினர்.

உடையை உடுக்கை, ஆடை, கலிங்கம், காழகம், அறுவை, மடி, துகில், கூறை முதலிய பெயர்களால் குறித்தனர்.

ஆடை நெய்யும் தொழிலையும் உடைசெய்யும் தொழிலையும் மகளிர் மேற்கொண்டிருந்தனர். பருத்தியிலிருந்து நுண்ணிய நூல் நூற்கும் தொழிலையும் மகளிர் செய்தனர். அன்னாரைப் 'பருத்திப் பெண்டிர்' என வழங்கினர். கணவனை இழந்த மகளிர் இத்தொழிலைச் செய்தனர் என்பதை,

''ஆளில் பெண்டிர் தாளின் செய்த
நுணங்குநுண் பனுவல்''[3]

என்னும் அடிகளால் அறிகிறோம்.

இப்பெண்டிரைப் 'பருத்திப் பெண்டு'[4] என்றனர் என்பது புறநானூற்றாலும் தெரிய வருகிறது.

ஆடை வகைகள்

பண்டைத் தமிழர் பல்வகையான ஆடைகளை அணிந்தனர். அவை பொன்னாடை, பட்டாடை, பூவாடை, மேலாடை, படம், மெய்ப்பை, வட்டுடை, தாளிதம், ஈரணி, கச்சை எனப்பலவகையின.

பொன்னாடை

பட்டுநூலில் பொன்னிழைகளைச் சேர்த்து நெய்த ஆடைகள் பொன்னாடை எனப்பட்டன. பொன்னிழைகளையே சரிகை என்பர் இக்காலத்தில். இது திருமாலைப் பாராட்டிய பரிபாடலின் கடவுள் வாழ்த்துப் பாடலில் கூறப்பட்டுள்ளது.[5]

வேறொரு பாடலில் நீலமலையின்மிசைப் படர்ந்த இருளைக் கெடுக்கும் ஞாயிற்றுமண்டிலத்தின் ஒளிபோன்ற அழகுடைய பொன்னாடையினைப் புனைந்த திருமால் என வருணிக்கப்பட்டுள்ளது.[6] இதில் சொல்லப்பட்டது 'பீதாம்பரம்' என்னும் விலையுயர்ந்த பொன்னாடையாகும்.

பட்டாடை

பட்டு நூலைக் கொண்டு நெய்யப்பட்ட ஆடைகளே பட்டாடை என்பவை.

பட்டுடைகளில் கொட்டைக்கரை போன்றவை அழகுக்காக அமைக்கப் பட்டன.[7]

'அரத்தம் பூம்பட்டு' என்பதைச் சிலம்பு குறிப்பிடுகின்றது.[8] இரத்த நிறம் பொருந்தியதும் பூ வேலைப்பாடு மிக்கதுமான பட்டு என்பதே இதன் பொருள். இதனைச் செம்பட்டு என்றும் கூறினர். இச்செம்பட்டு கார்காலத்தில் உடுத்திக் கொள்ளப்பட்டது என்பர் அரும்பதவுரைகாரர்.[9]

'பொற்பூ ஆடை'[10] என்பதைச் சிலம்பு மற்றோர் இடத்தில் கூறுகிறது.

பூவாடை

பலவிதமான பூக்கள் நிறைந்த வேலைப்பாடு மிக்க ஆடைகளைத் தமிழர் நெய்து அணிந்து தம்மை அழகு படுத்திக்கொண்டனர்.

''நீலக்கச்சைப் பூவாராடை''[11] என்பது புறநானூற்றில் வந்துள்ள செய்தி.

''பூவிரி கச்சையைப் புகழ்மிக்க அர்ச்சுனன் அணிந்திருந்தான்''[12] எனச் சிறுபாணாற்றுப்படைமூலம் அறிகிறோம்.

''பூந்துகில் மரீஇய ஏந்து கோட்டல்குல்''[13] என்பது நெடுநல்வாடை தரும் குறிப்பு.

கஞ்சுகம்

இச்சொல் சிலம்பில் முதன் முதலில் அமைந்து பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை தொடர்கின்றது. கஞ்சுகத்தின் விளக்கம், கம்பன் பாக்களில் தெளிவு பெறுகிறது.

"தாழ்ந்து விரிந்த கஞ்சுகத்து மெய்யார்"[14]

"மெய்புகத்துன் நெடுங்கஞ்சுகத் துகிலார்"[15] துன்னல் - தைத்தல், அதுமட்டு மன்று; கழுத்திலிருந்து பாதம்வரை மறைய அணிந்த சட்டையாதலின் 'நெடுங் கஞ்சுகம்' எனவும் சொல்லப் பட்டது.

குப்பாயம்

முதன்முதலில் 'குப்பாயம்' குறித்துப் பெருங்கதைதான் பேசுகிறது. கேரளத்தில் இன்றும் சட்டையைக் குப்பாயம் என்றே சொல்கின்றனர்.

'வரிக் குப்பாயத்து வார் பொற்கச்சையர்'(பெருங் 1:40: 378) வரியமைந்த அதாவது கோடிட்ட சட்டையணிந்தனர்,

திருத்தக்கதேவரும் "குப்பாய மிலேச்சன்" (சீவக. 431) "நுதிமயிர்த் துகிற்குப்பாயம் புகுகெனத் தூக்கினானே" (சீவக.

819-4) என்றனர். இவ்வடிக்கு உரை எழுதிய உ.வே.சா ''எலியினது கூர்மையையுடைய மயிராற் செய்த ஆடையால் ஆகிய சட்டை.எலிமயிராற்செய்த ஆடை மிகுந்த வெப்பமுடையதென்பதும் குளிர்நீக்குவதென்பதும் அதனுள் காற்றுப்புகாதென்பதும் மிகவும் மென்மையுடையதென்பதும் பனிக்காலத்தில் அதனை அணிவதுண்டென்பதும் அதுகிடைத்தற்கரியதென்பதும் பின்வரும் பாடல்களால் தெரிகின்றன'' (சீவக.1874, 2471, 2680, 2686) என்பர்.

படம்

ஆடவர் அணிந்துகொள்ளும் சட்டையைச் சங்ககாலத்தில் 'படம்' என்றனர்.

தொண்டை நாட்டுப் பெருவழிகளைக் காவல் காத்த வீரர் 'படம்' அணிந்திருந்தனர். இச்சொல்லுக்கு உரைஎழுதிய நச்சினார்க்கினியர் 'படம் புக்கு' என்பதற்குச் சட்டையிட்டு எனப் பொருள் கூறியுள்ளார்.[16]

''படம்புகும் மிலேச்சர்''[17] என்பது முல்லைப் பாட்டு ஆட்சி. மிலேச்சர் அயல் நாட்டவர். அவருள் சிலர் பாசறையில் அரசனது இருக்கையைக் காவல் காத்தனர். இவர்களும் 'படம்' அதாவது சட்டை அணிந்து கொண்டனர்.

மெய்ப்பை

மெய்யை மறைக்கும் உடைக்கு 'மெய்ப்பை' என்னும் பெயரும் இருந்திருக்கிறது.

''மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து''[18] என்னும் அடி, முல்லைப் பாட்டு அடி. மெய்ப்பை என்பதற்கும் சட்டை என்றே நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார்.

சிலப்பதிகாரமும் "மெய்ப்பைபுக்கு" என்றே கூறுகிறது[19] எனவே படம், மெய்ப்பை இரண்டும் ஒரே பொருளைக் குறிக்கும் வெவ்வேறு சொற்களே.

வட்டுடை

''முழந்தாளளவாக வீரர் உடுக்கும் உடை விசேடம்''[20] என்பர் நச்சினார்க்கினியர். எனவே வீரர்கள் அணிந்து கொள்ளும் உடை

வட்டுடை எனப்பட்டது. ''வட்டுடைமருங்குல் சேர்த்தி''[21] என்னும் மற்றுமொரு பாடல் மூலமும் இது வீரர்களுக்குரிய உடை என்பதை அறியலாம்.

வடகம்

வடகம் என்பது போர்வை, மேலாடை என்னும் பொருள்களை யுடைய சொல்.

உடை விசேடத்தில் ஒன்று. இதனை நச்சினார்க்கினியர் 'அத்தவாளம்' என்றனர்.[22] 'மேற்போர்வை' என்றனர் உ வே.சாமி நாதையர்.

''படாஅத் தன்ன படிவத்தாகிய
வடகப் போர்வை வனப்பொடு திருத்தி''[23] என்பது பெருங் கதை தரும் செய்தி. இவ்வடிகளில் படாஅத்தன்ன படிவத்தது' என்னும் சொல் போர்வைபோல் மேலே உடுத்திக் கொள்ளப் பட்ட ஒன்றைக் குறிக்கிறது எனக் கருதலாம். மேலும்,

''உடாஅ போராஅ வாகுத லறிந்தும்

படாஅ மஞ்ஞைக் கீத்த எம்கோ'' (புறம்.141)

என்பதில் உடுத்திக்கொள்ளுதலும் போர்த்திக்கொள்ளுதலும் வெவ்வேறாகச் சொல்லப்பட்டிருத்தலைக் காண்கிறோம். எனவே வடமாநிலங்களில் குளிர்காலத்தில் ஆடை அணிந்த பின்னர் 'ஷால்' என்பதைக் கொண்டு போர்த்திக் கொள்ளுதல் இக்காலத்தில் காணப்படுவதைப் போல் பண்டு வடகப் போர்வையை அணிந்து கொண்டனர் எனக்கருத இடமுண்டு,

தாளிதம்

பரிபாடலில் 'தாளிதம் நொய்ந்நூல் சரணத்தர்' என்னும் ஓர் அடி உள்ளது. இதற்கு உரை எழுதிய பெருமழைப் புலவர் ''இத் தொடருக்கு நன்கு பொருள் விளங்கவில்லை. தாளிதம் என்னும் பெயரை உடையதும் நுண்ணிய நூலானாயதும் காலிலே மாட்டி அணிந்து கொள்வதுமாகிய ஒருவகை உள்ளாடை என்று ஊகிக் கலாம்; இவ்வாடை மகளிர் நீராட்டு ஆடையாக இருக்கலாம்.

(கால்சட்டை) தாளிதமாகிய நொய்ந்-நூலாடையிட்ட சரணத்தராய் என்க. சரணத்தர் காலையுடையோர். வேறுபொருள் தோன்றினும் கொள்க[24]'' என்று எழுதியுள்ளார்.

ஈரணி

நீராடுங் காலத்துப் பெண்டிர் 'ஈரணி' என்பதை அணிந்து கொண்டனர். பின்வரும் இலக்கியச் சான்றுகள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

''வதுவை ஈரணிப் பொலிந்த நம்மொடு
புதுவது வந்த காவிரி... ஆடியோரே[25]

இளந்துணை மகளிரொடு ஈரணிக் கலைஇ[26]
ஈரணி அணியின் இகல்மிக நவின்று
தனி புனலாடும் தகைமிகு போர்க்கண்[27]

விரும்பிய ஈரணி மெய்யீரம் தீர[28]''

இவற்றால் ஈரணி என்பது இக்காலத்தே சொல்லப்படும் Bathing Dress போன்ற ஒருவகை ஆடை என்பதை அறியலாம்.

புட்டகம்

புட்டகம்-Bathing Dress[28 அ]

புட்டகம் என்னும் சொல் புடவையைக் குறிப்பதாகும். இது மகளிர் ஆடை.

''புட்டகம் பொருந்துவ புனைகு வோரும்''[29] என்பது பரிபாடல் அடி. 'நீராடற்குரிய புடவைகளை அலங்கரித்து உடுப்போரும்' என்பது பரிமேலழகர் உரை. ஆகவே புட்டகம் என்பது புடவை என்னும் பொருளுடையது. பிறஇலக்கியங்களில் இதனைப்பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை.

வட்டம்

"வாலிழை வட்டம்" (பெருங்.1: 42: 208). வெண்மையான இழையால் நெய்யப்பட்ட ஆடை என்னும் செய்தி மட்டுமே தெரிய

வருகிறது. இவ்வுடைபற்றிய வேறு செய்திகள் யாண்டும் காணப் படவில்லை

மேலாடை

பண்டைக்காலத் தமிழ்ப் பெண்கள் மார்பகங்களை மறைக்க வில்லை என்பது சிலர் கருத்து.

''பெண்டிர் மார்பில் ஆடையற்றே இருந்தனர் என்று கருதத் தகும் முறையில் சிற்பங்கள் காண்கின்றன. தைத்த ஆடைகளும் சட்டைகளும் குல்லாய்களும் சில சமயங்களில் அணியப்பட்டு வந்தன... பெண்டிர் இடுப்பிலிருந்து கால் வரையில் தொங்கும்படி புடவை உடுத்தினர். பெரும்பாலும் அக்காலப் பெண்டிர், இடுப் பிற்கு மேல் எவ்வித ஆடையையும் அணிந்ததாகச் சிற்பங்களைக் கொண்டு கூற இயலவில்லை''[30].

கலைக்களஞ்சியக் கட்டுரை, 'அக்காலப் பெண்டிர் இடுப்பிற்கு மேல் எவ்வித ஆடையையும் அணியவில்லை' என்கிறது. 'இம்முடிவு சிற்பங்களைக்கொண்டு ஆராய்ந்து கண்ட முடிவு' என்றும் கூறுகிறது

சிற்பங்களின் நோக்கம் வேறு; கருத்துப் படிவம் (Concept) வேறு. கவிஞன் எங்ஙனம் பெண்மையின் உறுப்பு நலன்களையும் இளமை அழகுகளையும் சொல்லில் வடிப்பதைக் காவிய மரபாகக் கொண்டிருக்கின்றானோ அதைப்போலச் சிற்பி கல்லில் வடிப்பதைக் கலைமரபாகக் கொண்டிருப்பவன். இதனால்தான் சிற்பங்கள் மேலாடையின்றிச் செதுக்கப்பட்டன. இக்கருத்தை உணராது அதைத்தமிழ் நாகரிகத்தின் அளவுகோலாகக் கொண்டு, அக்காலப் பெண்டிர் அனைவரும் மேலாடையின்றி இருந்தனர் என்னும் முடிவுக்கு வருவது பொருத்தமில்லை. மேலாடையைக் குறிக்கும் சொற்களாக உத்தராசங்கம், உத்தரியம், ஒலியல், தானை, துகில் மீக்கோள், வடகம் என்பன காணப்படுகின்றன.

இவற்றில் உத்தரியம், ஒலியல், தானை, துகில் என்பன மேலாடையைக் குறிக்கின்ற சங்க இலக்கியச்சொற்கள்.

''உத்தி ஒருகாழ், நூல் உத்தரியத்திண் பிடி'' (கலி. 96)

''உடையும் ஒலியலும் செய்யை'' பரி. 19.97]

''புடைவீழ் அம்துகில் இடவயின் தழீஇ'' (நெடு. 181)

''மீப்பால் வெண்டுகில் போர்க்குநர், பூப்பால் வெண்டுகில் சூழ்ப்பக் குழல் முறுக்குநர்'' (பரி. 10: 79 - 80)

புறநானூற்றில் தெளிவுபட நக்கீரர் ''உடுப்பவை இரண்டே'' (புறம் . 189)

எனக்கூறித் தமிழர் மேலாடை உடுத்தினர் என்பதைத் தெரிவிக் கிறார். எனவே ஆண்களே மேலாடை அணிந்தனர் என்னும்போது பெண்கள் அணியவில்லை என எங்ஙனம் கூறமுடியும்?

வள்ளுவர் காலத்தில்,

''......... மாதர்
படாஅ முலைமேல் துகில்'' (குறள். 1087)

எனக்கூறி மகளிர் மார்பாடை அணிந்தமையைத் திட்டவட்டமாகச் சொல்கிறார். இதற்கு உரை எழுதிய பரிமேலழகரும், ''துகிலான் மறைத்தல் நாணுடை மகளிர்க் கியல்பாகலின், அத்துகிலூடே அவற்றின் வெம்மையும் பெருமையுங்கண்டு இத்துணையாற்ற லுடையன இனி யெஞ்ஞான்றுஞ் சாய்வில வெனக்கருதிப், 'படாஅ முலை' யென்றான்; உவமை,சிறிது மறையாவழி உவை கொல்லு மென்பது தோன்ற நின்றது'' என்பர்.

அகநானூற்றில் 86,136ஆகிய இரு பாடல்களில் திருமணம் நிகழ்ந்தபின் முதலிரவுக் காட்சிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

''கொடும் புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர்புறம் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப''
(அகம்.86:21-23)

'முதுகினை வளைத்துக் கோடிப்புடவைக்குள் ஒடுங்கிக் கிடந்த இடத்தினைச்சார்ந்து முயங்கும் விருப்பத்துடன் மூடியிருந்த ஆடையினைத்திறக்க என்பர் நல்லாவூர் கிழார். இதனால் உடுத் திய புடவை மேலாடையாகி முகத்தை மூடிக் கொள்ளவும் பயன் பட்டது தெரிய வருகிறது.

அடுத்து 136ஆம் அகப்பாட்டில் இன்னும் தெளிவாக விற்றூற்று மூதெயினனார்.

''முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇப்
பெரும்புழுக்கு உற்றநின் பிறைநுதல் பொறிவியர்
உறுவளி ஆற்றச் சிறுவரை திறவென
ஆர்வை நெஞ்சமொடு போர்வை வவ்வலின்
உறைகழிவாளின் உருவு பெயர்ந்து இமைப்ப
மறை திறன் அறியாளாகி ஒய்யென
நாணினள் இறைஞ்சி யோளே பேணி
இரும்பல் கூந்தல் இருள்மறை ஒளித்தே''

எனப் பாடியுள்ளமையைக் காண்கிறோம்.

இவ்வடிகள் ''மணப்பெண் தன் உடல் முழுவதையும் முருங்காக் கலிங்கம்கொண்டு போர்த்திக் கொண்டிருந்தாள். இதனால் பெரும் புழுக்கத்திற்குள்ளாகி, பிறைநுதலில் வியர்வை அரும்பி இருந்தது. அதை மாற்றக் காற்றுவாங்கச் சிறிது நேரம் திறவாய் எனச் சாக்குச் சொல்லி, போர்த்திய ஆடையைக் கவரவும், உறைகழித்த வாளைப் போல் அவள் இளமை கொழிக்கும் பெண் உறுப்புகள் வெளிப்படவும் அவற்றை மறைத்துக்கொள்ள அறியாளாகி நாணத்தால் தவித்துப் பின் சமயோசித அறிவால் இருண்டு ,சுருண்டு, நீண்டு இருக்கின்ற தன் கூந்தலை யவிழ்த்து விரைவாக நாணி விருப்புற்று வணங்கினாள்'' என்பர் தமிழ்ப் பண்பாடறிந்த பழம்பெரும் புலவர் விற்றூற்று மூதெயினனார். ஆனால், இக்கால அறிஞர் சிலர் தமிழ்ப் பெண்ணுக்கு மேலாடை இல்லை என்கின்றனர்.

டாக்டர். இராசமாணிக்கனார் தம் பத்துப்பாட்டு ஆராய்ச்சியில்(பக்கம்150) 'அக்காலப் பெண்டிர் இடுப்பிற்கு மேல் எவ்வித ஆடையும்அணிந்ததாகச் சிற்பங்களைக்கொண்டு கூறமுடியவில்லை என்று எழுதியுள்ளார்.

'சிற்பங்களைக் கொண்டு கூறமுடியவில்லை' என்றுதான் கூறியுள்ளார். 'இலக்கியங்களைக்கொண்டு கூறமுடியவில்லை' எனக் கூறவில்லை.

எனவே, இலக்கியச் சான்றுகளைக் கொண்டு ஆராய்ந்தால் அக்காலப் பெண்கள் மேலாடை அணிந்திருந்தனர் என்ற முடிவுக்கு வரமுடிகிறது. பின்வரும் சான்றுகளும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

பெருங்கதையில் கொங்குவேளிரும் மேலாடைக்கு உத்தரியம், மீக்கோள், வடகம் என்னும் சொற்களைப் பயன்படுத்தியுள்ளதைக் காண்கிறோம்

''யாணர்ப் பூந்துகில் அணிந்த அல்குல்
இலைப்பூண் கவைஇ முலைப்புறம் புதைஇப்
பொற்கொடி இழையொடு நற்குடன் தாழ
ஏகவுத் தரியம் இடைச்சுவல் வகுத்த''
(பெருங். 2:4:117)

துகில் அணியப்பட்ட இடையினையும் முலையினையும் அகத்திட்டு மறைத்துப் பொன்னாலியன்ற அணிகலன்களுடன் இலைத் தொழிலையுடைய அணிகலன்களையும், இடையினையும் கழுத்தினையும் வருத்தும் மேலாடையினையும் வட்டாடையின் மேல் அணியப்பட்டுப் பொலிவுற்ற காஞ்சியுடன் பட்டாடையினைச் சுமந்திளைத்த அல்குலினையும் உடைய வாசவதத்தை என்பதே மேற்கண்ட அடிகளின் பொருள்.

இடை, பிடர் இரண்டையும் வருத்தியது என்பதால் இடையிலிருந்த ஆடை மார்பின் குறுக்கே எடுத்துச் செல்லப்பட்டுக் கழுத்தில் கிடந்த தென்பது புலனாகும், (சு.செல்லப்பன், பெருங்கதை ஆராய்ச்சி, பக், 270)

மற்றோரிடத்தில் கொங்குவேளிரே,

''கடாஅ யானைக் கண்ணகம் மறைத்த, படாஅத்தன்ன படிவத்தாகிய, வடகப் போர்வை வனப்பொடு திருத்தி'' (பெருங்.1: 45: 8-10) என மேலாடை கொண்டு மேற்பகுதிகளை மூடியதைக் குறித்துள்ளார்

பல்லவர் காலத்திய நந்திக்கலம்பகமும் ''உத்தரியப் பட்டாட ஆடாமோ ஊசல்'' (நந்தி.29) எனப்பாடிப் பட்டாலாகிய உத்தரியத்தை (மேலாடை) அணிந்திருந்ததைக் குறிப்பிடுகிறது.

திருத்தக்க தேவரும் பெண்கள் மேலாடை அணிந்திருந்தனர் என்பதை 'இட்ட உத்தரியம் மெல்லென்றிடைச் சுவல்வருத்த' (சீவக.472); 'வந்து பணிவார்ந்து முலைக்கலிங்கமது நனைப்ப' (சீவக,1785) என்றும் கூறியிருப்பதால் அறியலாம்.

திருத்தக்க தேவருக்குப் பின்னர் தோன்றிய தோலா மொழித் தேவர், ''வம்புசேர் முலை வாரிவளாகமே''(சூளா 345)''வம்பழுகு கொண்ட மணிமென்முலை'' ''(சூளா, 2028) என வருணித்துள் ளமை, பெண்டிர் மேற்பகுதிகளை மறைத்ததையே காட்டுகின்றன.

பிற்காலச் சோழர் காலத்தவரான கம்பரும் பெண்டிர்மேலாடை அணிந்திருந்ததைப் பல பாடல்களில் பாடியுள்ளார்.

முலைகளை யமனாகவும் அவற்றை உத்தராசங்கம் என்னும் மேலாடையிட்டு மறைத்துவைத்ததாகவும் ''உத்தரா சங்கம் இட்டு ஒளிக்கும் கூற்றமே'' (கம்பர். 832) எனப் பாடியுள்ளார்.

''முலைமிசைக் கச்சொடு கலையும் மூட்டு அற''(1070) என்பதும்; ''பொங்குவெம் முலைகள், பூகக் கழுத்தொடு மறையப் போர்த்த, நங்கையைக் கண்டவள்ளல் நயனங்கள் பனிப்ப நின்றான்'' (கம்ப 4425).

அரக்கியாகிய இலங்கா தேவியும் அழகிய பொன்னாலான, 'உத்தரியம்'அணிந்திருந்தாள் என்பதை "அஞ்சுவணத்தின் உத்தரியத்தாள்" (சுந்.174) எனக்கூறியுள்ளார்.

இனிக் கச்சு, வம்பு, வார் என்னும் சொற்கள் இலக்கியத்தில் பயின்றுவருவதைக் காண்கிறோம். அவற்றின் பொருளையும் ஆட்சியையும் ஆராய்ந்தால் மகளிர் தம் மார்பகங்களை ஒருவகை உடையால் மறைத்துக் கொண்டமையை அறியலாம்.

கச்சு—முலைக்கச்சு; A Kind of corset worn by Indian women in ancient times (லெக்சிகன்)

வம்பு—முலைக்கச்சு; Stays for women's breast; upper garmen மேற்போர்வை.

வம்பு-முலைக்கச்சு; Bodice (தமிழ்லெக்சிகன்)

செல்வி பகவதியின் 'தமிழர் ஆடைகள்' என்னும் ஆய்வு நூலின் புள்ளிவிவரங்களின்படி

கச்சு என்பது

நற்.	— 1	சீவக.	—15
ஐங்.	— 1	நாலாயி.	— 2
அகம்.	— 2	கம்ப.	— 8
பெரும்.	— 1	சூளா.	— 4
முல்லைப்.	— 1	கல்.	— 1
மதுரைக்.	— 1	பெரிய.	— 1
சிலம்பு.	— 1		
பெரும்.	—13		

ஆக 52 இடங்களில்

பயின்று வந்துள்ளது.

வம்பு என்பது

மதுரைக்.— 1
நெடுநல்.— 1
பெருங். — 2
சீவக. — 4
கம்ப. — 3
சூளா. — 3
மூவரு. — 1
பெரிய. — 2

ஆக 17 இடங்களில் பயின்று வந்துள்ளது.

வார் என்பது

அகம். 1
சீவக.13
நந்திக்.3
கம்ப. 13
சூளா. 10
மூவரு. 1

தஞ்சை. 2
பெரிய. 7

ஆக 50 இடங்களில் பயின்று வந்துள்ளது.

மேற்கூறிய சான்றுகளால் 'மேலாடை' அணியும் பழக்கம் பெரும் பான்மையான பெண்களால் மேற்கொள்ளப்பட்டது எனலாம்.

சேலை அணிந்த முறை

சங்க காலத்திற்குப் பின்னர் தோன்றிய பெருங்கதையில் பெண்கள் சேலை அணிந்த முறையைப் பற்றிய குறிப்பு காணப் படுகிறது.

பெண்கள் மார்பகங்களை மறைக்கக் கச்சு அணிந்ததுடன் அரையில் கட்டிய சேலையின் எஞ்சிய பகுதியை மேலே கழுத்தைச் சாரத் தோளில் இட்டுக் கொண்டனர். இதனை 'உத்தரியம், என்றனர்.

''ஏக உத்தரியம் இடைச்சுவல் வருத்த''[35]

என்கிறது பெருங்கதை. இவை மட்டுமன்றி "துகில் முதலாகப் பணிப் பொத்தி'' ஈறாக முப்பத்தாறு வகையான ஆடைகளைப் பற்றிச் சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டி யுள்ளார்.[35]

அவை பின்வருவன:

கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக் கம்பி, குருதிக்கரியல், பேடகம், பரியட்டகாசு, வேதங்கம், புங் கர்க் காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல் யாப்பு, திருக்கு, தேவாங்கு. பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சு, வெண்பொத்தி, செம் பொத்தி, பணிப்பொத்தி என்பன.

பல்வகையான ஆடைகளை உடுத்தி ஒப்பனை செய்துகொண்டதுடன் மிக மிக மென்மையான ஆடைகளையும் அக்காலத்தில் நெய்தனர்.

ஆடைகளுக்குப் பாம்பின் தோல், மூங்கிலின் வெண்ணிற மெல்லிய தோல், புகை, ஆவி, பால்நுரை முதலியன உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன.

பாம்பின் தோல்: ''இழைபோனவழி இது என்று குறித்துப் பார்க்க இயலாத நுண்மையை உடைய தாய்ப் பூத்தொழில் முற்றுப்பெற்ற தன்மையால் பாம்பின் தோலை ஒத்த துகில்''.[39]

மூங்கில் தோல் ''மூங்கில் ஆடையை உரித்தாற் போன்ற மாசில்லாத உடை''.[37]

புகை: ''புகையை விரித்தாற் போன்ற உயர்ந்த உடை''.[38]

ஆவி: ''ஆவியைப் போன்ற பூந்துகில்''.[39]

பால் நுரை: ''பாலாவியை ஒத்த விளங்கும் நூலால் செய்ததுகில்''[40] என்பவற்றைக் காண்க.

பல்வகை ஆடைகளைத் தமிழ் மக்கள் அணிந்து ஒப்பனை செய்துகொண்டதுடன் பல வண்ணங்களையும் அறிந்திருந்தனர். ஆடைகளுக்கு வண்ணம் தோய்த்தல் அவர்கள் அறியாததன்று.

எனவே வெண்மை, கருமை, பொன்மை, பசுமை, செம்மை, நீலம் முதலிய வண்ணங்களைப் பற்றிய குறிப்புகள் இலக்கிய வாயிலாக நமக்குக் கிடைக்கின்றன.

வெண்மை

இயல்பாகவே வெண்மையை விரும்புதல் தமிழர் வழி வழி வந்த பழக்கம். பஞ்சியின் இயல்பான வெண்மை நிறம் தூய்மைக்கு அடையாளமாகக் கருதப்பட்டது. எனவே, பெரும்பான்மையினர் வெண்ணிற ஆடையையே உடுத்தினர்.

பாலாவியைப் போன்ற விளங்குகின்ற நூலால் நெய்த ஆடை[41] என்ற குறிப்பும்; "பகன்றை மலர் போன்ற புதிய ஆடையைக் கொடுத்து"[42] என்றதும்; "இதழ் விரிந்த வெண்மையான பகன்றை மலரையொத்த அகன்ற புத்தாடை"[43] என்றதும்; "பெரிய இலைகளையுடைய பகன்றையின் வெண்ணிறப் பூக்களைப் போன்ற ஆடை"[44] என்றதும்; "குளிர்ந்த நீர்த்துறையில் மலர்ந்துள்ள பகன்றைப் பூவால் தொடுத்த அழகிய மாலையை வெளுக்கப்பட்ட வெள்ளாடை போலத் தலையில் சூடிக்கொண்டு"[45] என்றதும் இலக்கியச் சான்றுகளாகும்.

வெண்ணிற ஆடைக்கு அருவிகளையும், அருவிகளுக்கு வெண்ணிற ஆடையையும் உவமைகளாக் கூறிய மரபும் உண்டு. 'விளங்குகின்ற துகில் போன்ற வெண்ணிற அருவி'[46] எனப் பாடியதும்; 'தூய்மையான விரித்த துகிலை ஒப்ப உச்சியினின்றும் பலவாய் இழியும் குளிர்ந்த அருவி'[47] எனப் பாடியதும் வெண்ணிற ஆடைகளைப் பெரிதும் விரும்பி அணிந்தனர் என்பதற்குச் சான்றுகளாகும்.

கருமை

'மதுரையைக் காவல் புரிந்த காவலர் இரவில் பிற நிறங்களைத் தன்னிடத்தே வாங்கிக் கொள்ளும் கரியநிற நீலக் கச்சினை அணிந்திருந்தனர்'[48] என்பதாலும்; 'ஆயர்கள் காயாம்பூங் கண்ணியையும் கருந்துவர் ஆடையையும் அணிந்தனர்'[49] என்பதாலும் கருமை நிறம் தமிழர் அறிந்த நிறம் எனலாம்.

நீலம்

நீலவண்ண ஆடைகள் நெய்யப்பட்ட செய்தியைச் சிறுபாணாற்றுப்படையும்[50] சிலப்பதிகாரமும்[51] செப்புகின்றன. அவை முறையே "பாம்பு ஈன்று தந்த ஒளிவிளங்கும் நீல நிறத்தையுடைய உடையினை ஆலின்கீழிருந்த இறைவனுக்கு நெஞ்சம் பொருந்தக் கொடுத்தவன் ஆய்அண்டிரன்" என்பதும்; "நீலநிறம் விளங்கும் பூத்தொழிலையுடைய நீலச் சாதருடையினை மாதவியணிந்தாள்" என்பதும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

"நீலக்கச்சை பூவாராடை"[52] எனப் புறப்பாடல் புகலுகின்றது.

பொன்மை

திருமாலைப் போற்றிப் பாடிய கடுவன் இளவெயினனார் ''பொன்னிறத்தால் மிக்க ஆடையினை உடையாய்''[53] எனப் பாடிய தால் பொன்மை நிறம் தமிழர் அறிந்த ஒன்று எனக் கூறலாம்.

செம்மை

செம்மை அல்லது செந்நிறம் பலவிடங்களில் கூறப்பட்டுள்ளது. முருகன் குன்றிமணியின் நிறம் போன்ற உடை அணிந்தவன்.[54]

திருப்பரங்குன்றத்துச் சோலையில் முருகனது சிறப்பைப் பாடி விளையாடிய சூரர மகளிர் இந்திர கோபத்தையொத்த இயல்பான சிவப்பாகிய பூத்தொழிலையுடைய துகிலினை உடுத்தியிருந்தனர்.[55]

மதுரைக் காஞ்சி, மதுரைமாநகரத்துச் செல்வர்கள் அணிந் திருந்த செந்நிற ஆடை பற்றிக் கூறுகிறது. கிரணங்கள் ஒளி மழுங்கிய கதிரவனையுடைய செக்கர் வானத்தை ஒத்த சிவந்த, மெல்லிய, கண்களை வெறிகொள்ளும்படி செய்வதுமான பூத் தொழிலையுடைய சேலைகளை உடுத்தியிருந்தனர்.[56] இதில் ஆடவர் அணியும் ஆடையையும் சேலை என்னும் சொல்லால்வழங் கினர் என்பதை நச்சினார்க்கினியர் உரையால் அறிகிறோம்.

''அரத்தம் பூம்பட்டு அரைமிசை உடீஇ'' என்னும் சிலம்பின் அடி, பூத்தொழிலையுடைய எழில்மிகு அரத்தம்பட்டு என்னும் செம் பட்டைப் பற்றிச் சொல்கிறது. ''இச்செம்பட்டானது கார்காலத்தில் உடுத்திக் கொள்ளப்பட்டது'' என்பர் அரும்பதவுரைகாரர்.[57]

எனவே, காலத்தின் வெப்பதட்பங்களுக்கேற்ப ஆடைகளை அணிந்து ஒப்பனை செய்துகொள்ளும் வழக்கமும் தமிழக மக்களுக்கு இருந்திருக்கிறது என அறிகிறோம்.

துவர் நிறம்

துவராடை என்பது காவியூட்டிய ஆடை என்னும் பொருளது. செம்மை நிறத்தையும் இச்சொல் உணர்த்தும். அழகிய துவரூட்டிய ஆடையை இடையன் அணிந்திருந்தான்.[58] சிவந்த துவராடை யினை எயினரும் உடுத்திக் கொண்டனர்.[59]

ஆடைகளுக்கு மணமூட்டுதல்

புத்தாடைகளுக்கும் உவர் மண்ணிட்டு வெளுத்த ஆடைகளுக்கும் அகிற் புகையூட்டி மணம்மிக்கதாகச் செய்தலும் அக்கால வழக்கம். மணம் ஊட்டிய ஆடைகள் மக்கள் மனத்திற்கு மகிழ்ச்சியூட்டும் தன்மை வாய்ந்தன.

பெண்மான் போலும் பார்வையினை உடைய பெண்கள் மெல்லிய நூலால் நெய்த ஆடைகளுக்கு அகிற்புகையை ஊட்டினர்.[60]

ஆடை வகைகளுக்கு நறுமணம் ஊட்டப்பட்டு விற்பனையும் செய்யப்பட்டது என்னும் செய்தியைச் சிலப்பதிகாரம் அறிவிக்கிறது.

> ''நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்
> பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
> நறுமடி செறிந்த அறுவை வீதியும்''[16]

என்பதால் நூலாடை, பட்டாடை, கம்பளி ஆடை முதலிய அனைத்தும் நறுமணம் ஊட்டப்பட்டு விற்கப்பட்டன என்பது தெரிய வருகிறது.

ஆடைகளை வெளுத்தலும் கஞ்சிபோடுதலும்

ஒப்பனைக்குரிய ஆடைகள் மாசு போக நன்கு வெளுக்கப்பட்டன. ஆடைகளை வெளுத்தலைப்பற்றிய செய்தி சங்க நூல்களில் பலவிடங்களில் வந்துள்ளன.

அழுக்கைப் போக்க உவர்மண் பயன்படுத்தப்பட்டது. இத்தொழிலை மேற்கொண்டவர் புலையர், புலத்தியர் எனப்பட்டனர்.

சலவை செய்யப்பட்ட ஆடைகள் "கழுவுறு கலிங்கம்" எனப்பட்டது. இங்ஙனம் கழுவப்பட்ட கலிங்கம் சுருக்கமின்றி இருக்கவும் தொய்வின்றி இருக்கவும் கஞ்சியில் தோய்த்து உலர்த்தும் வழக்கமும் இருந்தது. சலவை செய்யும் காலத்துக் கறைகளை நீக்கும் முறைகளையும் அறிந்திருந்தனர்.

'வண்ணாத்தி வெளுத்த தூய வெண்மையான அறுவை'[62]

'நன்மையையும் அழகையும் உடைய வண்ணாத்தி கஞ்சியிலே தோய்த்து எடுத்து முதல் தப்பலைத் தப்பிவிட்டு நீர்நிலையிலிட்ட பருத்தி ஆடையின் முறுக்கை யொத்த பெரிய இலையையுடைய பகன்றைப்பூ'[63]

'ஆடைகளைத் துவைக்கும் புலத்தி'[64]

'ஆடையின் கறைகளைச் சிதைத்த கூரிய நகத்தினையும் கஞ்சிப்பசை கொண்ட விரலையும் உடைய வண்ணாத்தி நீண்டநேரம் பிசைந்து கஞ்சி ஊட்டிய அழகிய ஆடை'[65]

என்னும் சான்றுகளால் ஆடைகளை வெளுத்து உடுத்த வேண்டு மென்பதில் கருத்துடையவர்களாய் இருந்தனர் அக்கால மக்கள் என்பதை அறியலாம்.

தையல் தொழில்

ஆடைகளைத் தைத்து உடுத்தும் பழக்கமும் இருந்திருக்கிறது. தையற்காரரைத் 'துன்னகாரர்'[66] என்றனர். சட்டை, கச்சு முதலியன தைத்தல், பொய்க்கொண்டை செய்தல் போல்வன அவர்களது தொழில்.[67]

கச்சுகளின் முனைகள் முடிப்புள்ளனவாகச் செய்யப்பட்டன. அம்முனைகளில் முத்துக்களைக் கோத்து அணிசெய்தனர் என நெடு நல்வாடை கூறியுள்ளது.[68]

ஆடைகளைப் பாதுகாத்தல்

ஆடைகள் பாதுகாப்பாகப் போற்றிக் காக்கப்பட்டன, அவற் றைக் காத்தற்குப் பெட்டிகளும் பயன்படுத்தப்பட்டன. அவை 'கலிங்கக் கடகம்'[69] எனவும், 'கலிங்க வட்டி' எனவும் சொல்லப் பட்டன.

அடிக்குறிப்புகள்

1. சிலப்பதிகாரம் 5; 16-17.
2. பெருங்கதை 1:420;21.

2அ. குறுந். 125-3.

3. நற்றிணை 353; 1-2.
4. புறம். 125; 1.
5. பரிபாடல் 1:56.
6. ,, 13:1-2.
7. பொருநராற்றுப்படை 155.
8. சிலப்பதிகாரம் 14:86.
9. ,, ஐயர் பதிப்பு, பக். 356.
10. ,, காதை 11: 50
11. புறம். பாடல் 274:1.
12. சிறுபாணாற்றுப்படை, அடி 239.
13. நெடுநல்வாடை, அடி 145.
14. கம்ப. அண்ணா. பதிப்பு. 880
15. ,, ,, 3179
16. பெரும்பாணாற்றுப்படை, அடி.69; நச்சர் உரை. "அடிபுதை அரணம் எய்தி படம் புக்கு,,.
17. முல்லைப் பாட்டு, அடி 66. "படம்புகு மிலேச்சர்".
18. ,, ,, அடி 60.
19. சிலப்பதிகாரம் 16: 107.

20. சீவகசிந்தாமணி, 468; நச்சினார்க்கினியர் உரை.

21. ,, 767,

22. சீவகசிந்தாமணி, 462. உ.வே.சா பதிப்பு, பக்கம், 235

23. பெருங்கதை 1; 45: 10.

24. பரிபாடல்: பெருமழைப் புலவர் உரை 10: 10.

25. அகநானூறு 166:31-14.

26. ,, 266: 5

27. பரிபாடல் 6: 28-29.

28. ,, 7:61.

28.அ. என். சுப்பிரமணியன்,Pre-Pallavan Tamil Index

29. ,, 12:17.

30. கலைக் களஞ்சியம், தொகுதி-1, பக், 356.

31. முல்லைப் பாட்டு 47.

32. நெடுநல்வாடை 150-151.

33. மா. இராசமாணிக்கனார்,
பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பக் 515.

34. பெருங்கதை 2:4:121.

35. சிலப்பதிகாரம், அடியார்க். உரை
(உ.வே.சா.பதிப்பு), பக், 375

36. பொருநர். 82-83.

37. சிறுபாண். 235-36.

38. புறம். 398:20.

39. சீவக. 67.

40. பெரும்பாண். 469

41. ,, ,,

42. புறம். 390: 15-16.

43. ,, 393: 17-18.

44. குறுந். 330:4.

45. பதிற்றுப். 76:12-13.

46. குறிஞ்சிப். 55.

47. புறம். 154: 11 - 12.

48. மதுரைக்காஞ்சி 638-39.

49. கலித். 108:10.

50. சிறுபாணாற்றுப்படை 96-97.

51. சிலப்பதிகாரம் 6:88.

52. புறம்.274:1.

53. பரிபாடல் 3:88.

54. குறுந்தொகை: கடவுள் வாழ்த்து.

55. திருமுருகாற்றுப் படை:15.

56. மதுரைக்காஞ்சி 432-33.

57. சிலப்பதிகாரம் 14:86.

58. கலித்தொகை 102:37.

59. ஐங்குறு நூறு 363: 1-2.

60. மதுரைக்காஞ்சி 554-56.

61. சிலம்பு. 14: 205 -207.

62. புறம். 311:2

63. குறுந்.360.

64. கலி. 71:14.

65. அகம்387:5-7.

66. சிலம்பு. ஐயர் புதிப்பு, பக்.155

67. ,, பக். 155.

68. நெடுநல்வாடை 150.

69. சீவகசிந்தாமணி, பா. 863.

இயல் 3



மகளிர் அணிகலன்கள்

1 வலம்புரிச் சங்கு
2 புல்லகம் (தென்பல்லி)
3 புல்லகம் (வடபல்லி)
4 பூரப்பாளை
5 தொய்யகம்
6 செவிப்பூ
7 அளகச் சூடம்
8 ஏகதளம்
9 குதம்பை
10 சவடி
11 காறை
12 வாகுமாலை
13 முத்தாரம்
14 தோள்வளை
15 வீரச்சங்கிலி
16 தோள்வளை
17 வாளைப்பகுவாய் மோதிரம்
18 பரியகம்
19 சூடகம்
20 பவழ வளை
21 ஆடைக்கட்டு
22 கடக வளை
23 முத்தரை (விரிசிகை)
24 உடைதாரம்
25 குறங்குச் செறி
26 நூபுரம் (சிலம்பு)
27 பாடகம்
28 குறங்குச் செறி
29 பரியகம்

இயல் - 3

ஒப்பனையில் அணிகலன்கள்

உலக மக்களில் தமிழர்களைப் போல் ஒப்பனைக்கு அணிகலன்களைப் பயன்படுத்தியவர்கள் வேறு எந்நாட்டவரும் இல்லை. தமிழ் மக்கள் ஆண்டாண்டுக் காலமாகத் தம்மை அழகுபடுத்திக் கொள்ள அணிகலன்களை அணிந்து வருகிறார்கள். அவர்தம் அணிகலன்கள் விலை உயர்ந்தவை; நுட்பமான வேலைப்பாடு நிறைந்தவை; கலைநயம் நிறைந்தவை; கவர்ச்சியானவை.

ஒப்பனையில் ஆர்வம் உடையவர்கள் என்பதால், தொடக்க காலத்தில் தமிழ் மக்கள் கண்ணுக்கினிய காட்சியைத் தந்த பல் வகையான தளிர்களையும், மொட்டுகளையும், மலர்களையும்,கொடிகளையும் காதுகளில் செருகியும், கழுத்தில் அணிந்து கொண்டும், கைகளிலும் தலையிலும் சுற்றிக் கொண்டும் தம்மை அலங்கரித்துக் கொண்டனர்.

தோழி கூற்றாக நற்றிணையில் வரும் செய்தி இக்கருத்தைத் தெளிவுபடுத்துகிறது.

'உழவனே வயலிலுள்ள வளமிக்க கோரைகளையும் நெய்தல் களையும் களையெனக் களையாது பாதுகாப்பாயாக. ஏனெனில் எங்களுடைய கரிய கூந்தலையுடைய தலைவி இப்போது இற்செறிக்கப்பட்டாள். இற்செறிப்பு நீங்கியவுடன் அவள் அவற்றுள் அழகிய கோரைகளை வளைகளாகவும், நெய்தலின் தழைகளை ஆடைகளாகவும் அணிந்து கொள்வாள்' [1] எனக் கூறியுள்ளாள். வையை ஆற்றில் புதுப் புனல் வந்தது. அப்போது அதிற் சென்று நீராடிய மகளிரின் செயல்களை விவரிக்கிறது ஒரு பரிபாடல்:

''ஒருத்தி மரகதமணி போன்ற பச்சைநிறமுடைய குவளைத் தண்டினை வளையாகச் செய்து தன் கைகளில் அணிந்து கொண்டாள்''.[2]

''ஒருத்தி தன் காதில் நீலமலரைச் செருகிக் கொண்டாள்''[3].

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் சூரர மகளிரை வருணித் துள்ளார். அம்மகளிர் காதுகளில், அசோகின் ஒளிபொருந்திய தளிர்களை அலங்காரத்திற்காகச் சூடிக் கொண்டனர் என்கிறார்.[4]

கால ஓட்டத்தில் நாகரிகம் வளரவளரப் பலவிதமான உலோ கங்களை மனிதன் கண்டுபிடித்தான். இரும்பு, பித்தளை, செம்பு, ஈயம், வெள்ளி, பொன் முதலிய உலோகங்கள் பயன்பாட்டுக்கு வந்தன. எனவே, அவற்றைப் பலவிதமான அணிகலன்களாகச் செய்து மக்கள் தம்மை அணிசெய்து கொண்டனர்.

உலோகங்கள் மட்டுமன்றி நவமணிகளும் அவற்றின் இயல்பும் பயனும் பற்றி ஆராய்ச்சி செய்தவர் தமிழர்கள்; அவற்றை அழகு பட அணிகலன்களாகச் செய்து அணிந்து மகிழ்ந்தவர் தமிழர்.[5] பின்வருவன ஒன்பான் மணிகள்:

1. வயிரம்
2. மரகதம்
3. மாணிக்கம்
4. புருடராகம்
5. கோமேதகம்
6. வயிடூரியம்
7. முத்து
8. பவளம்
9. நீலம்

அக்காலத்தில் மணிகளில் உள்ள குற்றங்குறைகளைப் பற்றி யும் குணநலன்களைப் பற்றியும் ஆராய்ச்சியும் செய்துள்ளனர். சிலப்பதிகார அடிகளும் அவற்றிற்கு அடியார்க்குநல்லார் வகுத்த ஆய்வுரைகளும் இவற்றை மெய்ப்பிக்கின்றன. அவற்றைக்காண் போம்.

வயிரம் (Diamond)

வயிரத்திற்குக் குற்றங்கள் பன்னிரண்டு; குணங்கள் ஐந்து என்றனர்[6] அடியார்க்குநல்லார்.

குற்றங்கள்

''சரைமலம் கீற்று சப்படி பிளத்தல் துளை, கரி
விந்து, காகபாதம், இருத்து கோடியில்லன
கோடி முரிந்தன தாரை மழுங்கலென இவை''
''சரைமலங்கீற்றுச் சப்படி பிளத்தல்துளை
கரி விந்து காகபாதம், இருத்துக் கோடி
களிலாதன முரிதல், தாரை மழுங்கறன்
னோடீ ராறும் வயிரத் திழிபென மொழிப''

இவற்றில் மிக்க குற்றங்கள் நான்கு. அவை:

1. காக பாதம் 2.களங்கம் 3.விந்து 4.இரேகை என்பன. இவற்றினால் வரும் தீமைகள் இவை:

''காக பாதம் கொல்லும்''
''மலம் பிரியாதது நிலந்தரு கிளைகெடும்''
''விந்து சிந்தையில் சந்தாபந் தரும்''
''கீற்று வரலினை ஏற்றவர் மாய்வர்''.

குணங்கள் ஐந்து

எட்டுப்பலகையும், ஆறுகோடியும், தாரையும்,
சுத்தியும், தராசமும் என இவை.

இவற்றை வேறுவிதமாகவும் கூறியுள்ளனர்:

''பலகை எட்டும் கோணமாறும்
இலகிய தாரையுஞ் சுத்தியும் தராசமும்
ஐந்துகுண மென்றறைந்தனர் புலவர்,
இந்திரசாபத் திகலொளி பெறினே''.

நான்கு வகை வருணத்தொளி[7] வயிரங்களுக்குண்டு. அவை பின் வருபவை:

''அந்தணன் வெள்ளை, அரசன் சிவப்பு
வந்த வசியன் பச்சை, சூத்திரன்
அந்தமில் கருமை'' என்றறைந்தனர் புலவர்.

இத்தகு வயிரங்களை அணிகின்றவர்க்குரிய பயன்களும்[8] சொல்லப் பட்டுள்ளன:

''மறையோர் அணியின் மறையோராகிப்
பிறவி ஏழும் பிறந்து வாழ்குவரே''

''மன்னவர் அணியின் மன்னவர் சூழ
இந்நில வேந்தர் ஆவர் எழுபிறப்பும்''

''வணிகர் அணியின் மணிபொன் மலிந்து
தணிவற வடைந்து தரணியில் வாழ்வர்,,

சூத்திரர் அணியில் தோகையர், கனகம்
நெல்வாய்ப்ப மன்னி மகிழ்ந்து வாழ்குவரே,,.

மரகதம் (Emerald)

பசுமை நிறைந்தது. பசிய கதிரொளி பரந்துள்ளது. ''ஞாயிற்றின் ஒளி மரகதக் கல்லின் மீது பட்டால் அதன் பச்சை வண்ண ஒளி அதன் சுற்றுப்புறம் எல்லாம் பரவி அருகிலுள்ள எல்லாப் பொருள்களையும் பச்சை நிறமாக ஒளிரச்செய்கிறது. எனவே, அணிகலன்களில் மரகத மணியை நடுநாயகமாக அமைத்து ஏனைய மணியைச் சுற்றிலும் வைத்து அணிகள் சமைக்கப்படுகின்றன. மரகதத்தின் பசுமையான ஒளி ஏனைய மணிகளில் பிரதிபலிப்பது ஓர் அரும் பெரும் அழகாகும்''[9] என்பது சாத்தன்குளம் அ. இராகவன் கருத்து. மரகதத்தின் குற்றங்கள் எட்டு. அவை: கருகல், வெள்ளை, கல், மணல், கீற்று, பொரிவு, தராசம், இறுகுதல் என இவை.

''கருகுதல், வெள்ளை, கல், மணல், கீற்று,
பொரிவு, தராசம், இறுகுதல் மரகதத்து
எண்ணிய குற்றம் இவைஎன மொழிப''[10]

குணங்கள் எட்டு

''நெய்த்தல் கிளி மயிற்கழுத் தொத்தல்பைம் பயிரில்
பசுத்தல் பொன்மை தன்னுடன் பசுத்தல்
பத்தி பாய்தல் பொன்வண்டின் வயிறொத்துத்
தெளிதல் எட்டும் குணமே''[11]

மாணிக்கம் (Ruby)

செந்நிறத்தையுடையது. மணிகளில் மன்னன். நால்வகை மாணிக்கங்கள் சொல்லப்படுகின்றன. வைரத்திற்கு அடுத்தபடியாக வைத்துப் போற்றப்படுவது.

பிறப்பிடம், வருணம், பெயர், குணம், குற்றம், நிறம், விலை, பத்தி இவற்றைப் பொறுத்து இவற்றின் இயல்பு கணிக்கப்படும்.

(1) பதுமம் -பதுமராகம் (அ) சாதுரங்கம்
(2) நீலம்- நீலகந்தி (அ) சௌகந்தி
(3) விந்தம் - குருவிந்தம் (அ) இரத்த விந்து
(4) படிதம் - கோவாங்கு

''வன்னியிற் கிடக்கும் வருணநாற் பெயரும்
உன்னிய **சாதுரங்கம்** ஒளிர் **குருவிந்தம்**
சௌகந்தி கோவாங்கு தானாகும்மே''[12]

எனவும்;

''தாமரை, கழுநீர் சாதகப்புட்கண்[13]
கோபம் மின்மினி கொடுங்கதிர் விளக்கு
மாதுளைப்பூ விதை வன்னி யீரைந்தும்
ஓது **சாதுரங்க** ஒளியாகும்மே''

எனவும்;

''திலகம் உலோத்திரம் செம்பருத்திப்பூ[14]
கவிர்மலர் குன்றி முயலுதிரம்மே
சிந்துரம் குக்கிற்கண்ணென எட்டும்
எண்ணிய குருவிந்தம் மன்னிய நிறமே''

எனவும்;

''கோகிலக்கண் செம்பஞ்சு கொய்ம்மலர்ப் பலாசம்[15]
அசோகம் பல்லவம் அணிமலர்க் குவளை

இலவத்தலர்களென்றாறு குணமும்
சௌகந்திக்குச் சாற்றிய நிறனே''

எனவும்;

''கோவை நற்செங்கல் குராமலர் மஞ்சளெனக்[16]
கூறிய நான்குங் கோவாங்கு நிறனே'',

புருடராகம் (Topaz)

வைரம் போன்று மஞ்சள் கலந்த வெண்மையான மணி. புருட ராகம் பூசநட்சத்திரம் போல் பொலியும்; பொன்னைத் தெளிய வைத்தாற்போல் இலங்கும். இதனைச் சிலப்பதிகாரம் ''பூச உருவில் பொலந்தெளித்தனைய''[17] என்று கூறியுள்ளது.

இதன் குற்றங்கள்

'ஒளியின்மை, நாசனை (மாணிக்கத்தில் உண்டாகும் வெண்ணீர்) கருமை, மஞ்சள், மேடுபள்ளம், கலங்கல், கருவெண்மை, வெண்மை' ஆகியவை புருடராகத்தின் குற்றங்களாகும்.[18]

குணங்கள்

'அழகிய தோற்றம், பருமன், தெளிவு, கனம், மென்மை, கோங்கிலவ மலர் போன்ற நிறம், நல்ல வெண்மை' ஆகிய ஏழு விதமான குணங்களாக வாகட நூல் கூறுகிறது.[19]

வயிடூரியம் (Cat-eyes)

இது கதிரவன் ஒளியைப் போன்றும், தேன்துளியைப் போன்றும் இலங்கும்.[20]

குற்றம்

'கறுப்பும் சமஉருவமும் உள்ளது: கரடுமுரடானது. நீர் நிறம் உள்ளது. இலேசானது' முதலியன குற்றமுடையன.[21]

குணம்

மூங்கில் இலை; பூனைக்கண்; மயிற்கழுத்து இவைபோன்ற ஒளியுள்ள வைடூரிய மணிகளே உயர்ந்தன. இம்மணி எங்கு

இருப்பினும் அதனுள் நூல் இழை போன்ற ஒளிவீசும். இதனை 'நூலோட்டம்' என்பர்.[22]

நீலம் (Sapphire)

''இருளைத் தெளிய வைத்தாற் போன்றவை நீலமணிகள்'' என்றார் இளங்கோவடிகள்.[23]

இவை நான்கு சாதியன. குணம் பதினொன்றும், குற்றம் எட்டும் உடையன. இதனைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது.[24]

''நீலத்தியல்பு நிறுக்குங் காலை
நால்வகை வருணமும் நண்ணுமாகரமும்
குணம் பதினொன்றும் குறை இருநான்கும்
அணிவோர் செயலும் அறிந்திசினோரே''.

நால்வகை

''வெள்ளை, சிவப்பு, பச்சை, கருமையென்று
எண்ணிய நாற்குலத் திலங்கிய நிறமே''.[25]

குணம்

''கோகுலக் கழுத்துக்குவளை சுரும்பர்
ஆகுலக் கண்களவிரிச்சாறு
காயாநெய்தல் கனத்தல் பத்தி
பாய்தல் எனக்குணம் பதினொன்றாமே''.[26]

குற்றங்கள்

அப்ரகம், சசர்கரம், திராசம், பின்னம், மிருத்திகா கர்பம், அச்மகர்பம்.[27]

1. அப்ரகம் - அப்ரகம் போன்ற நிறம் நீலத்தின் மீது படர்ந்திருப்பது
2. சசர்கரம் - மணியில் மணல் சேர்ந்திருப்பது.

3. திராசம் - பொரிசல் இருந்தால் திராசம்.

4. பின்னம் - உடைந்திருப்பது.

5. மிருத்திகா கர்பம் - கல்லின் உள்ளே மணல் இருப்பது.

6. அச்மகர்பம்- உள்ளே கல் காணப்படுவது.

கோமேதகம் (Zircon)

மஞ்சளும் சிவப்பும் கலந்தது போன்ற நிறத்தையுடையது கோமேதகம். ''இருவேறுருவ''[28] என்றார் இளங்கோவடிகள்

குற்றங்கள்

1. மங்கலானது, 2. மாசுள்ளது, 3. இலேசானது, 4. மேடு பள்ளம் உள்ளது, 5. உப்புக் கசிவுள்ளது, 6. தகடு வடிவம், 7. ஒளியற்றிருப்பது, 8. உருக்குக் கல் போலிருப்பது.[29]

குணங்கள்

1. ''நல்ல தெளிந்த பசுவின் சிறுநீர் நிறமுடையது, 2.மாசில்லாதது. சுத்தமானது, 3.பளபளப்புடையது, 4.அழுத்தம் உள்ளது, 5. கனம் உடையது, 6. மேடுபள்ளம் இல்லாதது, 7. கொழுப்பானது, 8. ஒளி நிறைந்தது ஆகிய எட்டுக் குணங்கள் கொண்டது நல்ல கோமேதக மணியாக மதிக்கப்பெறும்''[30]

முத்து (Pearl)

'பாண்டிய நாடு முத்துடைத்து' என்னும் பழம்பாடல் தமிழகத்தில் முத்துக்களின் சிறப்பைக் காட்டுகிறது. பண்டைத் தமிழர் முத்துக்களைக் காதணிகளாகவும் வளைகளாகவும் மாலைகளாகவும் கோத்து அணிந்து மகிழ்ந்தனர். அரசிகள் முத்துக்களைச் சேலைகளின் முந்தானையின் முனைகளில் கோத்து அணிந்தனர்.

தமிழக முத்துக்களைக் கிரேக்க, உரோமானிய, எகிப்திய நாகரிகநங்கையர் விரும்பி வாங்கிப் பயன்படுத்தினர்

பாண்டி நாட்டுத்துறைமுகமாகிய கொற்கையில் வந்து பொற் காசுகளைத் தந்து கொற்கை முத்துக்களைக் கொள்முதல் செய்து கொண்டு போனதாக அயல்நாட்டு வரலாறுகள் கூறுகின்றன.

முத்துக்களின் வகைகள்:[31]

1.	வட்ட முத்து	7.	கரடு
2.	ஒப்பு முத்து	8.	இரட்டை
3.	குறுமுத்து	9.	சப்பாத்தி
4.	நிம் போளம்	10.	சக்கத்து
5.	பயிட்டம்	11.	குளிர்ந்த நீர்
6.	அம்புமுத்து	12.	சிவந்த நீர்

இவையின்றி ஆணிமுத்து, கருமுத்து என்பனவும் சொல்லப்படுகின்றன.

குற்றங்கள்

காற்றினாலும் மண்ணினாலும் கல்லினாலும் நீரினாலும் தோன்றியவை.

காற்றேறு, மணலேறு, கல்லேறு, நீர்நிலை என்பன மிக்க குற்றங்கள்[32]

குணங்கள்[33]

சந்திரன்- வெண்ணீர்மை

குரு- பொன்னீர்மை

அங்காரகன்- செந்நீர்மை

பவளம் (Coral)

பவளப் பூச்சிகள் கடலில் உள்ள பிற உயிர்களால் தங்களுக்கு நேரும் ஆபத்தை அகற்ற ஒன்று சேர்ந்து அமைத்துக் கொள்ளும் பாதுகாப்பு அரணே பவளமாகும்.

நிறங்கள்

சிவப்பு, வெண்ணிறங் கலந்த சிவப்பு, வெண்மை, கறுப்பு, நீலம் போன்ற பல நிறங்களில் பவளங்கள் உள்ளன.

ஆயினும் தமிழர் சிவப்பு நிறப் பவளத்தையே விரும்புவர்.

குற்றங்கள்

கருப்பத்தே துளைபடுதல், கல்லிடுக்கிற் புகுந்து முடங்கு படுதல், திருக்கு முறுக்குண்டெழுதல் முதலியன பவளத்திற்குரிய குற்றங்கள்.[34]

குணமிக்கவை

நிறம், உருட்சி, சிந்துரம், ஈச்சங்காய், முசுமுசுக்கைக் கனி, தூது வழுதுணம் பழம் போல்வன.[35]

இவ்வொன்பான் மணிகள் மூவகையாகப் பிரிக்கப்படுகின்றன.[36]

தலைமணிகள்: வைரம், முத்து, மரகதம், மாணிக்கம்.

இடைமணிகள்: நீலம், புட்பராகம். வைடூரியம்.

கடைமணிகள்: பவழம், கோமேதகம்.

பிற அணிகலன்கள்

தொடக்க காலத்தில் காதுகளில் அழகுக்காகச் செருகிக்கொண்ட குழை-அதாவது தளிர், கால மாற்றத்தில் பொன்னாற் செய்யப் பட்டாலும் 'குழை' என்னும் பெயரைப் பெற்றே விளங்குகிறது.

சுருளாகச் சுருட்டிக் காதில் அணிந்துகொள்ளப்பட்ட பனை யோலை 'காதோலை' எனவும், பூவிதழ் தோடு எனவும் பெயர் பெற்றது. தொடக்கத்தில் அரையில் அணிந்து கொண்ட 'கொடி' பிற்காலத்தில் 'அரைஞாண்' எனப்பட்டது.

''அணிகலன்களின் இத்தகைய படிப்படியான வளர்ச்சியைத் தென்னிந்தியாவில் காணலாம். இங்குள்ள பண்டை மக்கள் முறுக் குண்ட புற்களையும் நார்களையும் கடகங்களாகவும் வளையல்களா கவும் அணிந்தார்கள். கண்ணாடி மணிகளையும் பவழங்களையும் கழுத்தணிகளாகவும் அணிந்தார்கள். சிற்றூர்களில் உள்ள ஏழை மக்கள் வெள்ளி, பொன், பித்தளை, செம்பு, ஈயம் போன்றவற்றை நகைகளாகச் செய்து அணிகின்றார்கள். அவற்றுள் நுண்ணிய வேலைப்பாடமைந்த நகைகளும் உள்ளன.''[37]

அணிகலன்களைக் குறிக்கும் சொற்கள்

பூண், அணி, பணி, இழை, கலன், நகை முதலிய சொற்கள் தமிழில் வழங்குகின்றன. இவையனைத்தும் காரணப்பெயர்களாக இருப்பதைக் காணலாம்.

பூண்

பூணப்படுவது பூண்.

அணி

இச்சொல்லுக்கு அழகு, அலங்காரம், ஒப்பனை, கோலம், திரட்சி முதலிய பல பொருள்கள் உண்டு. அணிந்து கொள்வது அல்லது அழகு தருவது அணி எனப்படும்.

இழை

இழை என்பது பொன்னில் கற்களை வைத்து இழைக்கப் படுவதால், பொன்னைக் கம்பிகளாக இழைத்துச் செய்யப்படும் அணிகலன்களுக்கும் பெயராயிற்று. ஆனால், காலப்போக்கில் இழை என்னும் சொல்லால் எல்லா நகைகளும் குறிக்கப் பெற்றன.

கலன்

கல்லென்னும் ஒலியெழுப்புவதால் கலன் எனப் பெயர் உண் டாயிற்று.

நகை

ஒளிவிடுவதால் நகை எனப்படுகிறது.

பணி

பண்ணப்படுவதன் காரணமாகப் பணி எனப்பட்டது என்றும் கருத இடமுண்டு.

தட்டார்களில் பணித்தட்டார் என்னும் பிரிவினர் இருந்ததாகச் சிலப்பதிகாரம் சொல்கிறது.

இனி, இழை என்னும் சொல்லைப் பல்விதமான அடை கொடுத்துச் சங்கப் புலவோர் கையாண்டுள்ளதைக் காணலாம்.

அணி இழை[38]
அவிர் இழை[39]
ஆயிழை[40]
இலங்கிழை[41]
உருள் இழை[42]
எல்லிழை[43]
ஏந்திழை[44]
ஒள்ளிழை[45]
கிளர் இழை[46]
சீருடைய இழை[47]
சுடரிழை[48]
சேயிழை[49]
திருந்திழை[50]
தெரியிழை[51]
நுணங்கிழை[52]
நேரிழை[53]
பாசிழை[54]
புனையிழை[55]
மாணிழை[56]
மின்னிழை[57]
முற்றிழை[58]
வயங்கிழை[59]
வாலிழை[60]
விளங்கிழை[61]
விறலிழை[62]

வளை

தமிழ்ப் பெண்கள் விரும்பி அணியும் அணிகலன்களில் வளை சிறப்பானது. வளையமாக இருப்பதால் வளை எனும் பெயர் பெற்றது. தொல்பழங்காலத்திலும் இவ்வணிகலன் இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளது.

சங்க வளை, ஆமை ஓட்டு வளை, பித்தளை, செம்பு, வெள்ளி, பொன் முதலியவற்றால் ஆகிய வளைகள் செய்யப்பட்டன.

வளை அணிந்ததால் பெண்டிர் 'வளையோர்'[63] என்றும் சொல்லப்பட்டனர்.

வளைகளில் மாணிக்க வளை, முத்து வளை, பொன் வளை, நவரத்தின வளை, சங்க வளை முதலியன கூறப்பட்டுள்ளன.[64]

சந்துக்காரை, சூடகம், பரியகம், கைச்சரி,[65] வண்டு[66] முதலியன வளையலைக் குறிக்கும் சொற்கள்.

வளைக்கு அடைமொழிகளாகப் பயன்படுத்திய பல்வேறு சொற்கள் அதன் சிறப்பை உணர்த்துவனவாக அமைந்துள்ளன.

அணிவளை[67]
அரம்போழ் அவ்வளை[68]
ஆய்வளை[69]
இடுபுணர்வளை[70]
இலங்குவளை[71]
இறைவளை[72]
எல்வளை[73]
ஒள்வளை[74]
சில்வளை[75]
சிறுவளை[76]
சுரிவளை[77]
சூர்ப்புறு கோல்வளை[78]
செறிவளை[79]

திருந்துகோல் எல்வளை[80]

தெரிவளை[81]

தொகுவளை[82]

தோள்வளை[83]

நல்மாண் எல்வளை[84]

நிரைவளை[85]

நேர்வளை[86]

வீங்குவளை[87]

தொடி

வளையைப் போன்று கைகளில் தொடுத்துக் கொள்ளப்படுவது தொடி என்னும் அணிகலன். இதனைத் தோளிலும் தொடுத்துக் கொள்ளும் வழக்கம் உண்டு. இருபாலாரும் தொடுத்துக் கொள்வர்.

இவ்வணியும் பெருமளவில் பெரும்பாலோரால் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்பதனைப் பின்வரும் அடைமொழிகளால் அறியலாம்.

அகல்தொடி[88]

அவிர்தொடி[89]

ஆய்தொடி[90]

இலங்குதொடி[91]

ஒண்தொடி[92]

கழல்தொடி[93]

குறுந்தொடி[94]

கோல்தொடி[95]

சுடர்த்தொடி[96]

செறிதொடி[97]

பூந்தொடி[98]

பைந்தொடி[99]

பொலந்தொடி[100]

நிரைதொடி[101]

விழுத்தொடி[102]

விளங்குதொடி[103]

வீழ்தொடி[104]

குழை

இச்சொல் 'தளிர்' என்னும் பொருளை உடையது. பின்னர் உலோகத்தால் ஆன அணிகலனைக் குறிக்கலாயிற்று. காதணி களில் ஒன்று குழை. பின்வரும் அடைமொழிகளுடன் இச்சொல் இலக்கியங்களில் பயின்று வருகிறது.

அரிக்குழை[105]

அவிர்குழை[106]

ஒண்குழை[107]

கனங்குழை[108]

கொடுங்குழை[109]

சிறுகுழை[110]

சோர்குழை [111]

பூங்குழை [112]

பொலங்குழை [113]

வடிவார் குழை [114]

வரிக்குழை [115]

வினைக்குழை [116]

பொதுவகையான அணிகலன்கள் பற்றி இதுகாறும் சொல்லப் பட்டது. இனி ஒவ்வோர் உறுப்பிற்கும் அணிந்து கொள்ளப்பட்ட அணிகலன்களைப் பற்றிக் காணலாம்.

வருணனை இருவகையாக அமையும். ஒன்று முடிமுதல் அடி வரை வருணிப்பது. மற்றொன்று அடிமுதல் முடிவரை அமைவது.

இங்கு அணிகல ஒப்பனையைக் கேசாதிபாதம் என்ற முறை யில் காண்போம்.

தலையணிகள்

முடி

கடவுளர்க்கும் மன்னவர்க்கும் தலை ஒப்பனையில் சிறப்பாக அமைவது முடி.

திவாகரம், பிங்கலம் என்னும் இரு நிகண்டுகளும் முடியின் உறுப்புகளாகத் தாமம், முகுடம், பதுமம், கோடகம், கிம்புரி என்னும் ஐவகை உறுப்புகளைக் குறிப்பிடுகின்றன.[117]

இவ்வைந்து உறுப்புகளைக் கொண்டதும் விலைமதிக்கமுடி யாததும் வேலைப்பாடு மிக்கதுமான திருமுடியை முருகப்பெருமான் அணிந்திருந்ததாகத் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் வருணித் துள்ளார்.[118]

பரிபாடலில் திருமாலைப் பாராட்டும்போது திருமால் 'புனைந்த திருமுடியை உடையவன்' எனப் பாராட்டப்பட்டுள்ளது.

அரசர் முடி

சேர வேந்தன் தன்னை எதிர்த்த ஏழு அரசர்களின் முடிகளைக் கவர்ந்து அவற்றை உருக்கி அப்பொன்னைக் கொண்டு ஆரம் செய்து அணிந்து கொண்டான்.[119] இதனால் அரசர்கள் வேலைப் பாடு மிக்க பொன்முடியை அணிந்து கொண்டனர் என்பது உறுதி யாகிறது.

மகளிர் முடி ஒப்பனை

பண்டைக்காலத் தமிழ்ப் பெண்டிர் கூந்தலை வாரி முடித்துக் கொண்டு அதில் பலவகையான அணிகலன்களை அணிந்து ஒப் பனை செய்து கொண்டனர். அவ்வணிகளே 'தலைக்கோலம்' எனப்பட்டது.

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் திருப்பரங்குன்றத்துச் சோலையில் விளையாடிய சூரர மகளிரின் தலை ஒப்பனை பற்றிய குறிப்பு வந்துள்ளது.

அன்னார் தெய்வவுத்தி அல்லது சீதேவி என்னும் தலைக் கோலத்துடன் வலம்புரிச் சங்கின் வடிவாகச் செய்யப்பட்ட நகை யினையும் தலையில் அணிந்திருந்தனர்.

அவற்றுடன் நெற்றியில் சுறா மீனின் அங்காந்த வாயாகப் பண்ணின அணிகலனையும் சூடியிருந்தனர்.[120]

விறலி ஒப்பனை செய்த கரிய கூந்தலில் பொன்னாற் செய்த மாலையைக் கட்டியிருந்தாள்.[121] இதனால் அன்றாட வாழ்விலும் ஒருவகைத்தலை ஒப்பனை இருந்தது என்பது தெரிய வருகிறது. வையையில் புதுப்புனல் வந்தபோது அதில் புனலாடிய மகளிரின் 'தலைப்பாளை' என்னும் அணியையும் வெள்ளம் கவர்ந்து சென்றதாகச் சொல்லப்பட்டுள்ளது.[122]

இவ்வணியைத் 'தொய்யகம்' என்றும் கூறினர்.

சுரிதகம்

சுரிதகம் என்பதும் ஒருவகைத் தலையணியாகும். இது சடையில் அணியப்படும் திருகுப்பூப் போன்று வட்டமானதும் மணிகள் பதித்ததுமான பொன்னணி ஆகும்.[123]

உத்தி

திருமகளைப் பொறித்து வைத்த, புனைந்த தலைப்பணி 'உத்தி' எனக் கலித்தொகையில் சொல்லப்பட்டுள்ளது.[124]

மகரவலயம்

பரிபாடல் 'மகரவலயம்' என்னும் தலையணியைக் கூறியுள்ளது.[125] ஆளை எறிந்து கொல்லும் இயல்புடைய மகரமீனின் வடிவத்தை உடையதாய்ச் செய்யப்பட்டது 'மகரவலயம்' என்பது.

சூளாமணி

மணிகள் இழைத்து வில்லையாகச் செய்யப்பட்ட தலைக்குரிய அணியே சூளாமணி, கம்பன் இதனைச் சூடையின் மணி-என்றனன். இது வடமொழித்தொடர். சூடா-சூடை -தலை. மணி-(பொன்னில்) மணிபதித்துச்செய்யப் பெற்றதொரு அணிகலன். சூடாமணி என்னும் தொடர் டகரத்திற்கு ளகரம் போலியாக வரும் வடமொழி இலக்கண முறைப்படி சூளாமணி எனவும் வழங்கப்பெறுவதுண்டு.

''சுருங்காச் சுடரொளி செம்பொற்பட்டம் சூளாமணியொடு துளங்கு கடைதுயல்வரும்'' (பெருங் 2:3:70-73)

முஞ்சகம்

சிறுவர்களுக்குரிய தலைஒப்பனையில் 'முஞ்சகம்' என்னும் அணியும் கூறப்பட்டுள்ளது. இது தலைஉச்சியில் அணியப்படுவது. இதைப் பற்றிய குறிப்பும் பரிபாடலில்தான் கிடைக்கிறது.[126]

தமிழக வேந்தர்களும் வள்ளல்களும் தம்மை நாடிவந்து ஆடியும் பாடியும் மகிழ்வித்த விறலியர்க்கும் பாடினியர்க்கும் பொன்னணி களைப் பரிசாகத் தந்தனர். அது பொன்னரிமாலை எனப்பட்டது.

இவ்வணிகலனையே பெரும்பாணாற்றுப்படை 'பொன்னின் தொடைஅமைமாலை' என்று கூறியுள்ளது.[127] பொருநராற்றுப் படையிலும்[128] பெருங்கதையிலும் [129] கூட இவ்வணிகலன் சொல்லப் பட்டுள்ளது.

பரிசாகக் கொடுக்கப்படும் அணிகலன் அனைவர் கண்ணுக்கும் தெரியும்படி தலையில் அணிந்து கொள்ளப்பட்டது போலும்.

விறலியர்க்குப் பொன்னரி மாலை பரிசளிக்கப்பட்டதுபோல பாணர்க்குப் பொற்றாமரை வழங்கப் பெற்றது. இதனை வெள்ளி நாரில் கோத்து, சென்னியில் சூடிக் கொண்டனர். பொருநராற்றுப் படையும்[130] புறநானூறும் இதனைப் பற்றிக் கூறுகின்றன.[131]

மத்தக நித்திலம்

மத்தக நித்திலம் என்பது தலைக்கோலமுத்து. முத்துகளை கொண்டு செய்யப்பட்ட தலையணிகளில் இதுவும் ஒன்று.[132]

நுதல் அணி

மக்களின் உறுப்புகளில் முகம் சிறப்பானது. அதில் நெற்றி அனைவரும் காணும்வண்ணம் அமைந்துள்ளது. எனவே பெண்டிர் ஒப்பனையில் நுதலுக்கு முக்கியத்துவம் தந்து நுதலிலும் அணி கலன்களை அணிந்து அழகுபடுத்திக் கொண்டனர். நுதலுக்குரிய அணிகளைத் தனியாக அணிய இயலாது. தலையணிகளோடு இணைத்து நுதலில் தொங்கவிடப்படுவனவாகவே இருந்தன. இவை சிலவாயினும் சிறப்பானவையாகும்.

நெற்றிச்சுட்டி

நெற்றியில் தொங்குமாறு அணியப்பெற்றது நெற்றிச்சுட்டி. "திருநுதல் சுட்டித்திகழச்சூட்டி" (பெருங்.1:34:196) என்பதைக் காண்க.

நெற்றிப்பட்டம்

இது பொற்றகட்டால் செய்யப்பெற்றது. 'நெற்றியில் வளைவான பட்டத்தை அணிந்த தோற்றம் திங்களை வளைத்துக்கிடந்த வானவில் போன்றிருந்தது' எனப்பெருங்கதை உவமித்துள்ளது (2:19:81-83).

திலகம்

இது நெற்றிப் பொட்டை மட்டும் குறிப்பிடாமல், நுதலில் அணியும் பொன்னால் செய்யப்பட்ட ஓர் அணிகலனையும் குறிக்கிறது. இதனைப்பற்றிக் கலித்தொகையில் சொல்லப்பட்டுள்ளது.[133]

காதணிகள்

முன்னரே கூறியதைப் போலத் தொல்பழங்காலத்தில் காதணிகள் என்பவை குழையாகவும், பூக்களின் தோடுகளாகவும், ஓலைகளாகவுமே இருந்தன. கால ஓட்டத்தில் காதணிகளின் உருவும் மாறி உலோகங்களாயின. ஆயினும் பெயர் மாற்றம் பெறாமல் அதே பெயர்களில் நிலைபெற்றன.

பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் காது குத்திக் குழையணிந்து கொண்டனர். இக்காலத்தில் ஆடவர் காதணி அணிந்து கொள்ளும் வழ்க்கம் பெரும்பாலும் குறைந்து விட்டது. எனினும் குழந்தைப் பருவத்தில் ஆண் பெண் இருபாலார்க்கும் காது குத்தும் வழக்கம் ஒரு விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. இது சமயத் தொடர்பான சடங்காகவும் மாற்றம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

பொலங்குழை

பொன்னால் செய்யப்பட்ட காதணியே பொலங்குழை எனப்பட்டது.

மக்கள் அணிந்து கொள்ளும் பொலங்குழையைக் கடவுளர்க்கும் அணிவித்தனர்.

முருகப் பெருமானைப் பாராட்டிப் பாடிய நக்கீரர் 'முருகன் பொலங்குழை அணிந்திருந்தான்' எனப் பாடியுள்ளார்.[134]

பூங்குழை

சங்ககால மகளிர் அணிந்த காதணிகளில் பூங்குழையும் ஒன்று. பூத்தொழிலுடன் பொன்னால் செய்யப்பட்ட குழையே 'பூங்குழை' எனப்பட்டது.

'விறலி ஒருத்தி பூங்குழை பூண்டிருந்தாள்' என்பதைப் பொருநராற்றுப்படை சொல்கிறது.[135]

ஒண்குழை

பெண்களின் காதணிகளில் ஒண்குழையும் ஒன்று. மதுரை நகரச் செல்வ மகளிர் ஒண்குழையை அணிந்திருந்ததாக மதுரைக் காஞ்சியின் வாயிலாக அறிகிறோம்.[136]

கனங்குழை

பண்டைக்காலக் காதணிகளில் கனங்குழையும் ஒன்று. பெண்டிர் முதலில் 'கடிப்பு' என்னும் அணியை இட்டுக் காதைப் பெரிதாக்கிய பின் 'கனங்குழை'யை அணிந்து கொண்டனர்.[137]

சிறுகுழை

ஆயர் மகளிர் காதுகளில் 'சிறுகுழை' அணிந்திருந்தனர். நச்சினார்க்கினியர் இதனைத் 'தாளுருவி' என்று கூறியுள்ளார்.[138]

மகரக்குழை

குழைகளில் மகரமீன் வடிவில் செய்யப்பட்டவைகளும் காதணிகளாக அணிந்து கொள்ளப்பட்டன. பாண்டிமாதேவி மிகவும் ஒளி பொருந்திய மகரக்குழையை அணிந்திருந்தாள் என நெடுநல்வாடை கூறுகிறது.[139]

புல்லிகை

காதணிகளுள் இதுவும் ஒன்று என்பதைக் கலித்தொகையால் அறிகிறோம். இது காதினின்றும் தொங்கும் இயல்பினது. இது மெல்லிய காதில் கிடக்கும் புல்லிகை என்னும் பூணாகிய கீழே தொங்கும் இயல்புடையது.[140] இதற்குப் பெருமழைப் புலவர் கன்னப்பூ, வாளி, குடைக்கடுக்கன் என்றெல்லாம் பொருள் எழுதியுள்ளார்.[141]

கொடுங்குழை

வளைந்திருப்பதால் இது கொடுங்குழை எனப் பெயர் பெற்றது. தலைமகள் ஒருத்தி கொடுங்குழை அணிந்திருந்ததாக அகநானூற்றுப் பாடலொன்றால் அறிகின்றோம்.[142] இது ஒளிமிகுந்த மத்தக மணி பதிக்கப்பெற்ற விளக்கம் மிக்க காதணி.

கடிப்பு

மகளிர் காதினை வளர்த்தற்கு இடப்படுவதோர் அணிகலன். பரிபாடலில் இதைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது.[143]

சிலப்பதிகாரமும் இவ்வணிகலன் குறித்துக் குறிப்பிட்டுள்ளது. அரும்பதவுரைகாரர் இதனை நீலக்குதம்பை என்றனர். 'முகப்பில் கட்டின இந்திர நீலத்தின் இடை இடையே வயிரங்கள் பதித்து அழகுற அமைந்த நீலக்குதம்பை'என்பது அவருரை.[144]

கடுக்கன்

இக்காலத்தில் ஆடவர் அணிந்து கொள்ளும் காதணிக்கே கடுக்கன் என்னும் பெயர் அமைந்துள்ளது. ஆனால் சங்க காலத்தில் பெண்டிர் அணிந்த காதணிகளில் கடுக்கனும் ஒன்று. நெடுநல்வாடை 'வாயுறை' என்பது 'வாயுற'வென்று இருக்குமாயின் கடுக்கனை வாயுறும்படி அழுத்தின காது' என்று நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.[145]

கழுத்தணிகள்

கழுத்தில் அணியப்படும் அணிகள் கழுத்தணிகள் எனப்படும். பேரணிகளில் பெரும்பாலானவை கழுத்தணிகளே. ''கழுத்தணிகலன்கள் நூற்றுக்கு மேற்பட்டவை உள்ளன'' என்கிறார் அ. இராகவன்.

கழுத்தை அணிசெய்த சில அணிகலன்கள் பூண், இழை, கலன் என்னும் பொதுச்சொற்களாலும் சொல்லப்பட்டுள்ளன.

சூரர மகளிர் நுட்பமான வேலைப் பாடமைந்த பூண்கள்விளங்கத் தம்மார்பை ஒப்பனை செய்து கொண்டனர். ஆகத்தை அழகு செய்த அப்பூண்கள் பற்றிய விளக்கமும் விவரமும் தெரியவில்லை. 'பூணகத் தொடுங்கிய வெம்முலை' என்பதற்கு 'மெல்லிய பணிகள் இடையில் கிடக்கின்ற விருப்பத்தையுடைய முலை' என்பது நச்சர் உரை.[146]

மதுரை நகரப் பரத்தையர் நுண்பூண் அணிந்த மார்பினை உடையவர்கள் என்கிறது மதுரைக்காஞ்சி.[147] குறிஞ்சிப்பாட்டில் கூறப்பட்டுள்ள தலைவி முத்து, மணி, பொன் முதலியவற்றால் ஆன கலன்களைக் கழுத்தில் அணிந்திருந்தாள்.[148]

வேந்தன் கரிகாலன் ஒளிபொருந்திய பேரணிகளால் தன் மார்பை அலங்கரித்துக் கொண்டிருந்தான்.[149]

மதாணி

கழுத்திலிருந்து தொங்கவிடப்படிருந்ததும், மார்பை அணி செய்யும் பதக்கத்தை உடையதுமான அணி, மதாணி எனப்பட்டது. மதுரை மாநகர வாழ்வரசியர் மதாணி அணிந்து, தம்மை ஒப்பனை செய்துகொண்டனர்.[150]

பவளம், மணி இவற்றை இடைஇடை வைத்துக் கட்டிய மாலைகளும் இருந்திருக்கின்றன. அகநானூற்றுப் பாடல் தொகுதிகளின் பெயரும் 'மணிமிடைபவளம்' எனப் பெயர் பெற்றுள்ளமை இதனைத் தெரிவிக்கின்றது.

இவையன்றி முத்துகளைக் கோத்து மாலையாகச் செய்து அணிந்துகொள்ளும் வழக்கமும் உண்டு. அகநானூற்றுப்பாடல்களில் 'நித்திலக்கோவை' என்னும் தொகுப்பும் உண்டு.

பொற்காசுகளைப் பொற்கம்பியில் கோத்துக் காசுமாலையாகச் செய்து அணிந்து கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் மட்டுமன்றி இக்காலத்திலும் இருக்கிறது.[151]

நள்ளி என்னும் வள்ளல் தன் கழுத்தில் பல வடங்களையுடைய முத்து மாலையை அணிந்திருந்தான்.[152]

சிறுவர் கழுத்தணிகள்

சங்க காலத்திலேயே சிறுவர்களுக்கும் பலவித அணிகள் அணிவிக்கப்பட்டன. வாள் போன்றும் மழுப்போன்றும் பொன்னாற் செய்யப்பட்ட அணிகளும், இந்திரகோபப் பூச்சி போன்ற சிவப்பு நிறம்மிக்க பவழத்தில் ஆன இடப உருவமைந்த ஒருவகை அணியும் முத்து, பிற மணிகள் ஆகியவற்றை ஒருங்கு கோத்து உருள் வடிவில் ஆக்கிய மூவட அணியும் நீலமலர்களும் தோற்றுவிடும்வண்ணம் அமைந்த நீலமணி மாலையும் கலித்தொகையில் சொல்லப்பட்டுள்ள சிறுவர்க்குரிய கழுத்தணிகளாகும்.[153]

தாலி

தாலி என்றதும் இக்காலத்தில் திருமணங்களில் மணமகளுக்கு மணமகனால் அணிவிக்கப்படும் மாங்கல்யமே அனைவருக்கும் நினைவுக்கு வரும். ஆனால், இங்குக் கூறப்படுவது அத்தாலி யன்று. இது அணிகலன்களில் ஒன்றாகும்.

சிறுவர் கழுத்தில் 'தாலி' அணிவிக்கும் பழக்கம் சங்க காலத்தில் இருந்தது. புறநானூற்றில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் மன்னவனைப் பாராட்டிய இடைக்குன்றூர் கிழார் 'சிறுவர்க்கணிவிக்கும் தாலியும் இன்னும் களையப்படவில்லை. இவன் போருக்கு வந்து விட்டானே' எனப் பாடியுள்ளார். இதற்கு உரை எழுதியவர் 'ஐம்படைத்தாலி கழித்ததும் இலன்' என எழுதியுள்ளார்.[154]

குறுந்தொகை, புலிப்பல் தாலியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.[155] புறநானூற்றிலும் இத்தாலியைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது.[156]

அகநானூறு "புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி"[157] என ஒரு பாட்டிலும், "பொன்னுடைத் தாலி"[158] என வேறொரு பாட்டிலும் குறித்துள்ளமையையும் காண்கிறோம்.

வீரயுகம் எனக் கூறத்தக்க சங்க காலத்தில் ஓர் ஆடவனின் வீரத்தின் அடையாளமாகப் புலியைக் கொன்று அதன் பல்லைக் கொணர்ந்து தன் காதலிக்குக் கட்டியிருத்தல் வேண்டும். தொடக்

கத்தில் புலிப்பல் கோத்த தாலி பிற்காலத்தில் பொற்றாலியாக மாற்றம் பெற்றுவிட்டது.

சிறுவர்களுக்கு அணிவிக்கப்பட்ட ஐம்படைத்தாலியாகிச் சங்கு, சக்கரம், வில்,வாள், கதை என்னும் திருமாலின் ஆயுதங்கள் பொறிக்கப்படலாயிற்று என்பதை உணரலாம்.

இடைக்காலத்தில் சைவ சமயத்தைச் சார்ந்த உரையாசிரியர்கள் சிவபெருமானின் ஆயுதங்கள் பொறித்த ஐம்படைத் தாலியைப் பற்றி எழுதியுள்ளனர். உண்மையில் சைவர்களின் குழந்தைகட்கு அணிவித்த தாலிகளில் சிவ பெருமானின் ஆயுதங்களே பொறிக்கப் பட்டிருந்தன.

எப்படியாயினும் இது வீரத்தின் அறிகுறியாகச் சிறுவர்கட்கு அணிவிக்கப்பட்டு, பின்னர் சமய நம்பிக்கைக்கு உள்ளாகிவிட்டது.

தோளணி

தோளில் அணிந்து கொள்ளப்பட்ட அணிகளில் தொடி,தோள் வளை அல்லது வாகு வலயம் என்பன முக்கியமானவை.

தோளணிகளில் பெண்டிர்க்குரியனவும் உண்டு. ஆண்களுக் குரியனவும் உண்டு. மன்னவர்களும் மறவர்களும் தொடியணிந்து தம்மை அலங்காரம் செய்து கொண்டனர்.

முள்ளூர் மன்னன் காரி என்னும் வள்ளல் 'தொடி' என்னும் அணிகலனை அணிந்திருந்தான். அவனைப்புலவர் "கழல் தொடிக் காரி"[159] என வருணித்தனர்.

மறவன் ஒருவன் 'கிடின்' என இடிக்கும் அழகிய வீரவளை அணிந்திருந்தான்.[160]

மதுரை மாநகரத்துப் பெண்டிர் செறிக்கப்படும் தோள்வளை யினை உடையவராக இருந்தனர்.[161]

வையையில் புதுப்புனல் புரண்டு வந்தது. ஆண்களும் பெண் களும் நீராட்டு விழாக் கொண்டாடச் சென்றனர். விரைந்து வந்த வெள்ளம் பெண்களின் அணிகலன்களைக் கவர்ந்து சென்றது.

இதனைப் புலவர் மையோடக்கோவனார் பரிபாடலில் பாடியுள்ளார். அம்மகளிர் அணிந்திருந்த அணிகளில் 'வாகுவலயமும்' ஒன்று என்பதை அறிகிறோம்.[162]

தோளில் தொடியணியும் வழக்கம் உண்டு என்பதைப் புறப்பாடல் "தொடியுடைய தோள் மணந்தனன்" எனக் குறிப்பதாலும்,[163] "தொடிபொலி தோள்" எனக் கலித்தொகையில் குறிப்பிட்டிருப்பதாலும் அறிகிறோம்.[164]

கையணிகலன்கள்

மனித உறுப்புகளில் கைகள் மிகச்சிறப்பானவை. கண்களுக்குச் சமமாகச் சொல்லத்தக்கவை. கைகளில் அணியும் அணிகலன்கள் அனைவர் பார்வைக்கும் தென்படுபவை. கைகளில் அணிகலன்களை அணிந்து கொள்வது ஒப்பனையில் முக்கியமானது.

பழங்காலத்தில் தமிழ்ப்பாவையர் வெண்மையான சங்குகளை அறுத்து வளையாக அணிந்து கொண்டனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

ஐங்குறுநூற்றில் 'வளைப்பத்து' என்னும் பத்துப் பாடல்கள் உள்ளன.

அதில் சங்கை அறுத்துச் செய்யும் வளை பற்றிய செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. தோளிலணியும் தொடியும் முன்கையில் அணியும் வளையும் சங்கினால் செய்யப்பட்டன.

வலம்புரிச் சங்கால் வளை செய்து அரசி அணிந்திருந்தாள்.[165]

கைத்தொழிலில் வல்லோன் வாளரத்தால் அராவிய வளைந்த அழகிய வளையையும் அகன்ற தொடியையும் அணிந்த முன்னங்கையை உடையாள் என்பது நற்றிணை தரும் தகவல்.[166]

"சிலவாகிய வெண்மையான வளைகளை உடைய செய்யோள்" எனக் கலித்தொகை வருணிக்கின்றது.[167]

பொன் வளை

பொன்வளையைப் 'பொற்றொடி' எனவும் கூறினர். பெண்டிர் பொன்வளைகளால் தம்மை அலங்கரித்துக் கொண்டனர்.

சிறு குழந்தைகட்கும் பொற்றொடி அணிவிக்கப்பட்டது.

''யாவரும் விரும்பும் பொற்றொடி'' அணிந்த புதல்வனைத் தெருவில் பார்த்து விட்டாள் பரத்தை. உடனே அவனைத் தூக்கி எடுத்துத் தழுவிக் கொண்டாள். இந்நிகழ்ச்சி அகப்பாடல் ஒன்றில் வந்துள்ளது.[168]

கைவந்தி

கைகளில் அணிந்து கொள்ளும் அணிகளில் கைவந்தியும் ஒன்று. இது மேற்கைகளில் அணிந்து கொள்ளப்படுவது. இக் காலத்தில் இதனைக் 'கைவங்கி' என்கின்றனர். மதுரை மாநகர் செல்வ மகளிர் பொலிவுடைய கைவந்தியால் தம்மை அணிசெய்து கொண்டனர்.[169]

கடகம்

இருபாலாரும் அணிந்து கொள்ளும் அணிகலன்களில் இதுவும் ஒன்று.

தன் தேவியைப் பிரிந்து போர்க்களம் சென்றிருந்த பாண்டிய வேந்தன், ஒரு கையைப் படுக்கையின் மேல் வைத்து, 'கடகம்' அணிந்த ஒரு கையால் முடியைத்தாங்கியிருந்தான்.[170]

கண்டீரக் கோப்பெருநள்ளி என்பவன் வன்பரணர் என்னும் புலவருக்குப் பொருந்துவாய் செறித்த முன்கைக் கடகத்துடன் மார்பில் அணியும் ஆரங்களையும் பரிசிலாகத் தந்தான்.[171]

பவள வளை

பண்டைக்காலப் பாவையர் பவள வளைகளையும் அணிந்த னர். பவள வளைகளுடன் குவளையின் பச்சை நிறத் தண்டினை யும் ஆம்பலின் தண்டினையும் அணிந்து தம்மை அலங்கரித்துக் கொண்டதாகப் பரிபாடல் அறிவிக்கிறது.[172]

இடுபுணர் வளை

பரிபாடலில் குறித்துள்ள கையணிகளில் 'இடுபுணர் வளையும்' ஒன்று. ஆணியிடும் இரட்டை வளையல் என உரைகாரர் இதற்கு விளக்கமும் அளித்துள்ளார்.[173]

சித்திரச் சூடகம்

மாதவி நல்லாள் சூடகம் அணிந்து எழில்பெற விளங்கினாள்.

சித்திரச் சூடகம் என்னும் இது, முகப்பில் கட்டிய மாணிக்கத் துடன் பத்திகளில் வயிரங்கள் பதித்த சித்திரத் தொழிலையுடைய சூடகமாகும்.[174]

நவரத்தின வளை

அடியார்க்கு நல்லார், பரியகம் என்பதற்கு நவரத்தின வளை என உரை எழுதியுள்ளார். இதனைப் 'பரியகம்' என்னும் சொல் லால் குறித்தனர் இளங்கோவடிகள்.[175]

அரும்பதவுரைகாரர் பரியகம் என்பதனைப் பாசித்தாமணி, (அ) கைச்சரி எனக் குறித்துள்ளார்,[176]

சிறுவர் கையணி

சிறுவர்க்குக் கைகளில் நண்டின் கண்போலக் காட்சி தரும் அழகிய பொன் அணிகலன் அணிவிக்கப்பட்டது.[177]

விரலணி

தொன்றுதொட்டுள்ள அணிகலன்களில் விரல் அணிகளும் பல பெயர்களில் குறிக்கப் பெற்றுள்ளன.

விரலணிகளில் மோசை, செங்கேழ் விளக்கம், மோதிரம், விரலணி என்பன சொல்லப்பட்டுள்ளன.

மோசை

நற்றிணையில் ஒளிபொருந்திய இழைகளையணிந்த மாதர் களைப் பற்றிய குறிப்புகள் வந்துள்ளன. அவர்கள் விளக்கம் மிகுந்த வளைகளை அணிந்தனர். அவ்வளையொடு மெல்லிய விரல்களில் அணிந்த விரலணிகளும் சொல்லப்பட்டுள்ளன. இதன் பெயரே 'மோசை' எனப்பட்டது.[178]

இதனை முனைவர் மா. இராசமாணிக்கனார் 'மோதிரம்' என் கிறார்.

''மோசை-விரலணி; வாழைப்பூப் போலக் குவிந்துளதென உவமையாலறியக் கிடத்தலின் மோதிர மன்மை யுணர்க'' எனப் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் உரை விளக்கமும் எழுதி யுள்ளார்.[179]

முடக்கு மோதிரம்

இதனை "வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்" எனச் சிலம்பு சொல்கிறது.[180] இதற்கு 'நெளிமோதிரம்'என அடியார்க்கு நல்லாரால் உரை வகுக்கப்பட்டது.

அடுக்காழி

இதனைக் ''கேழ்கிளர் செங்கேழ்கிளர் மணிமோதிரம்''என்றார் இளங்கோவடிகள்.[181]

வயிர மோதிரம்

நுடங்கின ஒளியையுடைய வயிரம் சூழ்ந்த மரகதத்தையுடைய தாள்செறி. இதனைக் கடைசெறி என்பர் அடியார்க்கு நல்லார்.[182] இவை மரகத நாயகமாகிய 'வட்டப்பூ' என்பர் அரும்பதவுரை காரர்.[183]

மரகதமணி மோதிரம்

''மரகதமணித்தாள் செறிந்த மணிக்காந்தள் மெல்விரல்கள்'' என்பது இளங்கோவடிகள் கூற்று. சிலப்பதிகாரமே இதைப் பற்றி யும் சொல்லியுள்ளது.[184]

சுறா மீன் மோதிரம்

''சுறாவேறெழுதிய மோதிரம் தொட்டாள்'' என்பது கலித் தொகை தரும் த்கவல்.[185]

வாளை மீன் மோதிரம் (அ) செங்கேழ் விளக்கம்

வாளையின் அங்காந்த வாயைப் போன்று மடக்கிச் செய்யப் படும் மோதிரம்.

''வாளைப்பகுவாய் கடுப்ப வணக்குறுத்து
செவ்விரல் கொளீஇய செங்கேழ் விளக்கம்''

என நெடுநல்வாடை அறிவிக்கிறது [186]

பொன்மோதிரம்

'தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன்' பொன்னால் செய்யப்பட்டு அதில் பொலிவுமிக்க மணிகள் பதிக்கப்பெற்றதொரு மோதிரத்தை அணிந்திருந்தான்.[187]

பெரும்பாலும் 'விளக்கம்' என்னும் சொல் மோதிரத்தைக் குறிப்பது.

இடையணிகள்

தமிழக மகளிர் ஒப்பனையில் இடைக்குரிய அணிகள் பலவும் இடம் பெற்றிருந்தன.

இக்காலத்தில் பெண்கள் ஒட்டியாணம் அணிந்து கொள்வதைக் காண்கிறோம்.

ஆடவர் பொன் அல்லது வெள்ளியால் செய்த அரைஞாண் அணிந்து கொள்ளுகின்றனர்.

இடை அணிகளில் பாண்டில், மேகலை, குறும்பொறி, சில்காழ், பல்காழ், பைங்காழ், பருமம், காஞ்சி, ஏணிப்படுகால், விரிசிகை என்பன குறிப்பிடத்தக்கன.

பாண்டில்

பாண்டில் என்பது ஒட்டியாணம் போன்றதோர் இடையணி. ஐங்குறுநூற்றில் பாலை பாடிய ஓதலாந்தையார் இதனைப் 'பொற்காசுகளை வரிசையாகக் கோத்துச் செய்யப்பட்ட இடையணி கலன்' எனக் குறித்துள்ளார்.[188]

மேகலை

இலக்கிய நூல்களில் பெரிதும் சொல்லப்படுவது மேகலை. மணிமேகலை என்னும் அணிகலன் ஒரு காப்பியத்தின் பெயராகவும் இடப்பட்டது.

திருமுருகாற்றுப்படையில்"பல்காசு நிறைத்தசில்காழ்"என்னும் தொடருக்குப்"பலமணிகள் கோத்த ஏழுவடமாகிய மேகலை" என நச்சினார்க்கினியர் பொருள் எழுதியதுடன் கீழ்வரும் வெண்பாவை யும் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

எண்கோவை காஞ்சி, எழுகோவை மேகலை,
பண்கொள் கலாபம் பதினாறு-கண்கொள்
பருமம் பதினெட்டு, முப்பத்திரண்டு
விரிசிகை என்றுரையல் பாற்று.

எனவே ஏழு கோவையை உடைய இடையணி மேகலை எனப் பட்டது என்பது இப்பாவால் புலப்படுகிறது.

ஆனால் பிற சான்றுகளைப் பார்க்கும்போது இக்கருத்து வலி யுறவில்லை.

இருவடமாய்த் துகிற்குள் அணியும் மேகலை எனக் கூறப் பட்டிருப்பதாலும்[189] எண்கோவை மேகலை எனப் பாடபேதச் செய் யுள் கூறுவதாலும் [190] மேகலை எழுகோவையை உடையது என் பது பொருத்தமாகப் படவில்லை.

தமனிய மேகலையைக் கலித்தொகை குறிப்பிட்டுள்ளது[191]
பரிபாடல் வகைவகையாகக் கோத்த மேகலை பற்றிக் கூறியுள்ளது.[192]

இருவடமாய் ஆடையின் உள்ளே அணியப்படுவது மேகலை என்றும்,எண்வடமாய் ஆடையின் புறத்தே அணியப்படுவது காஞ்சி என்றும் பரிமேலழகர் பரிபாடலுரையில் எழுதியுள்ளார்.[193]

மேகலையாகிய "ஏணிப்படி காலை மிக இறுகக் கட்டிக் கொண்டு" என்னும் தொடருக்கு விளக்கம் தந்தபோது அவரே "ஏணியினது படிபோல ஒன்றற்கொன்று வடம் உயர்தலான் இரு கோவை முதல் முப்பத்திருகோவை யீறாக அமைந்த மேகலையை ஏணிப்படுகால் என்றார்'' என எழுதியுள்ளார்.[194]

குறும்பொறி

குமரக் கடவுள் குறமகளிரொடு குரவையாடும் போது மருங்கில் குறும்பொறி அணிந்திருப்பான் எனப் பாடுகிறது திருமுருகாற்றுப்

படை.[195] குறும்பொறியை 'உதரபந்தம்' என்னும் அணி என்கிறார் நச்சினார்க்கினியர். உதரம்-வயிறு. உதரபந்தம் வயிற்றைப் பொருந்தி இடுப்பைச்சார உள்ள ஓர் அணிகலன்.

சில்காழ்

திருப்பரங்குன்றத்தில் விளையாடிய சூரர மகளிர் 'சில்காழ்' என்னும் மணிகள் கோத்த ஏழுவடமாகிய மேகலையை அணிந்திருந்தனர்.[196]

பல்காழ்

பாண்குடியைச் சார்ந்த விறலியொருத்தி பல வண்டினங்களின் இருப்பையொத்த 'பல்காழ்' அணிந்திருந்தாள்.[197]

பைங்காழ்

தொண்டைநாட்டுப் பட்டினத்தைச் சேர்ந்த செல்வக் குடும்பத்துச் சேயிழையர் 'பசிய மணிகள் கோத்த வடங்களை அரையில் அணிந்திருந்தனர்'.[198]

பருமம்

இடையணிகளில் 'பருமம்' என்னும் பெயரையுடைய அணிகலனும் ஒன்று. திருவாவினன்குடியில் முருகனைப் புகழ்ந்து பாடிய கந்தருவ மகளிர் கண்களுக்கினிய ஒளியை உமிழும் பதினெண் கோவையாகிய 'பருமம்' என்னும் மேகலையை அணிந்திருந்தனர்.[199]

காஞ்சி

மேகலைகளில் இதுவும் ஒருவகை. ஆடையின் புறத்தே அணியப்படுவது. புதுப்புனல் விழாவில் நீராடச் சென்ற மகளிர் இடுப்பில் 'காஞ்சி' அணிந்திருந்ததாகப் பரிபாடல் கூறுகிறது.[200]

தொடையணிகலன்

'குறங்குசெறி' என்பது தொடையில் அணிந்து கொண்ட அணிகலன். தொடை அணிகலன் பெரும்பாலும் நாட்டியப் பெண்கள் அணிவதாக இருக்க வேண்டும். ஆடைக்கு மேல் தொடையைக் கௌவிக் கொண்டு இருக்குமாறு அணியப்பட்டது இது. 'கவான் செறி' என்றும் இது கூறப்பட்டது.

சிலப்பதிகாரத்தில் மாதவி 'குறங்குசெறி' அணிந்திருந்தாள் என அது அறிவிக்கின்றது,[201]

காலணிகலன்கள்

கணைக்காலில் அணியப்படுவனவும், கால்விரல்களில் அணியப் படுவனவும் காலணிகலன்கள் எனப்படும்.

காலணிகலன்கள் பண்பாட்டுச் சிறப்புடன் வரலாற்றுச் சிறப்பும் கொண்டவை.

சிலம்பு

சிலம்பு காலில் அணிந்து கொள்ளப்படும் அணிகலன்களில் ஒன்று.

மாதவி அலத்தகம் ஊட்டிய அஞ்செஞ்சீறடியில் சிலம்பை அணிந்து கொண்டதாகச் சிலப்பதிகாரம் கூறியுள்ளது.[202]

பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, அரியகம் முதலியனவும் அவள் அணிந்து கொண்ட காலணிகளாகும்.[203]

குடைச்சூல், ஞெகிழம் என்பனவும் சிலம்பைக் குறிக்கும் சொற்கள்.

காற்சரி, கழல், கட்டுவடம், பாதசாலம், கிண்கிணி, தண்டை முதலியனவும் பிற காலணிகள்.

பண்டைக்காலப் பெண்கள் சிலம்பு அணிந்து கொள்வது பெரு வழக்காகும். மணம்புரிந்து கொள்ளுமுன் இது அணிந்து கொள்ளப் பட்டது. திருமணத்திற்கு முன் சிலம்பைக் கழற்றுதல் ஒரு விழா வாகக் கொண்டாடப்பட்டது. அதனைச் 'சிலம்புகழி நோன்பு' என்றனர்.[204]

சிலம்பு நீளவட்டமான காலணி. இது குழாய்போற் செய்யப் பட்டு, உள்ளே பரல்கள் இடப்பட்டன. பரல்களாக இடப்பட்டவை முத்துக்களும் மாணிக்கங்களுமாகும்.

வில்லைப்போல் அமைந்து நன்கு வளைந்த குடைச்சூலாகிய சிலம்பு என்றும்,[205] பொன்னினும் மணியினும் தொழிற்சிறப்பினும்

சிறந்து விளங்கியதால் 'வளங்கெழு குடைச்சூல்'[206] எனவும் சொல்லப்பட்டுள்ளன.

கிண்கிணி

சிறுவர்களும் பெண்களும் கிண்கிணி அணிந்து தம்மை அலங் கரித்துக்கொண்டனர்.

கலித்தொகையில் நச்சினார்க்கினியர் கிண்கிணி என்பதற்கு 'ஒருவகைச் சதங்கை' எனப் பொருள் எழுதியதுடன் 'தண்டை' எனவும் பொருள் எழுதியுள்ளார்.[207]

கட்டுவடம்

இது காலணிகளில் ஒன்றென்பதைப் பரிபாடல் மூலம் அறிகி றோம்.

கால்மோதிரம்

கால்விரல் அணிகளில் கால்மோதிரமும் ஒன்று. சிலப்பதி காரமும் பரிபாடலும் இவ்வணிகலன் பற்றிக் கூறியுள்ளன.[209]

சிலப்பதிகாரம் 'மெல்விரல் நல்லணி' என்னும் தொடருக்கு மகர வாய் மோதிரம், பீலி, கால்மோதிரம் என்னும் அணிகள் என்பர் அடியார்க்குநல்லார்.[210]

சிறுவர் காலணி

சிறுவர்களின் காலணிகளில் கிண்கிணியும் ஒன்று.

செல்வச் சிறார்களின் சிறிய அடிகளில் தவளையின் வாயைப் போன்று பொன்னால் செய்து அதனுள் ஒலி செய்யும் மணிகளையும் இடுதல் வழக்கம்.[211]

தேரையின் வாய் போல் செய்யப்பட்ட கிண்கிணியும் இருந் திருக்கிறது.[212]

ஈரமைச்சுற்று

காலில் அணிந்துள்ளது உருக்கிய பசும்பொன்னால் பண்ணிய காற்சரியுடன் கூடிய நிறம் பொருந்திய 'ஈரமைச் சுற்று' என் னும் காலணி என்பதால் சிறுவர் அணியைப் பற்றிய குறிப்பு கிடைக்கிறது.[213]

அடிக்குறிப்புகள்

1. நற்றிணை 60:9-11.

2. பரி. 11:101-102.

3. ,, 11:93

4. திருமுரு. 31-32.

5. புறம்.218. ''பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச்சேயவாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங்காலை
ஒருவழித் தோன்றி யாங்கு''.

6. சிலம்பு. அடியார்க். உரை. பக். 382.

7. ,, ,, ,, பக். 382.

8. ,, ,, ,, பக்.382.

9. அ. இராகவன், 'தமிழ்நாட்டு அணிகலன்கள்' , 1970.

10. சிலம்பு. அடியார்க். உரை, பக்.383.

11. ,, ,, ,, பக்.383.

12. ,, ,, ,, பக்.383.

13: ,, ,, ,, பக்.383.

14. ,, ,, ,, பக்.383.

15. ,, ,, ,, பக். 383.

16. ,, ,, ,, பக். 384.

17. ,, ஊர்காண் காதை, அடி 188,

18. அ. இராகவன், 'தமிழ்நாட்டு அணிகலன்கள்' , பக். 155.

19. அ. இராகவன், 'தமிழ்நாட்டு அணிகலன்கள்' , பக். 155.

20. சிலம்பு. ஊர்காண். அடி 189.

21. அ. இராகவன்,

22. அ. இராகவன், 'தமிழ்நாட்டு அணிகலன்கள்' , பக். 156.

23. சிலம்பு. ஊர்காண். அடி 190.

24. சிலம்பு. அடியார்க். பக். 384.

25. ,, ,, பக். 384.

26. ,, ,, பக். 384.

27. அ.இராகவன், 'தமிழ்நாட்டு அணிகலன்கள்' ,பக்.152.

28. சிலம்பு. ஊர்காண். அடி190.

29. அ.இராகவன், 'தமிழ்நாட்டு அணிகலன்கள்' ,பக்.158.

30. ,, ,, ,, பக்.158.

31. ,, ,, ,, பக்.137.

32. சிலம்பு,ஊர்காண். பக். 384.

33. ,, அரங்கேற்று. பக்.116.

34. ,, ஊர்காண். பக்.385.

35. ,, ,, பக்.385.

36. டி.எஸ்.வைத்தியநாதன்,'நவமணிகள்' பக்.9.

37. Indian Jewellary and Ornaments and Decorative Designs P. P. 1-5.

38. ஐங்குறுநூறு 359: 4.

39. மதுரைக். 445.

40. கலி. 148:21-

41. குறிஞ்சி. 233.

42. கலி. 59:14.
43. ,, 81:16.
44. மணிமே. 20:77.
45. மதுரைக். 623.
46. நற். 41:7.
47. புறம், 11:13'
48. மதுரைக். 512.
49. பதிற். 88:36.
50. நற். 40:4.
51. ஐங்குறுநூறு 354:4.
52. ,, 174:2.
53. அகம் 90:14.
54. ,, 90:14.
55. குறுந்.21.
56. பதிற்.81;31.
57. குறுந்.246:6.
58. கலி.111:8.
59. பதிற்.14:14.
60. குறுந்.188:3.
61. புறம்.302:3.
62. கலி.30:14.
63. புறம்.242:1.
64. சிலம்பு.6:91-94.
65. ,, 6:91-94.
66. பரி.திரட்டு 1:30.
67. அகம். 361:4.
68. ஐங். 185:3.
69. நற்.60:11.
70. பரி. 12:23.
71. ஐங்.136:2.
72. அகம்.250:13.
73. ஐங்.20:5.
74. கலி.145:36.
75. சிறுபாண். 176.
76. நற். 300:5.
77. குறுந்.260:3
78. அகம். 142:17.
79. ,, 186:17.
80. குறிஞ்சி. 167.
81. ஐங்.54:3.
82. குறுந். 15:6.
83. ,, 252:1.
84. அகம். 173:7.
85. ஐங். 422:4.
86. ,, 269:3.

87. ஐங் 285:4.
88. நற். 77:10.
89. மதுரைக். 563.
90. ,, 712.
91. இடம் விளங்காத பதிற். 2.
92. குறிஞ். 139.
93. சிறுபாண். 95.
94. பெரும்பாண். 13.
95. நற். 48:6.
96. ஐங். 305:3.
97. பட்டினப். 154.
98. மதுரைக். 446.
99. நற். 330:9.
100. நெடுநல். 141.
101. குறிஞ். வெண்பா 1:1.
102. அகம். 162:14.
103. ,, 58:8.
104. திருமுரு. 114.
105. கலி. 109:14.
106. அகம். 253:26.
107. மதுரைக். 448.
108. குறுந். 398:3.
109. பதிற். 14:15.
110. பெரும்பாண். 161.
111. நற். 20:9.
112. குறுந். 159:5.
113. திருமுரு. 86.
114. திணைமாலை நூற்றைம்பது 77:4.
115. கலி.104:22.
116. பரி. 12:87.
117. திவாகரம்:
"தாமம் முகுடம், பதுமம் கோடகம் கிம்புரி முடியுறுப் பைந்தெனக் கிளப்பர்".
பிங்கலந்தை:
"கோடகம் கிம்புரி, முகுடம் தாமம் பதுமம் முடியுறுப் பிவை யைந்தாகும்"(1169)
118. திருமுரு. 83-84.
119. பதிற்றுப். 4:11.
120. திருமுரு. 23-25.
121. பெரும்பாண் 485-86
122. பரி. 7:46.
123. நற். 86:5-8.
124. கலி.97:14.
125. பரி. 10:77.
126. ,, 16:7-9.
127. பெரும். 485-86.
128. பொருந. 159-62.

129. பெருங். 1:40.
130. பொருந. 159.
131. புறம். 11:17-18.
132. பரி. 16:5.
133. கலி. 97:11.
134. திருமுரு.86.
135. பொருந. 30.
136. மதுரைக். 709.
137. பரி. திரட்டு 1:34.
138. பெரும். 161.
139. நெடுநல். 139.
140. கலி. 96:11.
141. பொ.வே.சோமசுந்தரனார் விளக்கம், 96 உரைக்குறிப்பு.
142. அகம். 3:17.
143. பரி. 1:33.
144. சிலம்பு, அரும்பத. பக்.179.
145. நெடுநல் நச்சர் உரை, அடி 140.
146. சிறுபாண். 26 நச்சர் உரை.
147. மதுரைக் 569.
148. குறிஞ்சிப்.170அடிக்கு நச்சர்உரை.
149. பட்டினப். 297.
150. மதுரைக். 461.
151. குறுந், 67:3-4.
152. புறம். 150:20.
153. கலி. 85:8-16.
154. புறம். 77:7.
155. குறுந். 161:3.
156. புறம். 374:9.
157. அகம். 7:18.
158. ,, 54;18.
159. அகம். 209:12.
160. நற். 48:6.
161. மதுரைக். 446.
162. பரி. 7-47.
163. புறம். 239-1.
164. கலி. 90-7.
165. நெடுநல். 142.
166. நற்.77:9-10.
167. கலி. 13:6.
168. அகம். 16;5
169. மதுரைக். 415.
170 முல்லை. 76.
171. புறம்.150:21.
172. பரிபா. 11:101-102.
173. ,, 12:23.
174. சிலம்பு. 6:91-92.

175. சிலம்பு 6:93.
176. ,, கடலாடு. பக். 179.
177. கலி. 85:6-7.
178. நற். 188:4.
179. ,, கழக வெளியீடு, பக். 326.
180. சிலம்பு. 6:95.
181. ,, 6:96.
182. ,, பக். 195.
183. ,, பக். 179
184. ,, பக். 202
185. கலி. 84-23.
186. நெடுநல். 143-44.
187. மதுரைக். 719.
188. ஐங். 316.
189. பரி. 7:47.
190. உ.வே.சா.பதிப்பு, பத்துப்பாட்டு, பக். 36.
191. கலி. 96:15.
192. பரி. 22:30.
193. ,, 7:47.
194. ,, 10:11.
195. திருமுரு. 213-14.
196. திருமுரு. 16.
197. பொருநர். 39.
198. பெரும்பாண். 329.
199. திருமுரு. 145-46.
200. பரி. 7:47.
201. சிலம்பு. 6:86.
202. ,, 6:82-83.
203. ,, 6:84-85.
204. அகம். 315:8; 385:17-18; ஐங். 399:1-2, நற். 279.
205. அகம். 198:9-10.
206. பதிற்றுப். 57:11.
207. கலி. 74:13.
208. பரி. 12:24 உரை.
209. ,, 12:24.
210. சிலம்பு. 6:83 உரை, ஐயர் பதிப்பு.
211. குறுந். 148:1-2.
212. கலி. 86:9.
213. ,, 85:1,

இயல் 4

இயல் - 4

கூந்தல் ஒப்பனை

தமிழ் மகளிர் தம் கூந்தலைக் கண்ணும் கருத்துமாகப் பேணி ஒப்பனை செய்து கொள்வதில் ஆர்வம் மிகக் கொண்டவர். இது சங்க காலத்திலும் இருந்தது; இக்காலத்திலும் இருக்கிறது.

தழைத்து, நீள வளர்ந்து, இருண்டு, சுருண்டு, மணம் மிகுந்து இருத்தல் கூந்தலுக்குள்ள இலக்கணங்களாகக் கவிஞர்களால் பாராட்டப்பட்டுள்ளது.

கூந்தலின் தொகுதியும் மிகுதியும் மெல்லணை எனப் புலவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது.

> கூந்தல் மெல்லணை[1]
>
> நறுமென் கூந்தல் மெல்லணை[2]
>
> விரிமென் கூந்தல் மெல்லணை[3]
>
> கதுப்பறல் அணை[4]
>
> கதுப்பிற் பாயல்[5]

இத்தொடர்களில் கூந்தல் மெல்லணை, அணை, பாயல் எனவெல்லாம் வருணிக்கப்பட்டுள்ளமையைக் காண்கிறோம்.

கூந்தலின் உவமைகள்

தழைத்து அடர்ந்த கூந்தலை மயிலின் கலாவத்திற்கும் கொன்றையின் தழைக்கும் இருண்டு கறுத்துள்ள கூந்தலை மை, மேகம், இருள், ஆற்றின் அறல், நீலமணி முதலியனவற்றிற்கும் உவமைகளாகக் கூறியுள்ளனர்.

மயிலின் கலாவம்

மயிலின் பீலியைப் போன்ற தழைத்த மெல்லிய கூந்தல்,[6] மயிலின் தழைத்த பீலியைக் கால் ஒன்றக் குவித்தாற் போன்ற தழைத்த மெல்லிய கூந்தல்,[7] வானத்தினின்று கீழே இறங்குகின்ற மயில் தோகை போன்ற அழகிய கூந்தல்[8] என்பன சங்கச் செய்யுட்களின் அடிகள்.

மை

மலர்ந்த மலர்கள் மணக்கின்ற மையைப் போன்ற கரிய கூந்தலையுடைய மடந்தை,[9] மையொழுகினாற் போன்ற செறிந்த கரிய கூந்தல்[10] என்றும் பல அடிகள் 'மை' உவமையாய் அமைந்துள்ளதைக் காட்டுகின்றன.

இருள்

இருண்ட அழகிய கூந்தல்[11] எனவும், இருண்டு கடை குழன்று தழைத்து முடியவிழ்ந்து ஐவகையாய் முடிக்கப்படும் கூந்தல்[12] எனவும் புலவர் இருளைக் கூந்தலுக்கு உவமித்துள்ளனர்.

மேகம்

மேகத்தைக் கூந்தலுக்கு உவமித்தல் பலவிடங்களில் வந்துள்ளன. ஓரிரு எடுத்துக்காட்டுகளே இவண் காட்டப்படுகின்றன.

> மேகம்போல் தழைத்த கூந்தல்[13]
>
> மேகம் எனும்படி முதுகில் தாழ்ந்து இருண்டு விளங்கும் கொத்தாகிய ஐம்பால்.[14]

கொன்றையின் தழை

வண்டுகள் தேன் உண்ணும்படியுள்ள நீண்ட பூங்கொத்துகளைத் தழைகளின் இடையே கொண்டு பொன்னால் செய்த தலையணிகளைக் கோத்துக் கட்டிய மகளிர் கூந்தலைப் போலத் தோன்றும் கொன்றைமரம்.[15]

ஆற்றின் அறல்

> அறல்போல் கரிய கூந்தல்[16]
>
> அகிற்புகையும் சந்தனப்புகையும் மணக்கின்ற கருமணலைப் போன்ற கரிய கூந்தல்[17]
>
> அறல் வீற்றிருந்த மயிரினை உடையாள்[18]

என்பன ஆற்றின் அறல் கூந்தற்கு உவமையானமையைக் காட்டுகின்றன.

நீலமணி

நீலமணியின் நிறத்தைக் கூந்தலுக்கு உவமையாகக் கூறிய இடங்களும் உள்ளன.

நீலமணி ஒளிவிட்டாற்போல் எங்கூந்தலில் புழுகு பூசி என்தாய் ஐந்துவகையாக முடித்த இளமைப்பருவம்;[19]

பொன்னைப் போன்ற நின் மேனி நிறமும் நீலமணிபோன்ற நின் கரிய கூந்தலும்;[20]

நீலமணிபோன்ற கூந்தலில் வண்டுகள் மொய்க்கும்படி மலர் சூடி[21]

நீலமணி போன்ற ஐந்து பகுதியாக முடித்தற்குரிய, வண்டுகள் மெல்ல ஒலித்தலையுடைய நறுமணமுள்ள கூந்தல்[22] என்பன மேற் கூறிய கருத்தை வலியுறுத்துகின்றன.

கூந்தலைப் பேணுதல்

சங்ககாலப் பெண்டிரும் பிற்காலப் பெண்டிரும் நீண்ட கூந் தலை அழகின் இலக்கணமாகக் கருதினர். மாசறக் கழுவி நெய் தடவி, சீவிச் சிக்கெடுத்துக் கூந்தலைப் பாதுகாத்தனர்.[23]

சீர்கொண்ட கூந்தலை நீர்கொண்டு கழுவித் தூய்மை செய்த துடன் எருமண்ணிட்டுப் பிசைந்து தூய்மை செய்தலும் வழக்கம் என்பதைப் பின்வரும் செய்தியால் அறிகிறோம்.

''நாங்கள் எம் கூந்தலுக்கு இட்டுப் பிசையும் பொருட்டு எரு மண்ணைக் கொணர்வோம்'' என்றனள் ஒரு தோழி.[24]

எருமண் என்பது களிமண்ணாகும், கூந்தலிலுள்ள எண் ணெய்ப்பசை, சிக்கு முதலியன போகும்பொருட்டுக் களிமண்ணைத் தேய்த்துக் கொண்டு மகளிர் நீராடுவது வழக்கம். இக்கால அறி வியலாரும் இம்முறையை ஏற்றுக் கொள்கின்றனர்.

கூந்தலில் பெய்யப்படுகின்ற எக்கராகக் குவிக்கப்பட்ட குவி யல்[25] எனக் குறுந்தொகைப் பாடல் ஒன்றும் இதனை வலியுறுத்து கின்றது.

பெருங்கதை இக்களிமண்ணைக் 'கூந்தல் நறுமண்' எனக் கூறியுள்ளது.[26]

துவர்

கூந்தலைத் தூய்மை செய்ய,பத்துவகையான துவர்கள் பயன் படுத்தப்பட்டன.

தண்ணந் துவர்பல ஊட்டிச் சலங்குடைவார்
எண்ணெய் கழல விழைதுகள் பிசைவார்[27]

என்னும் பரிபாடல் அடி, கூந்தலைத் தூய்மை செய்ய எண்ணியவர் குளிர்ந்த அழகிய பத்துவகைத் துவர்களையும் தேய்த்துக் கொண்டு நீரில் முழுகியதைக் கூறுகின்றது.

மாதவி தன் கூந்தலைத் தூய்மை செய்து கொண்ட முறையினை இளங்கோவடிகள் அழகாகவும் அரிதாகவும் கலைநயம்படவும் பாடியுள்ளார்.

மாதவி, வாச நெய்யுரைத்த மணங்கமழும் கரிய கூந்தலைப் பத்து வகையான துவர்களினாலும் ஐந்து விதமான விரையினாலும், முப்பத்திரண்டு விதமான ஓமாலிகையினாலும் ஊறின நீரில் நிறம்பெறக் கழுவினாள்.

பத்துத்துவர், ஐந்துவிரை, முப்பத்திரண்டு ஓமாலிகை என்பன பின்வருவன:

பத்துத்துவர்

''பூவந்தி திரிபலை புணர் செங்கருங்காலி
நாவலோடு நாற்பான் மரமே'' [28]

''நாற்பான் மரநாவல் மாந்தளிர் முப்பழம்
சீர்முத்தக் காசு''.[29]

ஐந்துவிரை

"கொட்டம் துருக்கம் தகரம் அகில் ஆரம்
ஒட்டிய ஐந்தும் விரை". [30]

"நறும்பிசின் நாகணம் நற்கொட்ட மாஞ்சி
வெறுங் கண்டில் வெண்ணெய் விரை".[31]

முப்பத்திருவகை ஓமாலிகை

அடியார்க்குநல்லார் மேற்கோள் காட்டிய பாடல் இது:

"இலவங்கம் பச்சிலை கச்சோல மேலம்
குலவிய நாகணங் கொட்டம் - நிலவிய
நாக மதாவரிசி தக்கோல நன்னாரி,
வேகமில் வெண்கோட்ட மேவுசீர்-போகாத
கத்தூரிவேரி யிலாமிச்சங் கண்டில் வெண்ணெய்
ஒத்தகடு நெல்லி யுயர்தான்றி-துத்தமொடு
வண்ணக்கச் சோல மரேணுக மாஞ்சியுடன்
எண்ணுஞ் சயிலேக மின்புழுகு-கணுநறும்
புன்னை நறுந்தாது புலியுகிர் பூஞ்சரளம்
பின்னு தமாலம் பெருவகுளம் - பன்னும்
பதுமுக நுண்ணேலம் பைங்கொடுவேரி,
கதிர் நகையா யோமாலிகை."[32]

இலவங்கம், பச்சிலை, கச்சோலம், ஏலம், நாகணம், கொட்டம், நாகம், மதாவரிசி, தக்கோலம், நன்னாரி. வெண்கோட்டம், கத்தூரி, வேரி, இலாமிச்சம், கண்டில் வெண்ணெய், கடு, நெல்லி, தான்றி துத்தம், வண்ணக் கச்சோலம், அரேணுகம், மாஞ்சி, சயிலேகம், புழுகு, புன்னை, நறுந்தாது, புலியுகிர் பூஞ்சரளம், தமாலம், வகுளம், பதுமுகம், நுண்ணேலம், கொடுவேரி என்பன முப்பத்திரண்டு வகையான ஓமாலிகையாகும்.

மாதவி இம்மூவகைப் பொருள்களாலும் தூய்மை செய்த கூந்தலைச் சந்தனம், அகில் முதலிய புகையினால் புலர்த்தினாள். புலர்த்திய பூமென் கூந்தலை ஐந்து வகையாகப் பிரித்தாள். பிரித்த வகைதோறும் மான்மதத்தின் கொழுஞ்-சேற்றைப் பூசினாள்.[33]

அகிற் புகை

கூந்தலுக்கு அகிற்கட்டையினை எரித்து அப்புகையினை ஊட்டும் பழக்கம் உண்டு என்பதை,

"தழைத்த கூந்தலுக்குக் கமழும் அகிற்புகையினை
யூட்டிப் பூமாலை புனைந்தனர்[34]"

என்பதாலும்,

அகிற்புகை உள்ளுறும் படியாக விரித்த அழகிய கூந்தல்[35] என்பதாலும் அறியலாம்.

சந்தனப்புகை

'சந்தனப் புகையைத் தம் கருமணல் போன்ற கரிய கூந்தலுக்கு ஊட்டினர்[36]' என்பதாலும் அறியலாம்.

தகரம் பூசுதல்

இதனை மயிர்ச் சந்தனம் அல்லது மயிர்ச் சாந்து என்பர். ஆண்களும் பெண்களும் மயிர்சாந்தைத் தம்முடிக்குப் பூசிக் கொண்டனர்.

"மயிர்ச்சந்தனம் மணக்கும் தண்ணிய நறிய கூந்தல்" என்னும் அகப்பாட்டு இதனை அறிவிக்கிறது.[37]

குறிஞ்சிப்பாட்டின் தலைவன் தன்முடிக்குக் குளிர்ந்த மணம் பொருந்திய மயிர்ச் சந்தனத்தைப் பூசிக்கொண்டான். பின்னர் அதனை அதிற்புகை கொண்டு புலர்த்தினான். மேலும் வண்டுகள் மொய்க்கும்வண்ணம் அகிலின் நெய்யை நீலமணி போன்ற நிற முடைய தன்பித்தையில் பூசிக்கொண்டான் என்பர் கபிலர்.[38]

ஐம்பால்

ஐந்து வகையாக முடிக்கப்படுவதால் கூந்தல் ஐம்பால் என்றும் பெயர் பெற்றது.

ஐவகை என்பன முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை யாகும்.

முடி-உச்சியில் முடிதல்

கொண்டை-பக்கத்தில் முடிதல்

சுருள்-பின்னிச் செருகல்

குழல்-சுருட்டி முடிதல்

பனிச்சை-சடையாகப் பின்னல்[39]

நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணி உரையில் ஐம்பாலைக் குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என எழுதியுள்ளதை யும் காண்கிறோம்.[40]

இலக்கணை என்பவள் குழலையும் அளகத்தையும் வகுத்தும், கொண்டையைத் தொகுத்தும் பனிச்சையையும் துஞ்சையையும் விரித்தும் முடித்தாள் என்பது அவர் விளக்கம்..

ஐம்பால் என்பதனைப் பின்வரும் அடைமொழிகளுடன் புணர்த்துப் புலவர்கள் கையாண்டுள்ளனர்,

இருளிய பிறங்கு குரல் ஐம்பால்[41]

இருளேர் ஐம்பால்[42]

உளரியல் ஐம்பால்[43]

சுரிவளர் ஐம்பால்[44]

தேங்கமழ் ஐம்பால்[45]

தொகுகுரல் ஐம்பால்[46]

நறுவீ ஐம்பால்[47]

புரியவிழ் ஐம்பால்[48]

மணங்கமழ் ஐம்பால்[49]

மணியேர் ஐம்பால்[50]

மணிமருள் ஐம்பால்[51]

வகைசேர் ஐம்பால்[52]

வண்டடர் ஐம்பால்[53]

வண்டுகமழ் ஐம்பால்[54]

வளர் ஐம்பால்[55]

வளர்சுரி ஐம்பால்[56]

வளர்ந்தொலி ஐம்பால்[57]

வெறிகமழ் வணர் ஐம்பால்[58]

வெறிகொள் ஐம்பால்[59]

பிற்கால இலக்கியங்களில் கம்பனின் படைப்பில் கூந்தல் வருணனை - ஒப்பனை எழில்பட எடுத்தியம்பப்பட்டுள்ளது.

கூந்தலைக் கம்பன் பின்வரும் சொற்களால் குறிப்பிட்டுள்ளான்.

ஐம்பால்[60]

அளகம்[61]

அளகபந்தி[62]

ஓதி[63]

குழல்[64]

கூழை[64 அ.]

கோதை[65]

பித்திகை[66]

என்பன அவை.

மேலும் நூற்றுக்கணக்கான அடைமொழிகளாலும் அலங்காரச் சொற்களாலும் மங்கையர் குழலைத் தெய்வ மாக்கவினுன் கம்பன் தெளிவுறுத்தியுள்ளான்.

அகிலும் நாவியும் கூறும் மங்கையர் நறுங்கூந்தல்[67]

அகில்புரை குழல்[68]

அம்மெல் ஓதி[69]

அலம்பு பாரக் குழலி[70]

அலம்புவார் குழல்[71]

அளியன்னதோர் அறல் துன்னிய குழல்[72]

அளிவளர் அளகம்[73]

அறல் இயல் கூந்தல்[74]

அறல் நறுங்கூந்தல்[75]

கருகும் வார்குழல்[76]

கருங்குழல்[77]

கருங்குழல் கற்றை பாரம் கால்தொட[78]

கருங்குழல் பாரம்[79]

கள்உயிர்க்கும் மென்குழலியர்[80]

கள்கொந்தார் குழல்[81]

கள்சிலம்பு கருங்குழலாள்[82]

கள்ளுறை மலர்மென் கூந்தல்[83]

கற்றைப் பூங்குழல்[84]

காரினைக் கழித்துக்கட்டி கள்ளினோடு ஆவியூட்டி
பேரிருள் பிழம்பு தோய்த்து நெறிஉ நீஇப் பிறங்குகற்றைச்
சோர்குழல் தொகுதி என்று சும்மை செய்தனைய தம்மா
நேர்மையைப் பருமை செய்த நிறைநறுங் கூந்தல்நீத்தம்[85]

குரா வரும் குழலி[86]

கூந்தல்அம்பாரக் கற்றைக் கொந்தளக் கோலக்கொண்டல்
ஏந்தகல் அல்குல் தேரைஇகந்து போய்இறங்க.[87]

கூந்தல் மென்மழை[88]

கொங்கு அடுத்த மலர்க்குழல்[89]

கொன்றை துன்று கோதை[90]

கோள்புரை இருள் வாசக்குழல்[91]

சந்த வார்குழல்[92]

சில்அல் ஓதி[93]

சுமை உடைக்கற்றைக் குமைஉறத்திரண்டு ஒரு
சடையாகிய குழல்[94]

சுரும்பு கண்டு ஆலும் கோதை[95]

செறிகுழல்[96]

சோனை வார்குழல்[97]

தண்நறுங் கருங்குழல்[98]

தரங்க வார்குழல்[99]

தளைஅவிழ் குழல்[100]

தளைஅவிழ் கோதை ஓதி[101]

தாமமும் நாணமும் தகைந்த தண்அகில் தூமம் உண்குழல்[102]

தாழ் குழல் [103]

துஞ்சும் களிவரி வண்டுகள் குழல்[104]

துன்றிருங் குழல்[105]

துன்றுபுரி கோதை[106]

தூமம் உண்குழல்[107]

தூமக் கள்ளுடை ஓதி[108]

தூம மென்குழல்[109]

தேமலர் நிரந்த கூந்தல்[110]

தேன் கொண்டு ஊடாடும் கூந்தல்[111]

தேன்நகு குழல்[112]

தோடலர் குழல்[113]

தோடவிழ் கூந்தல்[114]

தோடு இவர்ந்த பூஞ்சுரி குழல்[115]

நரந்தம் நறைக்குழல்[116]

நன்னெடுங் கூந்தல்[117]

நாவி தோய்த்து அனையஓதி[118]

நாவி நன்குழல்[119]

நாவி விரிகூழை[120]

நாறு பூங்குழல்[121]

நானவார் குழல்[122]

நிறம் பூத்த மஞ்சுபூத்த மலர்பூத்த குழல்[123]

நிறைநறுங் கூந்தல்[124]

நீலம் புனைமணி அளகம்[125]

நெய் கொள் ஓதி[126]

நெறியிருங் கூந்தல்[127]

நெறிந்து நிமிர் கற்றை நிறைஓதி[128]
பண்ணை அளிகள் பம்பும் சோணை போன்ற சுரிகுழல் கற்றை[129]
புயல் இயல் கூந்தல்[130]
புயல்வரு கூந்தல் பாரக்கற்றை[131]
புரிகுழல்[132]
புரிகுழல் சும்மை[133]
புனைந்த பூங்குழல்[134]
பூக்கமழ் ஓதி[135]
பூங்குழல் கற்றையின் நாவிநாள்மலர்[136]
பூநனை கூந்தல்[137]
பூந்தண் வார்குழல்[138]
பூமாண் குழல்[139]
பூவரு புரிகுழல்[140]
பொதிஇருள் அளகபந்தி[141]
பொம்மென்ன வண்டலம்பும் புரிகுழல்[142]
மஞ்சொக்கும் அளகஓதி[143]
மதம் தோய்ந்த மாதர் சுரிகுழல்[144]
மதுவிரிகுழல்[145]
மட்டு அவிழ் மலர்க்குழல்[146]
மழை ஏந்திய குழல்[147]
மழையிழை நீலம் ஊட்டி வாசமும் புகையும் மாட்டி
உழைஉழை சுருட்டி மென்பூ குவித்திடைக் கிடையூறு என்னப்
பிழையுடை நுதலர் செய்த பெருங்குழல்[148]
மழைகுலாம் ஓதி[149]
மழையொக்கும் வடித்த கூந்தல்[150]
மலர்க் கருங்குழல்[151]
மருவொன்று கூந்தல்[152]
மன்றலம் கோதை[153]

மாகந்தமும் மகரந்தமும் அளகம்[154]
மைக்கருங் குழல்[155]
மைம்மலி குழல்[156]
மொய்க்கருங் குழல்[157]
வடித்த அஞ்சில் ஓதி[158]
வடித்தாழ் பூங்குழல்[159]
வண்ணம் செய்கூந்தல் பாரவலையம்[160]
வண்டிமிர் கோதை[161]
வாசக் கொந்தளக பாரம்[162]
வாசமைக்குழல்[163]
வார்குழல் கற்றை மழைக்குலம்[164]
விரைக் கருங்குழல்[165]
விரைசெய் வார்குழல்[166]
வினைவரால் அரிய கோதை[167]
வெறியலர் கூந்தல்[168]
வெறிக்கொள் பூங்குழல்[169]

பாவையர் கூந்தலும் பல்வித மணமும்

பெண்ணின் கூந்தல் மலர்களைக் காட்டிலும் மணம் மிக்கது என்பது பண்டைக்காலப் புலவோர் கருத்து.[170] சங்க இலக்கியத்திலும் பிற்கால இலக்கியத்திலும் இது சொல்லப்பட்டிருப்பதை அறியலாம்.

மயிர்ச்சாந்தின் மணம்

தண்ணிய தகரம் என்னும் மயிர்ச்சாந்தின் மணம்வீசும் கூந்தல்.[171]

நறுமணப் பொருள்களின் மணம்

மணப்பொருள் பலவற்றைக் கூட்டி, அதனைக் கூந்தலுக்குப் பூசிக் கொள்வது பழக்கம். இம்மணப் பொருளின் கலவையினைப்

'பண்டம்' என்றனர். இதனைத் தெருவில் விற்பதுண்டு. மகளிர் அவற்றை வாங்கித் தம் கூந்தலில் பூசிக் கொண்டனர்.[172]

நரந்தம் பூவின் மணம்

நரந்தம் என்பதற்கு நாரத்தம் பூவென்றும்; ஒருவகைப் புல் லென்றும்; கத்தூரி என்றும் பலபொருள் உண்டு.

நரந்தம் நாறும் குவையிரும் கூந்தல்[173] என்பது குறுந் தொகைக் கூற்று.

நரந்தம்பூவின் மாலைகளைக் கூந்தலில் சூடினர்.[174]

குவளையின் மணம்

குவளை மலரின் மணம் வீசும் கூந்தல் என்பது ஒருதலை வனின் கூற்றாக அமைந்துள்ளது.[175]

ஆரமும் அகிலும் நாறுதல்

மணங்கமழும் அகிற்புகையும்சந்தனப்புகையும் ஊட்டப்பட்ட அறல்போல் கூந்தல் என்பது ஒரு தலைவனின் பாராட்டு.[176]

வாணன் சிறுகுடிச் சோலையின் மணம்

வாணன் ஒரு குறுநில மன்னன். இவனுக்குச் சொந்தமான ஊர் சிறுகுடி என்பது. நெல்வளம் மிகுந்தது. இவ்வூரிலுள்ள சோலை பல மலர்களை உடையது.அச்சோலையென மணக்கும் கூந்தலையுடைய தலைவி என்பது மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார் புகழுரை.[177]

பாதிரிப்பூவின் மணம் வீசுதல்

சிறுகுடி என்னும் ஊரைப் பண்ணன் என்பவனும் ஆட்சி புரிந் துள்ளான். இவன் சிறுகுடி சோழநாட்டிலுள்ள திருவீழிமிழலைக்கு அண்மையில் திருஞானசம்பந்தரால் தேவாரம் பாடப்பெற்ற ஊரா கும். இப்பண்ணனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனும் கோவூர் கிழாரும் பாடியுள்ளார். இவன் ஊரில் பாதிரி மரங்கள் நிற்றய இருந்திருக்கின்றன.

எனவே, கோவூர்கிழார் விறலியொருத்தியைப் பாராட்டும் போது ''பண்ணன் சிறுகுடிப் பாதிரி கமழும் ஓதி ஒண்ணுதல் இன்னகை விறலி'' என்றார்.[178]

முல்லையின் மணம் வீசுதல்

கார்காலத்துமுல்லை மலரின் மணம் வீசும் கூந்தலையுடையாள் என்பது பதிற்றுப்பத்தில் வரும் வருணனை. ''கார்மலர் கமழும் தாழிருங் கூந்தல்'' என்பதைக் காண்க.[179]

நெய்தலின் மணம்

'குளிர்ந்த மணம் பொருந்திய நெய்தல் மணக்கும் பின்னப் பட்ட கூந்தல்' என்பது ஐங்குறு நூற்றின் பாடற்செய்தி.[180]

ஓரிகாட்டின் மணம்

வள்ளல் ஓரிக்குச் சொந்தமான கானம் பல்வகை நறுமண மலர்கள் பூத்துக் குலுங்கும் கானம். அக்காட்டினின்றும் வீசும் காற்று அம்மலர்களின் மணத்தைச் சுமந்து வருவதால் மணம் சிறந்து விளங்கியது.

அதனையே உவமையாக்கினார் புலவர் பரணர். 'வல்வில் ஓரி கானம்போல் மணக்கும் தழைத்த கூந்தலாள்' என்பது அக் கூற்று.[181]

முள்ளூர்க் கானத்தின் மணம்

முள்ளூர்க் கானம் மலையமான் திருமுடிக்காரியின் கானம். மணக்கும் பல மலர்களையுடையது அது. எனவே 'முள்ளூர்க்கானம் போல் மணம் வீசும் கூந்தலை உடையாள்' என்பது கபிலர் பாராட்டுரை.[182]

இமயக் காட்டின் மணம்

இமயமலைக் காட்டின் மணத்தையும் ஒரு புலவர் கூந்தலின் மணத்துக்கு உவமையாக்கியுள்ளார்.

''சிமையக் குரல சாந்திருந்து இருளி இமையக்
கானம் நாறும் கூந்தல்''

என்னும் அடிகள் இதை உணர்த்துகின்றன.[183]

வதுவை மணம்

'வதுவை' என்னும் சொல் மணம், மணமாலை என்னும் பொருள்களையும் தரும் சொல். அதனால் 'வதுவைநாறும் வண்டுகமழ் ஐம்பால்' எனப்பட்டது.[184]

தேம் கமழ்தல்

'தேம்' என்பது இனிமை, மணம், நெய் என்னும் பல பொருட்களை உடைய சொல். எனவே, 'தேம்' கமழும் 'ஐம்பால்' என்னும் தொடர் நற்றிணையில் வந்துள்ளது.[185]

கூந்தல் ஒப்பனைப் பாணிகள்

கூந்தல் ஒப்பனையில் பல்வகைப் பாணிகள் தமிழ் இலக்கிய நூல்களில் காணப்படுகின்றன. அவை நவநாகரிக மங்கையரும் பின்பற்றக்கூடியன. அவற்றைப் பற்றிய தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. பஞ்சாய்க் கூந்தல்

பஞ்சாய்க் கோரை என்பது தண்டான்கோரை. இது நீளமானது. கூந்தலைப் பின்னாமல் மேற்பகுதியில் தொகுதியாகக் கட்டி நீளமாகத் தொங்கவிடுதலே பஞ்சாய்க் கூந்தல் என்பது.

"பஞ்சாய்க்கோதை மகளிர்".[186]

2. பின்னல்

பின்னலை இக்காலத்தில், சடை என்று கூறுவர். கூந்தலை முக்கூறாகப் பிரித்துக் கொண்டு பின்னுதல் உண்டு. இம்முறையைப் பின்னு, பின்னல் எனவெல்லாம் இலக்கியத்தில் புலவோர் குறித்துள்ளனர்.

பின்னலின் பருமனுக்கும் நீளத்திற்கும் யானையின் துதிக்கை உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது.

பிடிக்கையன்ன பின்னகம்[187]

பிடிக்கையன்ன பின்னுவீழ் சிறுபுறம்[188]

3. வாழைப்பூக் கொண்டை

மெல்லிய சாயலை உடைய மகளிர் தம் கூந்தலை, அப்பொழுது ஈன்ற வாழையின் பூப் போல முடித்துக் கொண்டனர்.[189]

''வாழைப் பூவென பொலிந்த ஓதி''.[190]

4. முற்றமுடிந்த கொண்டை

இந்நாளில் உச்சிக் கொண்டை அல்லது அஜந்தா கொண்டை போல்வது இது.

'சேர்க்க வேண்டுவனவற்றைச் சேர்த்து முற்ற முடிந்த குற்ற மற்ற கொண்டை' என வருணிக்கப்பட்டுள்ளது.[191]

5. மின்னல் கொண்டை

'கார்மேகத்தின் இடைஇடையே பிளந்தோடும் மின்னற்கொடி ஒளிவீசுவதைப் போலப் பொன்னைச் சிறுசிறு கூறுகளாக வெட்டி இணைத்த அழகிய 'வகிர்' என்னும் தலையணியை அணிந்து முடித்த கூந்தல்' என்னும் செய்தி மின்னல் கொண்டையைக் குறிப்பது.[192]

6. மடித்துக் கட்டிய கூந்தல்

புலிநகக் கொன்றையின் மலர்ந்த பூக்களைப் பறித்து வந்து, பூவும் மயிரும் மாறிமாறி வருமாறு இணைத்து வாரி முடிக்கும் அளவு நீண்ட அத்தலை மயிரைத் தோளில் வந்து படியும்படி மடித்து முடித்தல்.[193]

7. கார்த்திகை மீன்களும் கருநாகப் பின்னலும்

அழகிய முகம் மதியை ஒப்பவும், மாணிக்க அணி விளங்கும் பின்னல்மயிர் கார்மேகத்தை ஒப்பவும், அப்பின்னலில் நூலால் கட்டிய இதழ்களைக் கொண்ட மலர்கள் கருநாகத்தின் கருநிறத் துடன் மாறுபட்டுக் கிடக்கும் கார்த்திகை மீன்களின் அழகை ஒப் பவும் அமைந்திருப்பது இப்பின்னல்.[194]

8. இமில் கொண்டை

மைய நூலாக நூற்றாற் போன்ற முடியை அகிலின் புகையை அளைந்து மணம்பெற ஊட்டி, காளையின் திமிலைப் போல முடித் தாள்.[195]

9. வலயக் கொண்டை

வலயக் கொண்டை என்பது வட்டக் கூந்தல் என்றும் கூறப்படும்

நீண்ட கரிய கூந்தலை வட்டவடிவமாகப் புனைந்து அதைச் சுற்றிப் பூமாலையை வட்டமாகச் சூட்டுதல்.

இக்காலத்தில் வளையம் அதாவது 'ரிங்' வைத்து அலங்காரம் செய்வதைப் போன்றது.

இது கம்பராமாயணத்தில் சொல்லப்பட்ட கூந்தல் அலங்காரம்[196]

10. சூழியக் கொண்டை

இக்காலத்தில் இது கிருஷ்ணன் கொண்டை எனப்படுகிறது. தலைமுடியை ஆண் பெண் இருபால் குழந்தைகட்கும் முன்தலையில் கொண்டையாக ஒப்பனை செய்தல்.

குமரகுருபரர் தம் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் இதனைப் பற்றிப் பாடியுள்ளமையைக் காண்கிறோம்.[197]

11. நெகிழ்ந்த கருங்கொண்டை

முக்கூடற்பள்ளு என்னும் நூலில் சொல்லப்பட்டது இக் கொண்டை.

நெற்றியில் மஞ்சணைப் பொட்டு விளங்கியது. அதன்மேல் திருநாமப் பொட்டு இலங்கியது.

கூந்தல் நெகிழ்ந்த கருங் கொண்டையாக முடியிடப்பட்டுப் பின்புறம் நின்றது.[198]

மூத்தபள்ளியின் கூந்தல் அலங்காரம் இது.

12. பக்கக் கொண்டை

மருதூர்ப்பள்ளியின் கூந்தல் ஒப்பனை இது.

அஞ்சனம் தீற்றிய அவளுடைய கண்கள் இரண்டும் அவள் ஒருபக்கமாகப் போட்டிருந்த கொண்டை மீதும் மற்றொரு பக்கத்துக் காதின் குழையினும் தைக்கப் போவனபோலக் குதித்தாடிக் கொண்டிருந்தன.[199]

13. செயற்கை முடி

இனி, இயற்கையில் நீளமான முடியில்லாதபோது செயற்கை முடியை வைத்துக் கொள்ளுதல் இக்காலத்திய, கூந்தல் ஒப்பனை முறைகளில் ஒன்று.

பண்டைக் காலத்திலும் இம்முறை இருந்திருக்கிறது. கவரி மான் மயிரைக் கலந்து முடித்துக் கொண்டனர் என்பது தெரிய வருகிறது.[200]

14. பொய்க்கொண்டை

சிலப்பதிகாரத்தில், இந்திர விழவூரெடுத்த காதையில் "பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்" என்னும் அடிக்கு உரை எழுதிய அரும்பதவுரைகாரர் "பொய்க்கொண்டை முதலியன செய்வோர்" என விளக்கம் தந்துள்ளார். இதனால், பொய்க்கொண்டையை அக்காலத்திலும் பயன்படுத்தினர் என்பது தெரிய வருகிறது. இவை 'ரெடிமேடு' (Ready Made) கொண்டை போன்றனவாகும்.[201]

கூந்தல் ஒப்பனையில் மலர்களும் மாலைகளும்

இயற்கையில் பல்வகை மணங்களையும் பல்வேறு வண்ணங்களையுமுடைய மலர்கள் மலர்கின்றன.

அவற்றையெல்லாம் மிகவும் விரும்பிப் பயன்படுத்தியவர் தமிழர்.

கூந்தல் ஒப்பனைக்கு இவை இன்றியமையாதவையாகக் கருதப்பட்டன.

என்னென்ன மலர்களைத் தமிழர் ஒப்பனைக்குப் பயன்படுத்தினர்; எப்படியெல்லாம் அவற்றைப் புனைந்து தம்மை அழகுபடுத்திக் கொண்டனர் என்பதை இப்பகுதியில் காணப் போகிறோம்.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே அழகுணர்ச்சி நிரம்பிய வாழ்க்கை வாழ்ந்தவர் தமிழர். முடியுடை வேந்தர்களும் குறுநில மன்னர்களும் செல்வக்குடியினரும் மலர்களையும் மாலைகளையும் கொண்டு தம்மை அலங்கரித்துக் கொண்டதுடன், கானவரும் மீனவரும் குறவரும் மறவரும் இடையரும் கடையரும் கூடமலர்களால் தம்மை அலங்கரித்துக் கொள்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

சிலர், மங்கையர்க்கும் மலர்களுக்கும்தான் தொடர்பு உண்டு என்று கருதுவர். ஆனால் பண்டைக் காலத்தில் பெண்டிரேயன்றி ஆடவரும் மலர்களை விரும்பியதுடன், அவற்றை ஒப்பனைப் பொருளாகவும் பயன்படுத்தினர்.

தன் மகன் பொகுட்டெழினியை முதன் முதலிற் காணச் சென்ற மழவர் தலைவன் அதியமான் நெடுமானஞ்சி, ஊசி போன்ற வெண்மையான பனையின் தோட்டுடன் வெட்சி மலரையும் வேங்கை மலரையும் கலந்து சூடிச் சென்றான் என்பதைப் புறநானூற்றின் வாயிலாகப் படிக்கின்றோம்.[202]

ஆறலைக் கள்வர் வெண்கடம்பின் வெண்ணிறப் பூங்கொத்துகளைத் தம் சுருண்ட தலைமயிரில் அழகுபெறச் சூடிக்கொண்டனர்.[203]

அன்னையர் தம் குழந்தைகளுக்கு மலர்களைத் தொடுத்து முடியிலும்[204] கழுத்திலும்[205] அணிவித்தனர்.

பூக்கள் கோட்டுப்பூ, கொடிப்பூ, செடிப்பூ எனவும்; நிலப்பூ, நீர்ப்பூ எனவும் பிரிவுற்றன.

விடுபூ, தொடைப்பூ, கட்டுப்பூ என்னும் மூவகைப் பூக்கள் விற்கப்பட்டன.[206]

தொடுக்கப்பட்ட பூ மாலை, கண்ணி, தார், கோதை, சூட்டு, வலயம், மோட்டு வலயம் எனப் பலவகையின.[207] தளிரால்தொடுத்த மாலை படலை மாலை எனப்பட்டது.[208]

தலையில் அணிந்த மாலை கண்ணி எனப்பட்டது. ஆடவர் கழுத்தில் அணிந்த மாலை 'தார்'எனப்பட்டது. பெண்கள் அணிந்த மாலை 'கோதை' எனப்பட்டது.

வேங்கை மலர்கள் குறிஞ்சி நிலத்திற்குரிய அழகிய மலர்கள்.

வேங்கைப்பூ பூக்கும் பருவம் திருமணம் செய்தற்குரிய பருவம் எனக் கருதப்பட்டது வேங்கை மரத்தின் நறுநிழலில் திருமணங்கள் நிகழ்த்தப்பட்டன.

வேங்கை பூத்ததைக் கண்டாள் தலைமகள் ஒருத்தி. தன்னை அறியாமலேயே கண்ணீர் சொரிந்தாள். வேங்கை பூத்ததும் தலைவன் வாராமையே அதற்குக் காரணம்.[209]

கடவுளர் ஒப்பனையிலும் மலர்கள் பெரிதும் இடம் பெற்றன.

முருகப் பெருமானுக்கு வெண்கடம்ப மாலை அணிவிக்கப் பட்டது.[210] வெட்சிமலரும் அவனுக்கு உகப்பானதே.[211]

முருகப் பெருமானின் வென்றியைக் கொண்டாடும் சூரரமகளிரின் மலர்ஒப்பனை சிறப்பாக அமைந்துள்ளது.

நெடிய மூங்கில்கள் வளர்ந்த வானளாவிய மலை அது. அம் மலையில் சூரர மகளிர் தம்மை அழகுற ஒப்பனை செய்துகொண்டு முருகன் வென்றியைக் கொண்டாடினர்.

வகிர்ப்பெடுத்த கூந்தலில் வெட்சி மலரின் இதழ்களைச் சூடிக் கொண்டனர். அவற்றிடையே, பசிய தண்டினையுடைய குவளை மலரின் இதழ்களைக் கிள்ளிச் செருகினர். மேலும் சீதேவி, வலம் புரி என்னும் தலையணிகளையும் உரிய இடங்களில் அணிந்து கொண்டனர். அத்துடன், திலகம் தீட்டிய நெற்றியின் மேலாக மகர மீன் வடிவுள்ள தலைக்கோலத்தையும் அணிந்து கொண்டனர்.

இவ்வாறு சிறிதும் குறைவின்றிச் சிறப்புற முடித்துக் கொண்ட முற்ற முடிந்த கொண்டையில் பெரிய சண்பக மலரைச் செருகி, மேலே கரிய இதழ்களைக் கொண்ட விரிந்த ஒளிமிக்க மருதம் பூக்களைச் சூடிக் கொண்டனர். கொண்டையைச் சுற்றி, சிவந்த அரும்புகளால் தொடுத்த மாலையை வளைத்துக் கட்டினர். காதுகளில் அளவொத்து வைத்துள்ள அசோகந் தளிர்கள், அழகிய அணிகலன் பொருந்திய மார்பின் மேல் கிடந்து அசையும். நல்ல நிறமுள்ள சந்தனக் குழம்பைக் கோங்கரும்பு போன்ற கொங்கைகளில் அப்பிக் கொண்டனர். அஃது உலரும் பொருட்டு வேங்கை மலரின் பூந்தாதுகளைத் தூவிக் கொண்டனர்[212]

இயல்பாகவே அழகுவாய்ந்த சூரர மகளிர் சோலையில் உள்ள மலர்களாலும், தளிர்களாலும் அழகுக்கு அழகு செய்வது போலத் தம்மை ஒப்பனை செய்து கொண்டு ஆடியும் பாடியும்சேவற்கொடியை

வாழ்த்துகின்றனர். அவர்களின் அழகும் அணிகளும் மலர்அலங்காரமும் எழில்படச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

களவொழுக்கம் நிகழும் இடங்களும் இயற்கை வனப்புடன் பல்வேறு மலர்கள் பூத்துக் குலுங்கும் இடங்களாகவே இருந்தன.

குறிஞ்சிப்பாட்டு பத்துப்பாட்டில் ஒரு முத்துப்பாட்டு. அப்பாட்டின் தலைவி தன் தோழியருடன் தினைப்புனம் காக்கச் சென்று, மலைச்சுனையில் நீராடி, மகிழ்ச்சியுடன் தமிழ் பாடி, தொண்ணூற்றுக்கு மேற்பட்ட மலர்களைக் கொய்து, பாறையின்மீது வகைப்படுத்தி வைத்து, பின்னர் மாலையாகத் தொடுத்துத் தம் நெடிய கூந்தலில் சூடி மகிழ்ந்தனர். அம்மலர்களின் பெயர்களைக் கீழே காண்க:

1. கோடற்பூ
2. ஆம்பற்பூ
3. அனிச்சப்பூ
4. செங்கழுநீர்ப்பூ
5. குறிஞ்சிப்பூ
6. வெட்சிப்பூ
7. செங்கொடு வேரிப்பூ
8. தேமாம்பூ
9. செம்மணிப்பூ
10. பெருமூங்கிற்பூ
11. வில்வப்பூ
12. எறுழம்பூ
13. மராமரப்பூ
14. கூவிரம்பூ
15. வடவனப்பூ
16. வாகைப்பூ
17. வெட்பாலைப்பூ
18. பஞ்சாய்க்கோரை
19. வெண் காக்கணம்பூ
20. கருவிளம்பூ
21. பயினிப்பூ
22. வானிப்பூ
23. குரவம்பூ
24. பச்சிலைப்பூ
25. மகிழம்பூ
26. காயாம்பூ
27. ஆவிரம்பூ
28. சிறு மூங்கிற்பூ
29. சூரைப்பூ
30. சிறு பூளை
31. குன்றிப்பூ
32. முருக்கிலை
33. மருதப்பூ
34. கோங்கம்பூ
35. மஞ்சாடிப்பூ
36. திலகப்பூ
37. பாதிரிப்பூ
38. செருந்திப்பூ
39. புனலிப்பூ
40. சண்பகப்பூ
41. கரந்தைப்பூ
42. காட்டுமல்லிகைப்பூ
43. மாம்பூ
44. தில்லைப்பூ

45. பாலைப்பூ
46. முல்லைப்பூ
47. கஞ்சங் குல்லைப்பூ
48. பிடவு
49. செங் கருங்காலிப்பூ
50. வாழைப்பூ
51. வள்ளிப்பூ
52. நெய்தற்பூ
53. தெங்கிற்பாளை
54. செம்முல்லைப்பூ
55. தாமரைப்பூ
56. ஞாழற்பூ
57. மௌவற்பூ
58. கொகுடிப்பூ
59. பவழ மல்லிகைப்பூ
60, சாதிப்பூ
61. கருந்தாமக் கொடிப்பூ
62. வெண்கோடற்பூ
63. தாழம்பூ
64. சுரபுன்னைப்பூ
65. காஞ்சிப்பூ
66. கருங் குவளைப்பூ
67. ஓமைப்பூ
68. மரவம்பூ
69. தணக்கம்பூ
70. இண்டம்பூ
71. இலவம்பூ
72. கொன்றைப்பூ
73. அடுப்பம்பூ
74. ஆத்திப்பூ
75. அவரைப்பூ
76. பகன்றைப்பூ
77. பலாசம்பூ
78. அசோகம்பூ
79. வஞ்சிப்பூ
80. பிச்சிப்பூ
81. கருநொச்சிப்பூ
82. தும்பைப்பூ
83. துழாய்ப்பூ
84. தோன்றிப்பூ
85. நந்தியாவட்டைப்பூ
86. நறைக்கொடி
87. புன்னாகப்பூ
88. பருத்திப்பூ
89. பீர்க்கம்பூ
90. குருக்கத்திப்பூ
91. சந்தனப்பூ
92. அகிற்பூ
93. புன்னைப்பூ
94. நாரத்தம்பூ
95. நாகப்பூ
96. இருவாட்சிப்பூ
97. குருந்தம்பூ
98. வேங்கைப்பூ
99. மலையெருக்கம்பூ
100. செம்பூ[213]

மேற்கூறிய மலர்களில் சில செடிப்பூ; சில கொடிப்பூ; சில கோட்டுப்பூ; சில காட்டுப்பூ; சில நீர்ப்பூ; சில நிலப்பூ; சில காலையில் மலர்வன; சில மாலையில் மலர்வன; சில இரவில் மலர்வன; சில பகலில் மலர்வன; சில ஒளியில் மலர்வன; சில இருளில் மலர்வன. எனவே இந்நூறு பூக்களையும் ஒரே நேரத்தில் கொய்தனர் எனக் கபிலர் பாடியது கற்பனையின் பாற்பட்டதே.

பலதரப்பட்டோர் ஒப்பனைக்கு மலர்களைப் பயன்படுத்தியமை

முருகனைப் போல் வேலேந்தி வெறியாட்டயர்ந்த வேலன் சாதிக்காயையும் தக்கோலக் காயையும் காட்டு மல்லிகையுடன் வெண்டாளியையும் கலந்து கட்டின தலைமாலையை அணிந்து மணமுள்ள சந்தனத்தையும் பூசியிருந்தான்.

முருகனுடன் குரவைக் கூத்தாடிய மகளிர் தம் விரல் தீண்டியதால் மலர்ந்த மணமுள்ள மலர்களைப் பிணைத்துக் கட்டிய மாலையைச் சேர்த்துக் கூந்தலில் முடித்துக் கொண்டனர். கஞ்சங் குல்லையினையும் இலையுடன் கூடிய மணமுள்ள பூங்கொத்துக் களையும் சேர்த்து, நடுவில் கடம்பின் பூங்கொத்துக்களை வைத்துக் கட்டப்பட்ட, வண்டுகள் மொய்க்கும்படியான அழகிய தழை யுடையை, மேகலை பொருந்திய இடையில் உடுத்திக் கொண்டனர்.

மயிலையொத்த இத்தகைய மகளிருடன் வேலனும் கூத்தினுக் கேற்றவாறு கோலங்கொள்வான்.[214]

நற்றிணை காட்டும் ஒரு காட்சி. தலைவி பல்வித மலர்களைக் கொண்டு தன்னை ஒப்பனை செய்து கொண்டாள். அவள்கூந்தலில் காட்டுமல்லிகை, பாதிரி, செங்கருங்காலி ஆகிய பல மலர்கள் சூட்டப்பட்டிருந்தன.

நறுமணத்துடன் கூடிய ஒரு பூஞ்செப்பினைத் திறந்து வைத் தாற்போன்ற மணத்தை அது அளித்தது.[215]

தொண்டை நாட்டு உமணர், தளிர் விரவின மாலையை அணிந் திருந்தனர்.[216]

அந்நாட்டு இடைமகன் காட்டுமரங்களின் கோட்டிடை பூத்தன வும் கொடியில் மலர்ந்தனவுமாகிய பல்விதப் பூக்களைக் கலந்து கட்டிய 'கலம்பகம்' என்னும் மாலையை அணிந்திருந்தான்.[217]

உழவர்கள் நெய்தற் பூக்களை அணிந்து அதனை வெறுத்த போது, கரிய நிறமுடைய முள்ளிப் பூக்களைத் தண்டான்கோரை யின் நாரால் கட்டி அம்மாலையைச் சூடினர்.[218]

மதுரை நகர வாழ்வரசியர் இரவு நேரங்களில் செங்கழுநீர் மாலையை அணிந்தனர்.[219]

மதுரை நகர வரைவில் மகளிரின் மலர் ஒப்பனை

அகன்ற விண்ணகமெல்லாம் பரந்து கமழும்படி நீர் திரண்டாற் போன்ற வெண்ணிறப் பூக்களால் புனைந்த மாலைகளைக் கொண் டையிலே முடித்து, அழகிய தொடி விளங்கும்படி கையை வீசி நடந்து, அலரும் பருவமாக உள்ள புதிய விடுபூக்களின் மணம் தெருவெங்கும் கமழ, முன்னர்ப் பலருடன் புணர்ந்த புணர்ச்சியால் குலைந்த ஒப்பனைகளைப் பின்னரும் சரிசெய்து கொண்டு, பெரிய செங்கழுநீரின் மணமிக்க பூக்களையும் ஏனைய பூக்களையும் ஒரு பூம்புதர் பூத்ததைப் போலச் சூடிக் கொண்டனர்.[220]

குறிஞ்சிநிலத் தலைவனின் ஒப்பனை

குறிஞ்சி நிலத் தலைவன் ஒருவன் நீலமணி போன்ற நிறத் தினையுடைய தன் கரிய மயிரில் மலையிலும் நிலத்திலும் கிளை யினும் சுனையிலும் பூத்த பன்னிறப் பூக்களை அணிந்திருந்தான். வெண்டாழைக் கண்ணியினைத் தலையில் சூடியிருந்தான். பிச்சி மலர்களால் தொடுத்த மாலையைச் சுற்றிக் கொண்டான். ஒருகாதில் சிவந்த நெருப்புப் போன்ற பூக்களையுடைய அசோகின் தளிரைச் செருகியிருந்தான். அது தோளில் புரளும்படியாக இருந்தது.[221]

கூத்தர், வலையர், ஆயர் ஒப்பனை

கூத்தர்கள் மராமரத்துப் பூக்களையும் யாமரத்துப் பூக்களையும் தளிர்களோடு நாரால் கட்டி மாலையாய் அணிந்தனர்.[222]

வலையர் மகளிர் பகன்றைப் பூக்களால் தொடுத்த கண்ணியைச் சூடினர்.[223]

பல பசுக்களையுடைய ஆயர், கல்லிடத்தனவும் காட்டிடத்தன வுமாகிய மெல்லிய கொத்தினையுடைய கொன்றைப் பூவாலும், மென்மலர்களையுடைய காயாம் பூவாலும், வெட்சிப் பூவாலும், பிடவம்பூவாலும் முல்லைப் பூவாலும், கஞ்சங்குல்லைப் பூவாலும், குருந்தம் பூவாலும், கோடற்பூவாலும், பாங்கர்ப்பூவாலும் ஆன கமழும் கண்ணியைச் சூடினராய் ஏறு தழுவுதலைக் காண வந்தனர்.[224]

மணம் மிகுந்த பிடவமும் முல்லையும், நிறம் மிகுந்த தோன் றியும் கொன்றையும், இவை போன்ற பிற மலர்கள் நெருங்கும்படித் தழையும் கோதையும் இழையும் என்று சொல்லுகின்ற இவற்றைக்

கட்டி அணிந்து, மகிழ்ந்து விளையாடும் இடையர் குலப் பெண்கள் என்பது பிறிதொரு பாட்டில் சொல்லப்பட்ட செய்தியாகும்.[225]

பண்டைத் தமிழர் பயன்படுத்திய பல்வேறு மலர்கள்

அடும்பம்பூ

நெய்தல் நில மணலில் படர்ந்துள்ள கொடிகளில் மலரும் மலர் இது. மலர்கள் குதிரைக் கழுத்திலிடும் சதங்கை மணியைப் போலிருக்கும்.

பெண்கள் இதனை நெய்தல் மலருடன் தொடுத்துக் கூந்தலிற் புனைந்து கொண்டனர்.[226]

தனியாக இதனை மாலையாகத் தொடுத்தும் மகளிர் அணிவதுண்டு.[227]

அலரிப்பூ

இது, அரலை என்றும் சொல்லப்படும். வெறி அயரும் குறிஞ்சி நிலமக்கள் இம்மலர்களை மாலையாகத் தொடுத்து முருகப் பெருமானுக்குச் சூட்டி வழிபட்டனர்.[228]

அல்லி, அனிச்சம், நறா, நீலம், முல்லை

இம்மலர்களையெல்லாம் ஒருங்கே தொடுத்து மாலையாகவும் கண்ணியாகவும் பரத்தையர் அணிந்து கொண்டனர்.[229]

அதிரல்

புனலி, காட்டு மல்லிகை, மோசி மல்லிகை எனவும் இது கூறப்படும். குயிலின் வாயலகு போல் கூர்மையான மொட்டுகளை உடையது இது.

இதன் மலர்களை மாலையாகத் தொடுத்துப் பல காழாகக் கட்டி, தலையில் சூடிக் கொண்டனர்.[230]

ஆம்பல்

ஆம்பற் பூவின் புறவிதழை ஒடித்து விட்டுப் பெண்கள் சூடிக் கொண்டனர்.[231]

ஆம்பற் பூவை, குவளையுடனும் பைந்தழையுடனும் விரவித் தொடுத்து ஆடையாகவும் அணிந்து கொண்டனர். இது ஆம்பல் அகமடிவை எனப்பட்டது.[232] மடிவை - தழை, உடை.

ஆவிரம்பூ

ஊர் ஊராகச் சென்று கூத்து நிகழ்த்தும் கோடியர் ஒரு காட்டில் தங்கினர்.

அக்கூட்டத்தைச் சேர்ந்த பெண்டிர் ஆண்டு மலர்ந்திருந்த ஆவிரம் பூக்களைக் கொய்து மாலையாகக் கட்டித் தம்மை அணி செய்து கொண்டனர்.[233]

எருக்கம்பூ

எவரும் விலக்கும் எருக்கம் பூவையும் கூத்தர் பயன்படுத்தினர் என அகப்பாடலே சொல்லியுள்ளது.

குவிந்த மொட்டுகளையுடைய கொத்தான பூக்களாலாகிய மாலையைக் கோடியர் சென்னியில் சூடிக் கொண்டனர்.[234]

கடப்பம்பூ

இதில் இருவகையுண்டு. அவை வெண்கடம்பு, செங்கடம்பு என்பன.

வெண்கடப்ப மரத்தின் மெல்லிய பூங்கொத்துக்களைத் தண்டுடன் கொண்டு வந்து தலைவியின் முடியில் சூடி மகிழ்ந்தான் ஒரு தலைவன்.[235]

செங்கடம்பை வேலன் சூடினான்.[236]

கணவிரம்பூ

இதுவே செவ்வலரி. இதனையும் மாலையாகத் தொடுத்து அணிந்து கொண்டனர்.[237]

கல்லகாரப்பூ

இதனைக் குளிரிப்பூ என்பர் பரிமேலழகர். இம்மலர்களை மாலையாகத் தொடுத்து மகளிர் புனைந்து கொண்டனர்[238]

காஞ்சி

காஞ்சிப் பூவை மகளிர் அணிந்து கொண்டமை அகப்பாடலில் சொல்லப் பட்டுள்ளது. இது மாலை போன்ற பூங்கொத்துகளை உடையது. இதன் நறுமணமுள்ள பொடியினையும் கூந்தலில் அணிந்தனர்.[239]

காந்தள்

இதில் இருவகை உள்ளன. அவை வெண்காந்தளும் செங்காந்தளும் ஆகும். செங்காந்தளைத் தோன்றி எனவும் குருதிப்பூ எனவும் கூறினர்.

இது குறிஞ்சி நிலப்பூ. மலையெல்லாம் மணக்கும் தன்மையது.

கோவலர் காந்தளின் நீண்ட இதழால் கட்டிய மாலையைக் கண்ணியாகச் சூடினர்.[240]

''கோடல்கண்ணிக் குறவர் பெருமகன்'' என்பதால் குறவரும் இதனை அணிந்தனர் என்பது தெரிகிறது.[241]

காந்தளுடன் முல்லை, குவளை என்பனவற்றையும் கலந்து கோதையாகக் கட்டுவதுண்டு.

காயாம்பூ

இளநீல நிறமுடைய இப்பூங்கொத்துகளைத் தொடுத்துக் கண்ணியாகக் கோவலர் அணிந்து கொண்டனர்.[242]

குராமலர்

வெண்ணிறப் பூக்களை உடைய குராமலர்களை இடையர் விருப்புடன் சூடிக் கொண்டனர்.[243]

குருக்கத்தி

கார்ப்பருவத்தில் மலர்வது குருக்கத்தி. அழகுடைய பஞ்சு போன்ற புறவிதழையுடையது.

இத்துடன் சிறு சண்பக மலரையும் கலந்து தொடுத்து விற்பனை செய்தனர்.[244]

குருந்தம்

முல்லை நிலத்து மரம் குருந்தம். கார் காலத்து மலர்களில் இதுவும் ஒன்று. ஆயன் குருந்தம் பூக்கண்ணியை அணிந்தான்.[245]

குவளை

நீர்ப்பூக்களில் குவளையும் ஒன்று. இது கருங்குவளை, செங்குவளை என இருவகைப்படும். மிகவும் மென்மையுடையது. வண்டுகள் படிந்தவுடன் வாட்டம் பெறுவது.

குவளையுடன் காந்தளையும் முல்லையையும் சேரத் தொடுத்து அணிந்து கொள்ளுதலும்[246] குவளையைத் தனியே கூந்தலுக்குச் சூடிக் கொள்வதும் உண்டு.[247]

குளவி

மலை மல்லிகை, காட்டு மல்லிகைப்பூ என்பதும் இதுவே. குவளையையும் குளவியையும் விரவித் தொடுத்துக் கூந்தலில் அணிந்து கொள்வதுமுண்டு.[248]

கூதளம்

இது கூதாளம் எனவும் கூறப்படும். வெண்ணிற மலர்கள் இவை. மலர் உட்டுளையை உடையது.

பட்டினத்துப் பரதவரும் இதைக் கோதையாகக் கட்டி அணிந்து கொண்டனர்.[249]

கொன்றைப்பூ

முல்லை நிலத்து மரம் கொன்றை மரம் கார்காலத்தில் மலர்வது. இது சரம் சரமாக மலரும். பூக்கள் மஞ்சள் நிறமானவை. பொன்னிற்கும் பொன்னரி மாலைக்கும் பொற்காசிற்கும் உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது.

பூத்துக் குலுங்கும் கொன்றைக்கு ஒப்பனை செய்த மகளிர் உவமையாகக் காட்டப்பட்டுள்ளனர்.[250]

ஞாழல்

ஞாழல் நெய்தல் நில மரமாகும். இதன் மலர்கள் சிறியனவாக இருக்கும். நறுமணம் மிக்க மலர்கள் இவை.

புலிநகக் கொன்றை என்றும் கூறப்படும். கடலாடும் மகளிர் கொய்து வந்த ஞாழற்பூவையும் கழனி உழவரின் குவளை முல்லைப் பூவையும் கலந்து தொடுத்துக் கோசர்கள் கண்ணியாகக் கட்டிச் சூடிக் கொள்வர்.[251]

சண்பகப்பூ

சண்பகப்பூ சிவந்த நிறமுடையது. சிவபெருமானின் மேனி நிறத்திற்கு உவமை கூறப்பட்டுள்ளது.[252] மகளிர் முடித்த கொண்டையில் சண்பகப்பூவைச் சூடிக் கொண்டனர்.[253]

சுரபுன்னை

சுரபுன்னைப் பூவால் மாலை தொடுத்து ஆய்அண்டிரன் அணிந்திருந்தான்.[254] வழைப்பூ என்பதும் இதுவே.[254அ]

செங்கழுநீர்

நீர்ப்பூக்களில் ஒன்று செங்கழுநீர். மாணிக்கம் போன்ற நிறமுடையது. மகளிர் கண் போன்ற செங்கழுநீர்ப் பூக்களை ஊசியால் கோத்துச் சுற்றிக் கட்டிய மாலையை அணிந்து கொண்டனர்.[255]

செருந்திப்பூ

இப்பூ, பொன்னிறமுடையது. இதனை மணமிக்க நெய்தல் மலருடன் அழகுறத் தொடுத்து, நறுமணமிக்க அம்மாலையை மார்பில் அணிந்து கொண்டனர்.[256]

தளவம்

செம்முல்லை என்பதும் இதுவே. இத்துடன் பிடவம், தோன்றி, கொன்றை முதலியனவற்றைச் சேர்த்துக் கட்டிய மாலையை மிலைந்து ஒப்பனை செய்து கொண்டனர் இடையர்கள்.[257]

தாழம்பூ

இது செந்தாழம்பூ, வெண்டாழம்பூஎன இருவகைப்படும். காவிரிப்பூம்பட்டினத்துப் பரதவர் இவற்றைச் சூடி ஒப்பனை செய்து கொண்டனர்.[258]

நரந்தம்

நாரத்தம்பூவும் ஒருவகைப் புல்லும் இப்பெயருடன் வழங்கப் படுகின்றன.

இரண்டுமே மணம் மிகவும் உடையவை. 'நரந்தப் பூவின் மணம் கமழும் தொகுதியான கூந்தல்' எனப் பாராட்டப்பட்டுள்ளது.[259]

நறுமோரோடம்

இது செங்கருங்காலி, சிறுமாரோடம், பசுமோரோடம் என வெல்லாம் இலக்கியத்தில் சொல்லப்பட்டுள்ளது.

'நறுமோரோடம், காட்டுமல்லிகை, பாதிரி ஆகிய மூன்று மலரையும் வைத்த செப்பினைத் திறந்தாற் போன்ற மணம்' எனக் கூந்தலின் மணம் பாராட்டப் பட்டுள்ளது.[260]

பகன்றைப்பூ

இது மணமில்லாத பூ, இதன் பூ, வடிவத்தில் வள்ளம் போலிருக் கும். வெண்மைக்குப் புலவர்களால் எடுத்துக்காட்டப்பட்ட மலர்.

உழவர்கள் உழுகின்றபோது, வெளுக்கப்பட்ட ஆடை போல் குளிர்ந்த நீர்த்துறையில் பூத்த பகன்றைப் பூவைச் சூடினர் எனப் பதிற்றுப்பத்தில் கூறப்படுகிறது.[261]

கோவலரும் பகன்றைப் பூக்கண்ணியைச் சூடினர்.[262] இதனைச் சிவதைப் பூண்டு எனவும் கிலுகிலுப்பைச் செடியன்று எனவும் நச்சி னார்க்கினியரும்[263] 'பெருங்கையால்'[264] என அடியார்க்குநல்லாரும் கூறியுள்ளனர். இது மருதநிலத்துப் பூக்களில் ஒன்று.

பாங்கர்

செடியில் மலரும் மலர். இடையர் அணிந்த மலர்களில் இது வும் ஒன்று.[265]

பாதிரி

தலையில் நுண்ணிய பஞ்சினை உடையது. வெண்ணிற முடையது, வேனிற் காலத்தில் மலர்வது. மலர்கள் வளைந் திருக்கும்.

அதிரல் பூவொடு பாதிரிப் பூவையும் சேர்த்துக் கட்டி மகளிர் ஒப்பனை செய்து கொண்டனர்.[266]

பித்திகை

இக்காலத்தில் இதனைப் பிச்சி என வழங்குகின்றனர். இதன் அரும்பு சிவந்த நிறமுடையது. இதனைச் சிறுசண்பகம் என்கிறார் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர். இம்மலர்களையும் தொடுத்து மாலையாக அணிந்து கொண்டனர்.[267]

புன்னை

தழைத்த தேன்பரந்த புன்னையின் பூங்கொத்தால் ஆன மாலையை ஆடவர் சூடினர்.[268]

மயிலை

இருவாட்சி அல்லது இருள்வாசி எனவும் பெயர் பெறும். நள்ளிரவில் மலரும் மலர். காட்டுக் காக்கையின் தழைத்த சிறகு போன்றது.

இம்மலர்களும் ஒப்பனைக்குப் பயன்பட்டது.[269]

முண்டகம்

கழிமுள்ளி என்பதுவும் இது. கடற்கரை மண்ணில் மலர்வது; கரிய நிறமுடையது; வடிவில் முத்துக்களைப் போன்றது. இம்மலர் களும் பெண்களால் விரும்பப்பட்டன.[270]

வெட்சிப்பூ

வெட்சி, காட்டில் தழைத்து வளர்வது. முள்ளைப் போன்ற அரும்புகளை உடையது.

வெட்சி மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளை வையையில் நீராடின பெண்கள் அணிந்திருந்தனர் என்பதால் ஒப்பனைக்கு இம்மலரும் பயன்பட்டமை தெரிகிறது.[271]

வேங்கைப்பூ

மஞ்சள் நிறமாகவும் கொத்துக் கொத்தாகவும் மலரும் பூ வேங்கைப்பூ. செந்நெல்லை இப்பூவிற்கு உவமையாகக் கூறியுள்ளனர்.[272]

வேங்கைப்பூவை நறைக்கொடியின் நாரினால் கண்ணியாகத் தொடுத்து வேடுவர் அணிந்து கொண்டனர்.[273]

வேப்பம்பூ

பண்டைத் தமிழர் வேப்பம்பூவையும் ஒப்பனை மலராகப் பயன்படுத்தினர்.

பனைமரத்தின் குருத்தோலையில் பாலை நிலத்திலுள்ள வேப்ப மரத்தினது நெருக்கமான வெண்ணிற மலரைச் சுருண்ட தலைமயிரில் விளங்கும்படி சூடிக் கொண்டான் தலைவன் ஒருவன்.[274]

அடிக்குறிப்புகள்

1. அகம். 308 : 13.
2. குறுந் . 270; 8.
3. பதிற். 50:19.
4. கலி. 71: 19.
5. குறுந். 254:5.
6. ,, 225: 6—7.
7. புறம். 146:8—9.
8. ஐங். 74:1.
9. குறுந். 209:7.
10. மதுரைக், 417.
11. அகம். 155: 4.
12. பதிற்றுப். 18: 4.
13. அகம். 225:15.
14. அகம். 126:19—20.
15. குறுந். 21:1—3.
16. பொருநர். 25.
17. குறுந். 286:2—3.
18. மலைபடு. 304.
19. கலி. 22:12—13.
20. நற். 166:1—2.
21. ,, 245;2—3.
22. ,, 337:7—8.

23. நற். 42:8.

24. குறுந். 113:5.

25. ,, 372: 5.

26. பெருங். 1:40:28.

27. பரி. 10:90—91.

28. சிலம்பு. அய்யர் பதிப்பு, பக். 193.

29. ,, ,, ,, பக். 177.

30. பிங்கலம், அய்யர் வகை 78.

31. சிலம்பு. அய்யர் பதிப்பு 6:76.

32. ,, ,, ,, பக். 193.

33. ,, ,, ,, 6:80—81.

34. புறம். 146;8-10.

35. சிறுபாண். 263.

36. குறுந். 286:2-3.

37. அகம். 141:13.

38. குறிஞ். 107-110.

39. பெருமழைப் புலவர், பரி. உரை,பக்.211.

40. நச்சர். சீவக. உரை, பாடல் 2437.

41. அகம். 126:20.

42. ,, 155:4.

43. சிறுபாண். 60.

44. அகம். 223 : 12.

45. நற். 100:4.

46. அகம்.212:3.

47.. ஐங். 84:3.

48. பதிற்றுப். 18:4.

49. கலி. 131:39.

50. நற். 133:5.

51. ,, 245:3.

52. ,, 140:3.

53. அகம். 181:23.

54. மலைபடு.30.

55. கலி. 57:1.

56. அகம்.152:3.

57. கலி. 140:23.

58. ,, 57:1.

59. அகம். 177:5.

60.	கம்ப	அண்ணா.	பதிப்பு,	பா. எண்	4300.
61.	,,	,,	,,	,,	4609.
62.	,,	,,	,,	,,	1019.
63.	,,	,,	,,	,,	4300.
64.	,,	,,	,,	,,	4300.
64.அ.	,,	,,	,,	,,	1939.
65.	,,	,,	,,	,,	3257.
66.	,,	,,	,,	,,	4300.
67.	,,	,,	,,	,,	6210.
68.	,,	,,	,,	,,	2098.

69.	கம்ப.	அண்ணா.	பதிப்பு,	பா. எண்.	339.
70.	,,	,,	,,	,,	1168.
71.	,,	,,	,,	,,	2166.
72.	,,	,,	,,	,,	2017.
73.	,,	,,	,,	,,	2101.
74.	,,	,,	,,	,,	876.
75.	,,	,,	,,	,,	4635.
76.	,,	,,	,,	,,	10282.
77.	,,	,,	,,	,,	1112.
78.	,,	,,	,,	,,	9366.
79.	,,	,,	,,	,,	1164.
80.	,,	,,	,,	,,	(சுந். 1081).
81.	,,	,,	,,	,,	10271.
82.	,,	,,	,,	,,	861.
83.	,,	,,	,,	,,	1066.
84.	,,	,,	,,	,,	சுந். 318.
85.	,,	,,	,,	,,	4611.
86.	,,	,,	,,	,,	சுந்.680.
87.	,,	,,	,,	,,	8959.
88.	,,	,,	,,	,,	சுந். 688.
89.	,,	,,	,,	,,	3417.
90.	,,	,,	,,	,,	3257.
91.	,,	,,	,,	,,	2104.
92.	,,	,,	,,	,,	857.

93. கம்ப. அண்ணா. பதிப்பு, பா. எண் 4631.
94. ,, ,, ,, ,, சுந்.339.
95. ,, ,, ,, ,, 4596.
96. ,, ,, ,, ,, 235,
97. ,, ,, ,, ,, 1027.
98. ,, ,, ,, ,, 3740.
99. ,, ,, ,, ,, 850.
100. ,, ,, ,, ,, 3448
101. ,, ,, ,, ,, 1212.
102. ,, ,, ,, ,, 1055.
103. ,, ,, ,, ,, 4391.
104. ,, ,, ,, ,, 2018.
105. ,, ,, ,, ,, 7137.
106. ,, ,, ,, ,, 1234.
107. ,, ,, ,, ,, 1055.
108. ,, ,, ,, ,, 4281.
109. ,, ,, ,, ,, 227.
110. ,, ,, ,, ,, 3232.
111. ,, ,, ,, ,, 3242.
112. ,, ,, ,, ,, 1263.
113. ,, ,, ,, ,, 4775.
114. ,, ,, ,, ,, 1077.
115. ,, ,, ,, ,, 3574.
116. ,, ,, ,, ,, 778.

117.	கம்ப.	அண்ணா.	பதிப்பு,	பா. எண்	2548.
118.	,,	,,	,,	,,	சுந். 276.
119.	,,	,,	,,	,,	பா. 1582.
120.	,,	,,	,,	,,	1939.
121.	,,	,,	,,	,,	859.
122.	,,	,,	,,	,,	1181.
123.	,,	,,	,,	,,	3841.
124.	,,	,,	,,	,,	4611.
125.	,,	,,	,,	,,	4609.
126.	,,	,,	,,	,,	1038.
127.	,,	,,	,,	,,	1981.
128.	,,	,,	,,	,,	4675.
129.	,,	,,	,,	,,	சுந். 278.
130.	,,	,,	,,	,,	4450.
131.	,,	,,	,,	,,	8967.
132.	,,	,,	,,	,,	3817.
133.	,,	,,	,,	,,	7854.
134.	,,	,,	,,	,,	10070.
135.	,,	,,	,,	,,	1052.
136.	,,	,,	,,	,,	2036.
137.	,,	,,	,,	,,	1148.
138.	,,	,,	,,	,,	சுந். 434.
139.	,,	,,	,,	,,	3316.
140.	,,	,,	,,	,,	4757.

141.	கம்ப.	அண்ணா.	பதிப்பு,	பா. எண்	1206.
142.	,,	,,	,,	,,	771.
143.	,,	,,	,,	,,	3233.
144.	,,	,,	,,	,,	877
145.	,,	,,	,,	,,	1278.
146.	,,	,,	,,	,,	6250.
147.	,,	,,	,,	,,	2021.
148.	,,	,,	,,	,,	8414.
149.	,,	,,	,,	,,	1221.
150:	,,	,,	,,	,,	3233.
151.	,,	,,	,,	,,	சுந்.297.
152.	,,	,,	,,	,,	2887,
153.	,,	,,	,,	,,	9043.
154.	,,	,,	,,	,,	2019.
155.	,,	,,	,,	,,	2898.
156.	,,	,,	,,	,,	10272.
157.	,,	,,	,,	,,	1299.
158.	,,	,,	,,	,,	சுந்.99
159.	,,	,,	,,	,,	328.
160.	,,	,,	,,	,,	1205.
161.	,,	,,	,,	,,	840.
162.	,,	,,	,,	,,	870
163.	,,	,,	,,	,,	சுந். 1207.

164. கம்ப. அண்ணா. பதிப்பு பா. எண் 2038.

165. ,, ,, ,, ,, 1152.

166. ,, ,, ,, ,, 4417,

167. ,, ,, ,, ,, 4587.

168. ,, ,, ,, ,, 73.

169. ,, ,, ,, ,, 3032.

170. குறுந். 2.

171. பதிற். 89:15-16.

172. அகம். 181:23.

173. குறுந். 52:3.

174. புறம். 235 : 8,9

175. குறுந். 300.

176. குறுந். 286:2-3.

177. அகம். 204:12-13.

178. புறம். 70: 13 ,14

179. பதிற்றுப். 21:32-33.

180. ஐங். 173.

181. நற்றி. 6:8-9.

182. குறுந், 312.

183. அகம். 399:1-2.

184. மலைபடு. 30.

185. நற். 100:4.

186. ஐங். 76:1.

187. அகம். 9:22.

188. சிறுபாண். 191.

189. நற். 225:3-5.

190. சிறுபாண். 21-22.

191. திருமுரு. 26.

192. கலி. 55:1-2.

193. ,, 56:2-4.

194, ,, 64:1-4.

195. சீவக. 2437.

196. கம்ப. இராமா. அண்ணா. பதிப்பு. 1205.

197. மீனாட்சி.பிள்ளை. 14:2.

198. முக்கூடற். 2.

199. ,, 4.

200. பதிற்றுப். 43:1.

201. சிலம்பு.5:34 அரும்பதவுரை

202. புறம். 100:4-5.

203. அகம். 127: 13-14.

204. ,, 5:23.

205, கலி. 85:14.

206. சிலம்பு: அய்யர் பதிப்பு:பக். 153.

207. பரி. 20:28.

208. ,, 20:30.

209. குறுந். 241.

210. திருமுரு. 10.

211. திருமுரு. 208.

212. ,, 12-42.

213. குறிஞ். 61-96.

214. திருமுரு. 190-205.

215. நற். 337.

216. பெரும்பாண். 60.

217. ,, 173-74.

218. ,, 216-19.

219. மதுரைக் 550-51.

220. ,, 561-69.

221. குறிஞ். 114-20.

222. மலைபடு: 428-31.

223. ,, 459.

224. கலி. 103:1-4.

225. ,, 102:2-5.

226. குறுந். 401.

227. நற். 145.

228. குறுந். 214.

229. கலி. 61;1-3.

230. அகம். 213-4.

231. குறுந். 80.

232. அகம். 226:3.

233. ,, 301.

234. ,, 301.

235. ,, 221:7-9.

236. நற். 34.

237. அகம். 31;9.

238. பரி. 11:103.

239. அகம். 296,1-2.

240. நெடுநல். 5, 6.

241. புறம். 157:7.

242. கலி. 108:10.

243. நற். 266.

244. ,, 95:6-7.

245. கலி. 111:7.

246. குறுந். 62:1-3.

247. ,, 300:1.

248. ,, 59:3.

249. பட்டினப். 85.

250. குறுந். 21.

251. அகம். 216:8-11.

252, கலி. 150:21.

253. திருமுரு. 27;

254. புறம். 131.

254 அ. உ. வே. சா. பதிப்பு:
பத்துப்: பக். 624
நச்சர். உரை.

255. அகம். 48:8-9.

256. ஐங். 182.

257. கலி. 102:2.

258. பட்டினப். 88.

259, குறுந். 52:3.

260. நற். 327.

261. பதிற். 76:12-13.

262. ஐங். 87;1.

263. குறிஞ்சிப். 88.

264. சிலம்பு.
அடியார்க். 13:157.

265. கலி. 103:3.

266. நற். 32:2.

267. ,, 314.

268. புறம். 24:7-8.

269. ,, 342;1-2.

270. நற். 245:2-3.

271. பரி. 22:22.

272. புறம். 390:21-22.

273. அகம். 282:9-10.

274. குறுந். 281:2-4.

இயல் 5

இயல் - 5

முக ஒப்பனை

மனித உறுப்புகளில் தலை முதன்மையானது. தலையிலும் முகம் சிறப்பானது.

முகத்தில்தான் கண், காது, மூக்கு, புருவம், நெற்றி, உதடுகள் முதலியன உள்ளன.

எனவே முக ஒப்பனை என்பது இவ்வுறுப்புகளின் ஒப்பனை யாகவே அமைகின்றது.

ஒப்பனைகள் இன்றி இருந்த கண்ணகியைப் பற்றி இளங்கோ வடிகள் கூறுகையில்.

''கொடுங்குழை துறந்த வடிந்துவீழ் காதினள்
....
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப
பவளவாள் நுதல் திலகம் இழப்ப''

எனக் கூறியுள்ளார்.[1]

இதில் காதுகள் குழையைத் துறந்தும், கண்கள் அஞ்சனம் மறந்தும், நுதல் திலகம் இழந்தும் இருந்தன என்பது முக ஒப்பனை செய்யப்படவில்லை என்பதையே புலப்படுத்துகின்றது.

கண்ணிமை ஒப்பனை

பெண்களில், ஒப்பனையில் கண்களுக்கு மை தீட்டுதல் இன்றி யமையாததாகக் கருதப்படுகிறது.

மையை அஞ்சனம் என்றும் கூறுவர். மைகூட்டுதல் அநேக மாக எல்லாப் பெண்களும் அறிந்த கலை.

கூட்டிய மையை மருதநிலத்துச் சிறு தொழுமகளிர் வேழக் கரும்பின் புழை பொருந்திய திரண்ட தண்டில் சேமித்து வைப்பர்.[2]

மை தீட்டின கண்கள்' உண்கண்' எனச் சங்கச் செய்யுள்களில் குறிக்கப்பட்டுள்ளன. இதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

உண்கண் பசப்பது எவன்கொல்[3]
மடவரல் உண்கண், வாள்நுதல் விறலி[4]

சீதாப்பிராட்டிக்கு ஒப்பனை செய்த மகளிர், விழிகளுக்கு மை தீட்டியமையைக் கம்பரும் குறிப்பிட்டுள்ளார்.[5]

நெற்றி ஒப்பனை

திலகம் என்னும் சொல் நெற்றிப் பொட்டு, சிறந்தது, மஞ்சாடி மரம், திலகக் கலித்துறை என்னும் நான்கு பொருள்களையுடைய சொல் எனத் 'தமிழ் லெக்சிகன்' கூறுகிறது.

சங்க காலத்திலும் திலகம் தீட்டிக் கொள்ளும் வழக்கம் இருந்திருக்கிறது.

'திலகம்' என்பது பொன்னாற் செய்த ஓர் அணிகலனையும் குறிக்கும்.

''தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்''[6]

"ஒண்ணுதல் யாத்த திலகம்"[7]

இங்குத் திலகம் என்னும் சொல் அணிகலனையே குறித்தது. ஆனால்,

"தேங்கமழ் திருநுதல் திலகம் தைஇயும்"[8]

"திலகம் தைஇய தேங்கழ் திருநுதல்"[9]

இங்கே, திலகம் என்பது தீட்டிக் கொள்ளும் திலகத்தையே குறித்தது. சீதாப்பிராட்டியை ஒப்பனை செய்த மகளிர் திலகம் தீட்டியதைக் கம்பரும்.

"திலகத்தைத் திலகம் செய்தார்"[10]

என்றும் குறித்துள்ளார்.

முக ஒப்பனையில் திலகம் எவ்வளவு முக்கியமானது என்பதைப் பெருங்கதை ஆசிரியர்,

"திருமதி என்னத் திலக வாண்முகம்"[11]

என்றே கூறியுள்ளார்.

குழந்தைகட்குக் கூட, குளிப்பாட்டியபின் ஒப்பனை செய்யும் போது திலகம் தீட்டினர்.[12] மண்பொட்டு வைத்தல் இக்காலத்தில் கூட வழக்கமாக இருக்கிறது.

முக ஒப்பனையில் சுண்ணம்

முக ஒப்பனைக்கு மணச்சுண்ணத்தைப் பூசிக் கொள்ளும் வழக்கம் பரவலாக இருந்தது.

முன்னரே சுண்ணம் தயாரித்தல் குறித்துச் சொல்லப்பட்டது.

நறுமணப் பொடியைச் சோதித்து அவற்றின் தரமும் நிருணயிக்கப்பட்டது.

சீவகசிந்தாமணி ஒரு நிகழ்ச்சி வாயிலாக இதனை விளக்கு கின்றது.

குணமாலை, சுரமஞ்சரி என்னும் இரு பெண்களும் உயர்குடி யைச் சார்ந்தவர்கள். செல்வச் செழிப்பும் கலையுள்ளமும் கொண்ட இப்பெண்கள், சுண்ணம் தயாரித்தலில் வல்லவர்கள். இவர்களுக்குள் எவர் சுண்ணம் உயர்ந்தது என்பதை அறிய வேண்டுமென்ற போட்டி எழுந்தது.

இப்பெண்களின் தோழியர் சீவகனிடம் சென்று 'உயர்ந்த சுண்ணத்தை உண்மையாக அறிந்து அண்ணல் சொல்க' என வேண்டிக் கொண்டனர்.

கோடையில் இடிக்கப்பட்டதால் குணமாலையின் பொடி, குளிர்காலத்தில் இடித்த சுரமஞ்சரியின் பொடியை விட உயர்ந்தது என்றான்.

அதைத் தோழி ஒப்புக் கொள்ள மறுத்து, உரிய முறையில் மெய்ப்பிக்க வேண்டுமென்றாள்.

சீவகன் இரண்டு பொடிகளையும் இரு கைகளிலும் வாங்கி அவற்றை விண்ணிலே தூவினான். சுரமஞ்சரியின் சுண்ணப்பொடி கீழே விழுந்தது. குணமாலையின் பொடியை வண்டுகள் விரும்பி யுண்டன.

சுரும்புகள் விரும்பும் பொடியே சிறந்த பொடி என்பது, மெய்ப்பிக்கப்பட்டது.[13]

இத்தகு சுண்ணத்தை உடல் முழுதும் பூசிக் கொண்டு ஒப்பனை செய்து கொண்டனர்.

முகம், மார்பு, முதுகு முதலியவற்றிலெல்லாம் பூசிக் கொண்டதைப் பின்வரும் சீவகசிந்தாமணிப் பாடல் உணர்த்துகின்றது.

> எரிபணிச் சுண்ணம் மின்னும் இருஞ்சிலை முத்தம்சேர்த்தி
> திருமணி முலையின் நெற்றிச் சிறுபுறம் செறியத்தீட்டி
> புரிமணி ஆகத்து அய்தா விரல்நுதி கொண்டுபூசி.[14]

பெருங்கதையும் முகத்திற்கு மணப்பொடி பூசிக்கொண்டதை,

> விரலிற் கொண்ட வெண்ணிற நுண்தாது
> விரிகதிர் மதியின் விளங்கொளி அழிப்ப
> நிறம்பெற உரிஞ்சி நேர்துகில் துடைத்தும்[15]

எனக் கூறுகிறது.

'விரலில் எடுத்துக்கொண்ட வெண்ணிற நுண்ணிய மணப் பொடியினை முகத்தில் தடவித் திங்கள் ஒளியினும் மிக ஒளிபெறும் படி திறமுண்டாகத் தேய்த்தும் பின்னர் துகிலால் துடைத்தும் ஒப்பனை செய்தனர்' என்பர்.

புருவ ஒப்பனை

வாசவதத்தையின் முக ஒப்பனைக்கு முன், புருவம் ஒதுக்க வேண்டி நாவிதன் அதனைச் செய்து முடித்தான். அதனை "வாட்டொழில் கம்மம்" என்றார் கொங்குவேளிர்.

"'பொலிவுற்ற முகத்தினுக்குப் பொருந்தும்படியாக, மூரி கொள்ளாதவனாய், விரைதல் இலனாய்க் கொட்டாவி கொள்ளாதவனாய், மறந்தும் அயலவரை நோக்காதவனாய், அழகு பொருந்திய நெடுந்தகையின் குறிப்பினின்றும் பிறழாதவனாய், கண்ணாலும் மனத்தாலும் கையாலும் செய்தமைத்த தொழிலின் முடிவினை வகுத்த பின்னர் பிறரை எஞ்ஞான்றும் எதிர்த்து நோக்காத வாசவதத்தையின் முகத்தினையும் புருவம் ஒதுக்கும் பணியினைச் செய்ய, சந்திரனின் களங்கத்தை அகற்றினாற் போல இயல்பாகவே ஒளிமிகுந்த முகம் மேலும் விளங்கும்படி தன் தொழிலைச் செய்து முடித்தான்''.[16]

உதடுகளின் ஒப்பனை

வாயும் உதடும் சிவந்து இருப்பது அழகின் இலக்கணமாகக் கருதப்பட்டது; கருதப்படுகிறது.

பின்வரும் தொடர்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இலவிதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்[17]

இன்னகைத் துவர்வாய்[18]

எரிமலர்ச் செவ்வாய்[19]

கொவ்வைச் செவ்வாய்[20]

பவழச் செவ்வாய்[21]

முருக்கிதழ்[22]

கொவ்வை நோக்கிய வாய்[23]

இயல்பாகவே சிவந்த உதடுகளைச் செயற்கையாகவும் சிவப்பாகச் செய்வது ஒப்பனை முறையில் ஒன்றாகும்.

இக்காலத்தில் உதட்டுக்குச் சாயம் (Lipstick) பூசிக்கொள்கின்றனர். அக்காலத்திலும் இம்முறை இருந்திருக்கிறது.

அடிக்குறிப்புகள்

1. சிலம்பு. 4:51-54.
2. ஐங். 16:1-2.
3. ,, 21:4.
4. புறம். 89:2.
5. கம்ப. அண்ணா. 1216.
6. திருமுரு. 23-24,
7. கலி. 92:85
8. அகம். 389:3.
9. நற். 62:6.
10. கம்ப. அண்ணா. 1217.
11. பெருங். 2,7:105.
12. சீவக. 305:4.
13. ,, 894.
14. ,, 625..
15. பெருங். 2:4:189-191.
16. ,, 2:4:172-182.
17. பொருநர். 27.
18. பெருங். 2:2:48.
19. ,, 1: 37:119.
20. ,, 4:12;35.
21. ,, 4:10:148.
22. கம்ப. 787, கம்பன் கழகம், சென்னை, 1976.
23. ,, 821, ,, ,, ,, 1976.

தமிழரின்
ஒப்பனைக் கலைத்திறன்

இயல் 6

இயல் - 6

நக ஒப்பனை

நக ஒப்பனை இக்காலத்தில் சிறப்பாகக் கருதப்படுகிறது. நகம், தலைமுடி முதலியவை எப்போதும் வளர்ந்து கொண்டே இருப்பவை.

எனவே, சிலர் இவற்றைச் சீவிக் குறைத்துக் கொள்கின்றனர். சிலர் நீளமாக வளர்த்துக் கொள்கின்றனர்.

இக்காலத்தில் கைவிரல் நகங்களுக்கும் கால்விரல் நகங்களுக்கும் பல்வித வண்ணப்பூச்சு செய்து கொள்ளப்படுகிறது.

பண்டைக்காலத்தில் சிவப்பு நிறம்தான் மக்களால் விரும்பப்பட்டது. பொருநராற்றுப்படையின் ஆசிரியர் முடத்தாமக்கண்ணியார் நகத்திற்குக் கிளிமூக்கினை உவமையாகக் கூறியுள்ளதைக் காண்கிறோம்.

> கிளிவா யொப்பின் ஒளிவிடு வள்ளுகிர்[1]

பெருங்கதையாசிரியரும்,

> கிளிவா யன்ன ஒளிவா யுகிரின்[2]
> கிள்ளை வாயி னன்ன வள்ளுகிர்[3]

என்னும் அடிகளும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

அகப்பாடல் ஒன்றும் நக ஒப்பனையைக் கூறியுள்ளது.

> குவிமுகை முருக்கின் கூர்நுனை வையெயிற்று
> நகைமுக மகளிர் ஊட்டுகிர் கடுக்கும்,[4]

இதில் 'ஊட்டுகிர்' என்பது, செம்பஞ்சி ஊட்டப்பட்ட என்னும் பொருளைத் தருகிறது.

பெருங்கதை ஆசிரியரும் வாசவதத்தையின் ஒப்பனையைப் பற்றிச் சொல்லும்போது,

''சிவந்த அடியின் அழகுக்கேற்ப பாதித் திங்கள் போல நகத்தினைக் குறைத்து, அழகும் நிறமுமுடைய கல்லால் நல்ல நிறம்பெறும்படி தேய்த்தனர்'' என்பர்.

> ''சேவடிக் கேற்பச் செழுமதிப் பாகென
> வாருகிர் குறைத்து வனப்பு வீற்றிரீஇய
> ஒண்ணிறக் கல்லின் நன்னிறம் பெறீஇ''[5]

என்பன அவ்வடிகள்.

நக ஒப்பனையை 'உகிர்வினை' என்றார் திருத்தக்கதேவர்,

> உகிர்வினை செய்து, பஞ்சி ஒள்ளொளி அரத்தம் ஊட்டி[6]

எனப் பாடியுள்ளார்.

> 'நகங்களை அழகுபடச் சீவி, பஞ்சியை ஊட்டி'

என்பது இதன் பொருள்.

எனவே நக ஒப்பனையிலும் பண்டைத் தமிழர் கருத்தைச் செலுத்தியுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிய வருகிறது.

அடிக்குறிப்புகள்

1. பொருநர். 34.
2. பெரும். 2:15;76.
3. ,, 4:7:42
4. அகம். 317:4-5.
5. பெரும். 186-88.
6. சீவக. 2540.

இயல் 7

இயல் - 7

ஒப்பனையில் நறுமணப் பொருள்களும் வண்ணப் பொருள்களும்

தமிழ் மக்கள் ஒப்பனைக்கு நறுமணச் சுண்ணங்களையும் நறுமணப் பொருள்களையும் நிறமூட்டும் பொருள்களையும் பயன்படுத்தியுள்ளனர்.

பெண்டிர் நறுமணப் பொருள்களைத் தயாரித்தலில் நாட்டம் செலுத்தினர்.

சிலர் இவற்றைப் பெருமளவில் தயாரித்து வீதிகளில் சென்று விற்பனையும் செய்தனர்.

> வண்ணமும் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும்
> பூவும் புகையும் மேவிய வரையும்
> பகர்வனர் திரிதரும் நகர வீதியும்[1]

என்னும் சிலம்பின் அடிகள் இதனைத் தெரிவிக்கின்றன.

இயற்கையில் கிடைக்கும் பொருள்களான சந்தனம், அகில், தகரம், நறைக்கொடி, புழுகு, கத்தூரி முதலியவற்றையும் செயற்கையாகச் செய்யப்பட்ட சுண்ணம், பனிநீர், கருப்பூரம், மணநெய் முதலியவற்றையும் பயன்படுத்தினர்.

மேற்கூறிய பொருள்கள் சிலவற்றை அரைத்துச் சாந்தாகவும் குழம்பாகவும், சிலவற்றை இடித்துச் சுண்ணமாகவும், சிலவற்றை எரித்துப் புகையாகவும், சிலவற்றை நெய்யாகவும் நுகர்ந்தனர்.

இவையன்றி வண்ணப் பொருள்களான அலத்தகம், அஞ்சனம், குங்குமம் முதலியன பற்றியும் சொல்லப்பட்டுள்ளன.

இவ்வியலில் இவற்றைப் பற்றிக் காண்போம்.

சந்தனம்

மணந்தரும் மரங்களில் சந்தன மரம் சிறப்பானது. நன்கு முற்றி வயிரமேறிய சந்தன மரத்தை அரைத்தும், நெருப்பிலிட்டுப் புகைத்தும் பயன் கொண்டனர்.

தமிழகத்துக் காடுகளில் இயற்கையாகவே வளர்வன சந்தன மரம். ஆரம் எனவும் இது சொல்லப்படும். இவற்றில் பலவகை யுண்டு என்பதை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் வரைந்துள்ளார்.[2] அவை:

மலையாரம், தீமுரன்பச்சை, கிழான்பச்சை, பச்சை வெட்டை, அரிசந்தனம், வேரச்சுக்கொடியென்று சொல்லப்பட்ட பலவகையின.

திண்ணிய வயிரம் ஏறிய நறிய சந்தனத்தை அரைத்து அதனைக் குழம்பாகச் செய்து மகளிரும்,[3] மைந்தரும்[4] தம் மார்பில் அப்பிக் கொண்டனர்.

மலையமான் திருமுடிக்காரியின் காடு சந்தன மரங்களுக்குப் பெயர் பெற்றது. புலவோர் புகழ்ந்து பாடும் அளவுக்குப் பெயர் பெற்றது. இதனைக் கபிலர் பாடல் ஒன்று அறிவிக்கிறது.[5]

சுண்ணம் தயாரித்தற்குரிய மணப்பொருள்களில் சந்தனமும் ஒன்று என்பது நச்சினார்க்கினியர் உரையால் தெரிய வருகின்றது.[6]

வட்ட வடிவமான வடநாட்டுக் கல் சந்தனம் அரைத்தற்குப் பயன்படுத்தப்பட்டது.[7]

அகில்

மணம் கமழும் மரங்களில் அகிலும் ஒன்று. தமிழக மக்கள் ஒப்பனைக்குப் பயன்பட்ட பொருள்களில் இதுவும் ஒன்று.

இதுவும் சாந்தாகவும், புகையாகவும் பயன்பட்டது.

அகிற் கட்டையிலும் பலவகை உள்ளன என்பதை அடியார்க்கு நல்லார் கூறியுள்ளார்.[8] அவை:

அருமணவன், தக்கோலி, கிடாரவன், காரகில் என்பன.

அகிற்புகையைப் பெண்டிர் கூந்தலைப் புலர்த்துதற்கும் மணமூட்டுதற்கும் பயன்படுத்தினர்.[9]

குளிர் காலத்தில் தீக்காய்வதற்கும் நறுமணம் மிக்க அகிற் கட்டை பயன்பட்டது.[10]

ஆடைகளுக்கு மணமூட்டவும் அகிற்புகை பயன்பட்டது.[11]

அகிலின் நெய்யைப் புலர்த்திய முடிக்குப் பூசிக் கொண்டனர்.[12]

தகரம்

தகரம் என்பது மரவகைகளில் ஒன்று. இதனைச் சுட்டுக் கரியாகப்பண்ணி அரைத்து முடிக்குப் பூசிக் கொண்டனர். இதனை மயிர்ச் சந்தனம் என்றும் மயிர்ச்சாந்து என்றும் கூறினர்.

தகரம் மணக்கும் குளிர்ச்சிமிகு கூந்தல் என்பது பல பாடல் களில் சொல்லப்பட்டுள்ளது.[13]

தகர விறகை நெருப்பு மூட்டி[14] அதில் அகிற்கட்டையையும் அயிரையையும் இட்டுப் புகைத்துப் பயன்கொண்டனர்.

நறைக்கொடி

இக்கொடி இயல்பாகவே மணமுடையது. இதனைக் குளிர்ச்சி மிக்க நறுமணம் கமழும் நறைக்கொடி என்று பாடியுள்ளார் கபிலர்.[15]

நறைக்கொடியின் நாரினால் தொடுத்த வேங்கை மலர்களா லான கண்ணியை அணிந்தனர் என்பதைப் புறப்பாடலும்[16] அகப்பாடலும்[17] கூறுகின்றன.

மணச்சாந்து

இதனைக் குளிர்ச்சியான மணம் மிக்க 'பசுங்கூட்டு' என்பர் அடியார்க்குநல்லார்.[18] சாந்து அரைக்கும் அம்மியில் கத்தூரி, சந்தனம் முதலிய பொருள்களை இட்டு அரைப்பர்.[19]

பஞ்சவாசம்

பஞ்சவாசம் என்பது ஐந்து விதமான மணப்பொருள்கள் என்பர்.

பாக்குடன் பஞ்சவாசத்தைச் சேர்த்து இடித்து வாயிலிட்டுக் கொள்ளும் வழக்கம் இருந்திருக்கிறது.[20]

பஞ்சவாசம் இன்னின்ன என்பதைத்

தக்கோலம் தீம்பூத் தகைசால் இலவங்கம்
கப்பூரம் சாதியோ டைந்து[21]

என அரும்பதவுரைகாரரும் அடியார்க்குநல்லாரும் கூறியுள்ளனர். இதனையே முகவாசம் என்றார் திருத்தக்கதேவர்.[22]

இனி, வாசம் என்னும் நறுமணப் பொருள்கள் பற்றியும் அடியார்க்குநல்லார் கூறியுள்ளார். அவையாவன; அம்பர், எச்சம், கத்தூரி, சவாது, சாந்து, குங்குமம், பனிநீர், புழுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், வசுவாசி, நிரியாசம், தைலம் என்று சொல்லப்பட்டவைகளாகும்:[23]

விரை

நறுமணப் பொருள்களையே விரை என்பர். ''ஐந்து விரையும் முப்பத்திரண்டு ஓமாலிகையும்'' என்பது இளங்கோவடிகள் கூற்று,[24]

> "நறும்பிசின் நாகணம் நற்கொட்ட மாஞ்சி
> வெறுங்கண்டில் வெண்ணெய் விரை"[25]

என்பது அரும்பதவுரைகாரர் விளக்கம்.

> "கொட்டம் துருக்கம் தகரம் அகில்ஆரம்
> ஒட்டிய ஐந்தும் விரை"[26]

என்பது பிங்கல நிகண்டு.

நறும்புகை

சிலவகை மணப்பொருள்களை நெருப்பிலிட்டபோது அவற்றி னின்று தோன்றிய புகை நறும்புகையாக இருந்தது. எனவே அப்படிப்பட்ட பொருள்களைப் புகைத்துப் பயன்கொண்டனர் தமிழர்.

நறுமணப் புகையூட்டிய ஆடைகளையும் ஒப்பனைக்குப் பயன் படுத்தினர்.

ஆரம், அகில் தவிர வேறுசில பொருள்களும் புகைத்தற்குரியன வாயின.

> நேர்கட்டி, செந்தேன், நிரியாசம் பச்சிலை
> ஆரம் அகிலுறுப் போடாறு[27]

என்பது அடியார்க்குநல்லார் காட்டியது.

அஞ்சனக் கட்டி, அரியாசம், பச்சிலை,
ஆரம், அகிலுறுப் போரைந்து[28]

என்பது அரும்பத உரைகாரர் காட்டியது.

நேர்கட்டி செந்தேன் நிரியாசம் கற்பூரம்
ஆரம் அகிலுறுப்போ ரைந்து[29]

என்பது நச்சினார்க்கினியர் காட்டு.

(நிரியாசம் - பிசின். அது குங்குலியம் முதலியன).

சுண்ணம்

சுண்ணம் என்பது இக்காலத்துப் பயன்படுத்தப்படும் 'பவுடர்' போன்றது.

இது முகத்திற்கும் உடம்பிற்கும் பூசுவதற்குரியதாகவும் இருந்தது.[30]

நறுமணமிக்க இச்சுண்ணம் ஆடைகளிலும் குறிப்பாகப் பட்டாடைகளிலும் தூவப்பட்டது.[31]

சுண்ணம் செய்யப்பட்ட முறையையும் நச்சினார்க்கினியர் உரையால் அறிய முடிகிறது. நவமணிகள், பொன், சந்தனம் கருப்பூரம் முதலியவற்றைப் புழுகிலும், பனிநீரிலும் நனைய வைத்து இடித்துச் சுண்ணம் தயார் செய்யப்பட்டது.[32] சுண்ணத்தை இடிப்பதற்குப் பணிப்பெண்டிர் பயன்படுத்தப்பட்டனர். இது பூந்தாது போல இருக்கும் என்பர் நச்சினார்க்கினியர்.

பரத்தை ஒருத்தி சுண்ணத்தைத் தன் உடல் முழுதும் பூசிக் கொண்டாள்[33] என்பதாலும், வையையில் நீராடிய மகளிரும் மைந்தரும் அணிந்திருந்த சந்தனம், மணம் கமழும் மாலைகள் சுண்ணங்கள் ஆகியவற்றின் நிறத்தை வையை பெற்றது என்பதாலும் சுண்ணங்கள் பற்றிய செய்தியை அறிகிறோம்.[34] விண்ணில் தூவி விட்டால் அவை மண்ணில் விழாதவாறு வண்டுகள் உண்ணுதற்குரிய சுண்ணத்தை மகளிர் பூசிக்கொண்டனர்.[34அ].

மக்கள் தயாரித்த சுண்ணம் மட்டுமன்றி மலர்களின் தாதுப் பொடிகளையும் மார்பிலும் உடம்பிலும் அப்பிக் கொள்ளும் வழக்கமும் இருந்தது.[35]

புழுகு

இதனைப் புழுகு நெய் என்பர் அடியார்க்குநல்லார்.[36] இவர் உரையால் 'புழுகுநெய்' என்பது கூந்தலுக்குப் பூசப்பெறுவது என்பதும் தெரிய வருகிறது.

சுண்ணம் தயாரிக்கவும் இது பயன்பட்டது. மிகவும் மண முடையது இப்புழுகு என்பது நச்சினார்க்கினியர் உரையால் அறிய முடிகிறது.[37]

கத்தூரி

மானின் வயிற்றிலிருந்து கிடைக்கும் ஒரு நறுமணப் பொருள் தான் கத்தூரி.

மதுரைக் காஞ்சியில் "நரந்தம் அரைப்ப" என்பதற்குக் "கத்தூரியை அரைக்கும்படியாக" என நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.[38]

நெடுநல்வாடையில் "கொள்உறழ் நறுங்கல் பலகூட்டுமறுக" என்பதற்குக் "கருங்கொள்ளின் நிறத்தை ஒத்த நறிய சாந்தம்மியில் கத்தூரி முதலிய பசுங்கூட்டரைக்க" என்றும் உரை வரைந் துள்ளார்.[39]

இது மான்மதம் என்றும் கூறப்பட்டுள்ளது.[40]

நாவிக்குழம்பு

இதுவும் மணப்பொருள்களில் ஒன்று. இதனைத் "தெய்வ மணங் கமழுகின்ற வளவிய சேறு" என்பர் அடியார்க்கு நல்லார்.[41]

பனிநீர்

இக்காலத்தில் பன்னீர் எனச் சொல்லப்படுவதே பனிநீர் எனப்படுவது.

சுண்ணம் தயாரிக்கப் பனிநீரும் பயன்பட்டது.

"மதுரையின் மணிமாடங்களில் இருந்து மகளிர் தூவிய பனிநீரின் மணத்தால் தென்றல் மணந்தது" என்பர் கரும்பிள்ளைப் பூதனார்.[42]

உரையாசிரியர்கள் பனிநீரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். பட்டினப்பாலையில் 'அரியவும்'[43] என்னும் சொல்லுக்குச் 'சீனம் முதலிய இடங்களிலிருந்து வந்த **கருப்பூரம்**, பனிநீர், குங்குமம் முதலியனவும் என நச்சினார்க்கினியர் எழுதியுள்ளதிலிருந்து சீனத்திலிருந்து பனிநீர் தருவிக்கப்பட்டது எனத் தெரிகிறது.

ஊர் காண் காதையில் அடியார்க்குநல்லார் 'வாசம்' என்பதை விளக்குகையில் பனிநீரையும் சொல்லியுள்ளார்.[44]

கருப்பூரம்

மணப்பொருள்களில் ஒன்றான இதுவும் சுண்ணம் தயாரிக்கப் பயன்பட்டது.

அடியார்க்குநல்லார் கருப்பூரத்தின் வகைகளை "மலைச்சரக்கு, கலை, அடைவு சரக்கு, மார்பு, இளமார்பு, ஆரூர்க்கால். கையொட்டுக்கால், மாரப்புற்று, வராசான், குமடெறிவான், உருக்குருக்கு வாறோசு, சூடன், சீனசி சூடனென்று பெயர் கூறப்பட்ட பலவகைத்தாகிய தொகுதியுமெனத் தொகுத்தும் விரித்தும் பொருளுரைக்க" என எழுதியுள்ளார்.[45]

இவற்றின் பிரிவுகளும் பொருளும் இக்காலத்தில் அறியக்கூட வில்லை.

குங்குமம்

ஒப்பனைக்குப் பயன்படுத்திய பொருள்களில் சிவப்பு நிற முடைய குங்குமமும் ஒன்று.

''சீனத்திலிருந்து வந்த பொருள்களில் குங்குமமும் ஒன்று'' என்பர் நச்சினார்க்கினியர்.[46]

குங்குமக் குழம்பு, செங்குங்குமச் செழுஞ்சேறு,[47] குங்கும வருணம்[48] என்பன இலக்கியத்தில் காணப்படும் சொற்றொடர்கள்.

பெண்களும் ஆண்களும் குங்குமத்தைப் பயன்படுத்தினர். குங்குமத்தைப் பெண்கள் தம் மார்புகளின் முன்றிலில் எழுதிக் கொள்ளுதல் வழக்கம் என்பதை, ''கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்"[49] என்பதனால் அறியலாம்.

அஞ்சனம்

பெண்களின் ஒப்பனையில் கண்களுக்கு மை தீட்டிக் கொள்ளுதல் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. மைதீட்டுதல் அநேகமாக எல்லாப் பெண்களும் அறிந்த ஒன்று.

மையைக் கூட்டி, மருதநிலத்துக் குற்றேவல் மகளிர் வேழக் கரும்பின் புழை பொருந்திய திரண்ட தண்டில் பெய்து வைப்பர்.[50]

மை தீட்டிய கண்களை 'உண்கண்' என்றனர் சங்கச் செய்யுட்களில்.

கொன்றைப் பூவின் பசந்த உண்கண்[51]

கயல்ஏர் உண்கண்[52]

பைதல் உண்கண்[53]

தகைமலர் உண்கண்[54]

என்பன சில சான்றுகள்.

அஞ்சனத்தைச் சிறிய கோல் கொண்டு பெண்கள் கண்களுக்குத் தீட்டிக் கொள்ளுதல் வழக்கம்.[55]

அலத்தகம்

அலத்தகம், செம்பஞ்சி என்றும் செம்பஞ்சிக் குழம்பு என்றும் கூறப்பட்டது.

நகங்களிலும் கபோலத்திலும் செம்பஞ்சி எழுதப்பட்டது.[56] பாதங்களுக்குப் பஞ்சியூட்டினர் என்பதை. "அஞ்செஞ் சீறடிப் பஞ்சி ஊட்டியும்"[56அ]. மாதவியின் ஒப்பனையைக் கூறிய இளங்கோவடிகள் "அலத்தகம் ஊட்டிய அஞ்செஞ் சீறடி"[57] என வருணித்தார்.

தொய்யில்

மகளிரின் தோள்களிலும் தனங்களிலும் வரிக்கோலம் எழுதும் சந்தனக் குழம்பு, நீர்க்கொடிவகை, தொய்யில் எழுதும் குழம்பு எனப் பல பொருள்தரும் சொல்லே தொய்யில் என்பது (தமிழ் லெக்சிகன்).

காதலன் தன் காதலியின் கொங்கைகளிலும் தோள்களிலும் அழகுக்காகக் கோலங்களை வரைதலுண்டு. அதனைத்'தொய்யிற் கோலம்' என்றனர். தோளில் 'தொய்யிற் கரும்பு' வரைதலும் உண்டு.[58]

''இவளின் தோற்றம் செய்து எழுந்த வனமுலைகளில் யான் நிறம்பெற எழுதிய தொய்யிலை இவளைப் பாதுகாத்து நிற் போர் அறியார் போலும்'' எனத் தலைவன் ஒருவன் கூறி யுள்ளான்.[59]

இதனைக் கலித்தொகை,

"நெய்தல் நெறிக்கவும் வல்லன் நெடுமென்றோள்
பெய்கரும் பீர்க்கவும் வல்லன் இளமுலைமேல்
தொய்யில் எழுதவும் வல்லன்"[60]

எனக் கூறுவதால் அறியலாம்.

நெற்றியிலும் தோளிலும் தண்ணிய சந்தனத்தால் நுண்ணிய கோலமெழுதினர் என்பதைத்

''தண்ணறுஞ் சாந்தம் நுண்ணிதின் எழுதி"[61]

என்பது அறிவிக்கிறது.

சந்தனக் கட்டையைத் தேய்த்து அத்துடன் பச்சைக் கருப்பூரம் கலந்த குழம்பினால் மார்பிலும் தோளிலும் அழகுறப் பூங்கொடி வடிவில் எழுதினர்.[62]

சந்தனம் முதலியவற்றால் எழுதிய கோலத்தையுடைய மகளிர் 'தொய்யில் மகளிர்' எனப்பட்டனர்.[63]

சந்தனம் மட்டுமன்றிச் சாதிலிங்கம், நானப்பொடி முதலியன கலந்து குழைத்த குங்குமக் குழம்பிலும் தொய்யில் எழுதப்பட்டது.

ஊடல் கொண்ட பெண்ணொருத்தி அழுத கண்ணீர் தொய் யிலில் பட, அது கரைந்து கீழிறங்கிய தன்மை, வானவில் நெகிழ்ந்து உருகினாற் போன்ற தோற்றத்தைத் தந்ததென்பர்[64].

கொங்கைகளுக்கிடையே முளைத்து அதில் அணிந்துள்ள முத்து மாலைகளினிடையே படர்ந்து, மேலே நெற்றிச் சுட்டியின் கீழ்ச்

கருள்சுருளாய்த் தழைத்துள்ளது எனக் காண்போர் குறிப்பால் உணரும்வண்ணம் மார்பு, கொங்கை, நுதல் ஆகிய இடங்களில் பூங்கொடி வடிவத்தில் தொய்யில் எழுதினர்.[65]

இத்தொய்யில், தீயிற்சுட்டு உருக்கிய அகிற்குழம்பில் குழைத்துக் கலந்த வண்ணத்தில் எழுதுகோலைக் கொண்டு எழுதியது.

பெண்களுக்கேயன்றி ஆண்களுக்கும் தொய்யில் எழுதும் பழக்கமும் உண்டு. பெண்களுக்குத் தொய்யில் பூங்கொடி வடிவில் இருக்கும். ஆடவர்க்கு வில் முதலிய வடிவில் எழுதப்பட்டது.[66]

ஆனால், சீதாப்பிராட்டியின் ஒப்பனை பற்றிக் கூறிய கம்பர், 'கொங்கைகளாகிய திரண்ட மணியுடன் கூடிய பொற்செப்பின் மீது, கத்தூரிக் குழம்பால் காமவல்லியும் மன்மதனின் கரும்பு வில்லும் தொய்யிலாக எழுதப்பட்டது' என்பர்.[67]

நகப்பூச்சு

இக்காலத்தில் நகங்களுக்குப் பலநிறப் பூச்சுகளைப் பூசிப் பெண்கள் தம்மை ஒப்பனை செய்து கொள்வதைப் பார்க்கிறோம்.

பண்டைக்காலத் தமிழ்ப் பெண்டிர், நகங்களுக்கும் கபோலங்களுக்கும் அலத்தகம் என்னும் செம்பஞ்சிக் குழம்பைப் பூசிக்கொண்டனர் என்பது முன்பே சொல்லப்பட்டது.

கூரிய பற்களையும் ஒளிபொருந்திய முகத்தினையும் உடைய பெண்களின் பஞ்சி ஊட்டிய நகங்களைப் போன்று குவிந்த அரும்புகளையுடைய முருக்க மரம் என்பதில் உள்ள உவமையால் நகங்களுக்கு வண்ணம் தீட்டிக் கொண்டமையை அறிகிறோம்.[68]

"பஞ்சிவர் விரலினார்" எனக் கம்பர் பாடியுள்ளமையும்[69] இக் கருத்தை வலியுறுத்தும்.

வாசநெய்

வாசம் மிகுதியும் உடைய நெய்யை அக்காலத்தில் தயார் செய்து பயன்படுத்தினர்,

"வாசம் ஓசனை கமழும் மேனியர்"

என்னும் பரிபாடல் அடியாலும் அதற்குப் பெருமழைப் புலவர்

எழுதிய "நாற்காவத தூரம் நறுமணங் கமழும் திருமேனியை உடையமகளிர்" எனும் விளக்கத்தாலும் அறிகிறோம்.[70]

வாசவெண்ணெய்

வாச வெண்ணெய் என்பது இக்காலத்து Cream போன்றது, உறுப்புகளுக்கு மணமுடைய வெண்ணெயைப் பூசிக் கொள்ளும் வழக்கமும் இருந்திருக்கிறது,

மணப்பொருள் செய்யும் வாதிகர், நறுமணப் பொருள்களை நிறுத்துச் சீருறக் கலந்து அதனைச் செய்தனர்.

அவ்வெண்ணெய் மென்மையும் நயமும் மணமும் உள்ளதாய் ஒருநாள் பூசினும் ஓராண்டளவும் விடாது மணங்கமழக் கூடியதாய் சிறப்புப் பெற்றிருந்தது,[71]

ஒருபகல் பூசின் ஓராண்டு ஒழிவின்றி விடாதுநாறும்
பெரியவர் கேண்மை போலும் பெறற்கரும் வாச வெண்ணெய்[72]

என்பது சீவகசிந்தாமணி தரும் செய்தி.

மஞ்சள்

மகளிர் தோலின் நலத்திற்கும் ஒப்பனைக்கும் மஞ்சள் பூசிக் கொள்ளுவதைக் காண்கிறோம்.

பிற்கால இலக்கியத்தில் ஒன்றான முக்கூடற்பள்ளு, மஞ்சள் பயன்படுத்தியதைக் கூறியுள்ளது.

மருதூர்ப்பள்ளி கொச்சி மஞ்சளைப் பூசிக்கொண்டதாக முக்கூடற்பள்ளு கூறுகிறது.[73]

உடல் நலத்திற்கும் அழகிற்கும் மஞ்சள் பூசிக் கொள்ளும் வழக்கமுண்டு என்பதைப் பின்வரும் நூல்களாலும் அறிகின்றோம்.

குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல[74]

மெய்திமிரும் நானப்பொடியோடு மஞ்சளும்[75]

இல்லறத் திற்கி யையவன ஈட்டுவார்
அல்ல செய்தே வறிதின் அழித்திடார்
புல்லி காதலர் ஆயுள் பொலிவுற
மல்லல் ஓங்கணி மஞ்சள் அணிவரால்.[76]

அடிக்குறிப்புகள்

1. சிலம்பு. 5:13-15.
2. ,, 14:108.
3. திருமுரு. 32-33.
4. குறுந். 150:3; 198: 6-7. 324:1. அகம்.102:10.
5. குறுந்.198.
6. மதுரைக். அடி 399க்கு நச்சர் உரை.
7. நெடுநல், 51-52.
8. சிலம்பு. 5:13-15.
9. சிறுபாண். 263.
10. நெடுநல். 56,
11, மதுரைக். 554.
12. குறிஞ். 107.
13. நற். 170:1.
    பதிற் 89:15-16.
    கலி. 93:21.
    அகம். 141:13; 393:23.
14. நெடுநல். 55.
15. ஐங். 276:2.
16. புறம். 168:15.
17. அகம். 282:9-10.
18. சிலம்பு. 5:13 அடியார்க். உரை.
19. நெடுநல். 50.
20. பரி. 12:22.
21. சிலம்பு. 5:26 உரை.
22. சீவக. 2474.
23. சிலம்பு. 14:108.
24. ,, 6:76-77.
25. ,, 6:76 அரும்பத உரை.
26. பிங்கலம். ஐயர் வகை.
27. சிலம்பு. 5:14 அடியார்க் உரை.
28. ,, அரும்பத. உரை.
29. சீவக. பா. 534. நச்சர் உரை.
30. ,, பா. 625.
31. ,, பா. 91.
32. மதுரைக். 399 நச்சர் உரை.
33. கலி. 97:10.
34. பரி. திரட்டு 2:84.

34அ. பெருங். 1:42: 72-73.

35. அகம். 389:5.
36. சிலம்பு. 4:56.
37. மதுரைக். 447. நச்சர் உரை.
38. ,, 553.
39. நெடுநல். 50 நச்சர் உரை.

40, சிலம்பு. 2:68
அடியார்க். உரை.

41. ,, 13:116 ,, ,,

42. பரி. 10:124.

43. பட்டினப். 192 நச்சர் உரை.

44. சிலம்பு. 14:108.

45. ,, 14:109.

46. பட்டினப்.
அடி 192க்கு நச்சர் உரை

47. பரி. 10:81.

48. சிலம்பு. 22:45.

49. ,, 4:49.

50. ஐங். 16:1-2.

51. ,, 500:1.

52. குறுந். 398:3.

73. புறம். 194:4.

54. நற். 370:11.

55. திருக். 1285.

56. பரி. 6:17.

56அ. அகம். 389:7.

57. சிலம்பு. 6:82.

58. பரி. 7:55.

59. குறுந். 276:3-4.

60. கலி. 143:31-3.

61. பெருங். 1:42:150.

62. ,, 4:16;18-21.

63. ,, 1:40:152.

64. பெருங். 1:40; 220-224

65. ,, 1;38: 192-196

66. ,, 2:4:186.

67. கம்ப. அண்ணா.
பதிப்பு 1213

68. அகம். 317:5.

69. கம்ப. அண்ணா.
பதிப்பு. 1157.

70. பரி. பெருமழை.
உரை. பந்.212.

71. பெருங். 2:5: 97-101.

72. சீவக. 2737.

73, முக்கூடற். பா. 4.

74. நாலடி. 131.

75. காசிக். 4:17.

76. நாலா. திவ்ய. 52.

இயல் 8

இயல் - 8

ஒப்பனைக்கு உதவியவர்களும் பயன்பட்ட கருவிகளும்

ஒப்பனைக்கு உதவிய மாந்தர் பற்றிய செய்திகளும் ஒப்பனைக்குப் பயன்பட்ட கருவிகள் பற்றிய செய்திகளும் நமக்கு இலக்கியங்களின் வாயிலாகக் கிடைக்கின்றன. அவை:

1. கண்ணாடி
2. கத்தரிக்கோல், கத்தி
3. கொட்டம்
4. புகையகல்
5. சீப்பு
6. விசிறி
7. செப்பு
8. அஞ்சனம், எழுதுகோல்
9. கொல்லி
10. கடகம்
11. பேழை
12. நாவழி

முதலியன முக்கியமானவை.

பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஒப்பனை செய்துவிட அக்கலையில் கைதேர்ந்தவர்கள் இருந்தனர்.

பெண்டிர் ஒப்பனை

பெண்களுக்கு ஒப்பனை செய்வோர் வண்ண மகளிர் எனப் பட்டனர்.[1]

இவர்கள் தம் தலைவியரை அடி முதல் முடி வரை கைதேர்ந்த ஓவியரும், தாம் இதுபோல வரைய முடியுமா என்று வியக்கும் வண்ணம் ஒப்பனை செய்தனர்.[2]

ஒப்பனை மகளிர், ஒப்பனைக் கலையில் வல்லவராகவும் அத்துறைக் கல்வியைக் கற்றவராகவும் அழகு மிக்க தோற்றம் உடையவராகவும் மங்கல மகளிராகவும் விளங்கினர்.[3]

ஆடவர் ஒப்பனை

'திருமணம் முதலிய மங்கல வேளைகளில் ஆண்களையும் ஒப்பனை செய்தனர்.

ஆண்கட்கு ஒப்பனை செய்பவரை, 'கோலவித்தகர்' என்றனர்.

அவ்வொப்பனையாளர், ஆடவரின் விரல் நகங்களைப் பாதித் திங்கள் போல் வெட்டிக் குறைத்து அழகுற நிறமுடைய கல்லினால் நிறம் பெறும்படித் தேய்த்தனர். மணப்பொடியினை முகத்தில் தடவி, திங்கள் ஒளியினும் மிக ஒளி பெறும்படி நன்றாகத் தேய்த்துப் பின்னர் நேரிய துகிலினால் துடைத்தனர். இயல்பாகவே தாமரையின் அகவிதழ் போன்று சிவந்துள்ள முகத்தை மேலும் காண்போர் வியக்கும்படி செம்பஞ்சியினால் அழகிய நிறமூட்டினர். ஆண்களுக்கும் தொய்யில் எழுதினர். பெண்களுக்குத் தொய்யில் பூங்கொடி வடிவில் அமைந்தது. ஆண்களுக்கோ அது வில் முதலிய வடிவினதாய் எழுதப்பட்டது' .[4]

இராமாயணத்தில் கடிமணப் படலத்தில் இராமபிரானின் ஒப்பனையைக் கம்பர் தெரிவிக்கின்றார்.

ஒப்பனை அறை

ஒப்பனைசெய்து கொள்வதற்கென்றே தனியிடம் செல்வர்,அரசர் முதலியோரின் இல்லங்களில் இருந்தன. அவை தட்பவெப்பக்கட்டுப்பாடு(Air Conditioning)கொண்டதாகஅமைக்கப்பட்டிருந்தன'எனக் கருத இடமுண்டு என்பர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள்.[4]அ

அழகிய வேலைப்பாட்டுடன் அமைந்த அந்த இடத்தினுள் ஞாயிற்றின் வெயிலும் வெளிக்காற்றும் உள்ளே புகாதவாறு தடுப்புகள் இருந்தன. ஒப்பனை செய்ய வேண்டியவரை அந்த அறைக்குள் இட்டுச் சென்று இருக்கையில் இருத்திக் கோலம் செய்தனர்.

வெய்யோன் கதிரொளி வீசுவளி நுழையா
இரும்பணி பெற்ற அரும்பணைப் படுகால்
மேற்புறம் அமைந்த விளங்குமணி வேயுள்
யாப்புறு மண்டபத்து ஆசனத்து இரீஇ[5]

அழகை மிகுவிக்கும் கோலங்கள் புனையப்பட்டனவாதலின் ஒப்பனை அறை 'மல்லல் வினையிடம்' எனப்பட்டது.[6]

கண்ணாடி

ஒப்பனைக்கு இன்றியமையாத கருவி **கண்ணாடி**. சங்ககாலத்திலேயே ஆடியைப் பயன்படுத்தியதற்குரிய சான்றுகள் உள்ளன. பளிங்கு என்றும் இதனைக் கூறினர்.

கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப்பாவை[7]
அடுத்தது காட்டும் பளிங்கு[8]

என்பன இலக்கியச் சான்றுகள்.

கண்ணாடியைக் 'கண்ணடி' என்கிறது பரிபாடல்.[9] கண்ணாடியின் மாசு நீங்க நறுமண நெய்யைப் பூசி, வெண்மையான கற்பொடியை இட்டுத் துலக்கி, அக்கண்ணாடியில் தம் இயற்கையழகையும் செயற்கையழகையும் கலவியால் பெற்ற ஒளியையும் கண்டு களித்து, பஞ்சவாசத்தோடும் கூட்டி இடித்த பாக்கினை வாயிலிட்டு மெல்வோரும் என்பதால் கண்ணாடியை மாசு நீக்கித் தூய்மையாக்கிப் பயன் படுத்தினர் என்பது அறிய வருகிறது.

2. கத்தரிக்கோல், கத்தி

ஒப்பனைக்குரிய கருவிகளில் கத்தரியும் ஒன்று. இதனை 'மயிர்க்குறை கருவி' எனப் பொருநராற்றுப்படை கூறுகிறது.[10]

'நீலநெடுமயிர் எறியுங் கருவி' எனப் பெருங்கதை பேசுகிறது;[11] 'கத்தரிகை' எனவும் அது சொல்கிறது.[12]

மயிர்வினை செய்வோர் மின்னொளியையும் மழுங்கச் செய்யும் ஒளியுடைய கத்தியை வைத்திருந்தனர். எஃகும் இரும்பும் சமநீர்மை யாகக் கலந்து இலக்கணம் பிழையாதபடி கத்திகள் செய்யப் பட்டன.[12அ]

கத்தியைப் பட்டும் பருத்தியும் கலந்ததொரு துணியினால் துடைத்துத் துருவும் கிழிப்பும் நீக்கி, எண்ணாள் திங்கள் வடிவி லிருந்த சாணைக் கல்லில் விழிப்புடன் தீட்டி, வெண்மையான துகிலின் மேல் முறையாகப் புரட்டி அதன் பின்பு பயன்படுத் தினர்.[12ஆ]

மயிர்வினைத் தொழிலைப் பிழையின்றி அவரவர் முகத்தியல் பினுக்குப் பொருந்தும்படியாகச் செய்தனர்.[13]

3. கொட்டம்

கொட்டம் என்பது மஞ்சள், குங்குமம் வைக்கும் பெட்டி. இது பனங்குருத்தால் செய்யப்பட்டது. அரச குடும்பத்தைச் சேர்ந்த வர்களின் கொட்டம், பொன்னாற் செய்யப்பட்டது. அதன் மேற்புறம் இலைகளுடன் கூடிய பூங்கொடி உருவம் பதிக்கப்பட்டு அழகாக விளங்கியது.[14]

4. புகையகல்

அகிலையிட்டுப் புகைக்க, புகையகல்கள் இருந்தன. அவை சிங்கம், காளை, குதிரை, புலி, அன்னம், மகன்றில் ஆகிய விலங்கு கள், பறவைகளின் வடிவங்களில் தொழில் வல்லோரால் செய்யப் பட்டன.[15]

தூபமுட்டி, தூபக்கால் என்றும் பெயர் பெறும்.

5. சீப்பும் அதன் உறையும்

கூந்தல் ஒப்பனைக்குச் சீப்பு மிகவும் தேவையானது. சீப்பு யானைத் தந்தத்தால் செய்யப்பட்டது. பெரிதாயும் வெண்மை

யாயும் இருந்த அச்சீப்பில் ஓவியம் பொறிக்கப்பட்டிருந்ததென்றும் அறிகிறோம்.[16]

அரசயானைகளின் வலக்கொம்பை அறுத்துச் சீப்பாகச் செய்து, அதில் பொன்னைப் பதித்து மணியையழுத்தி மணமும் ஊட்டிச்செய்யப்பட்ட மங்கலமணிச் சீப்பு பயன்படுத்தப்பட்டது.[17] அதனை உறையிலிட்டு வைக்கும் பழக்கமும் இருந்தது.

6. விசிறி

இதனை ஆலவட்டம் என்றும், சாந்தாற்றி என்றும் கூறினர். ஒப்பனைக்கு மிகவும் பயன்பட்ட பொருள்களில் இதுவும் ஒன்று.

''கடைந்திட்ட மணிக்கையினையும் செம் பொன் தட்டினையும் தன்னைச் சூழ்ந்து மிடையப்பட்ட மயிற்பீலியையும் உடைய சாந்தாற்றி'' என்றார் திருத்தக்க தேவர்.[18]

''பவழக் கைப்பிடியும் சுற்றிலும் பொன்குஞ்சங்களும் கோக்கப் பட்டிருந்தன'' என்பர் கொங்குவேள்.[19]

7. செப்பு

ஒப்பனைக்குரிய மலர்களையும் மாலைகளையும் இட்டு வைப் பதற்குரிய சிறிய பெட்டியே செப்பு.

மூட்டு வாயால் மாட்சிமைப்பட்ட செப்பினுள் வைக்கப்பட்ட சூட்டப்படாத பூமாலைகளைப் போலத் தலைவி உடல் மெலிந் தாள் என்பதும்;[20] பூச்செப்பில் பயன்படாது தங்கிய மாலை போன்ற நாங்கள் என்பதும்[21] செப்பினைப் பற்றிச் செப்புகின்றன.

மாலைகளை வைப்பதற்கு மட்டுமன்றி, வாசனைப் பொடி வைப்பதற்குரிய பொற்செப்பு பற்றியும், சந்தனம் வைத்தற்குரிய சந்தனச் செப்பு, சாந்திட்ட (அகிற்சாந்து) பவழச் செப்பு, சிந்தூரம் இட்ட யானை மருப்பால் செய்த செப்பு பற்றியும் சீவகசிந்தாமணி[22] சொல்லியுள்ளது.

எழுதுகோல்

கோல்; அஞ்சனக் கோல்[23] என்பதும் இதுவே. மைதீட்டிக் கொள்ள மகளிர் இதனைப் பயன்படுத்தினர்,

கொல்லி

கொல்லி என்பது துணி என்னும் பொருளையுடைய சொல். அணிகலன்களின் மாசு நீக்குதற்குப் பயன்படுத்தப்பட்டது.

''வகையமை கொல்லியின் வசையறத் துடைத்து'' எனப் பெருங்கதை கூறியுள்ளமையால் இதனை அறிகிறோம்.[24]

கடகம்

ஆடைகளைப் பாதுகாப்புடன் வைத்தற்குப் பயன்படுத்தப் பட்ட பெட்டியைக் கடகம் என்றனர். இதனைக் 'கலிங்கக் கடகம்' என்றனர்.[25]

பேழை

ஒப்பனைக்குரிய அணிகலன்களைப் பாதுகாத்து வைப்பதற் குரிய பெட்டியே 'அணிகலப் பேழை' எனப்பட்டது.[26]

நாவழி

ஒப்பனைக்கு முன், உடல் தூய்மை செய்தல் இன்றியமை யாதது. எனவே வாய் கழுவி, நாவின் அழுக்குப் போக நாவினை வழித்தல் வேண்டும்.

இக்காலத்தில் (Tongue Cleaner) என்பதைப் பயன்படுத்து கின்றோம்.

இது அக்காலத்தில் பண்டைத் தமிழர்களால் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

இதனைப் 'பொன்னா வழியால் புகழ் நாவழித்து' எனக் கூறி, பொன்னாற் செய்த நாவழி குறித்துச் சீவகசிந்தாமணி கூறி யுள்ளது.[27]

நாவழித்த பின் வாயை 'முகவாசம்' என்னும் வாசனைப் பொருள்களிட்டு வைத்த வெந்நீரால் கொப்பளித்துத் தூய்மை செய்தலும் வழக்கம்.[28]

முகவாசம் என்பதற்கு வெற்றிலை என்னும் பொருளும் உண்டு.[29]

அடிக்குறிப்புகள்

1. பெருங்கதை 1:57:96.
1:38:137.
2. ,, 4:13:52-55.
3. ,, 2;5:169-70.
4. பெருங். ஆராய்ச்சி, பக்கம் 280.
4அ. பெருங். ஆராய்ச்சி பக். 274-75.
5. பெருங். 2:5:133-136.
6. ,, 2:5:167.
7. குறுந்தொகை 8:4-5.
8. திருக்குறள் 706.
9. பரிபாடல் 12:20.
10. பொருநர். 29.
11. பெருங். 4:16:25.
12. ,, 4:14:41.
12அ. ,, 2:4:172-84.
12ஆ. ,, ,, ,,
13. ,, 2:4:172-73.
14. ,, 1:46;215-17
15. ,, 1:42:85-89.
16. ,, 1:34:189-90.
17. சீவகசிந்தாமணி 2436.
18. ,, 839.
19. பெருங். 2:18:112-14.
20. குறுந்தொகை 9:2-3.
21. கலி. 68-15.
22. சீவக. 3047, 3048.
23. ,, 1894.
24. பெருங். 2:4:185.
25. சீவக. 863.
26. ,, 863-2.
27. ,, 3045-1,
28, ,, 3045:3-4.
29. ,, ஐயர் ஆராய்ச்சிக் குறிப்பு, பக். 1476.

இயல் 9

இயல் - 9

இலக்கிய மாந்தர் ஒப்பனைக் காட்சிகள்

ஒப்பனைக்கலை ஓர் உயர்ந்த கலை; அழகுக் கலைகளில் அரிய கலை. இன்றும் மகளிரும் மைந்தரும் இக்கலையில் ஆர்வம் காட்டுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

இயல்பாகவே அழகுடையவர், அழகு மிக்கவர் எனப் பிறர் பாராட்ட வேண்டுமென்ற ஆசையால் ஒப்பனையில் ஈடுபடு கின்றனர்.

இவ்வாறிருப்பதால், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த நம் முன்னோர் எவ்வாறு ஒப்பனைக் கலையில் சிறந்து விளங்கினர் என்பதற்கு இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுகள் சிலவற்றைக் காண்போம்.

1. அரமகள் ஒப்பனை
2. சீதாப்பிராட்டி ஒப்பனை
3. ஆடவர் ஒப்பனை
4. குடும்பப் பெண் ஒப்பனை
5. சிறுவர் ஒப்பனை
6. கணிகையின் ஒப்பனை

என்னும் தலைப்புகளில் காண்போம்.

அரமகள் ஒப்பனை

அரமகளிர் அல்லது சூரரமகளிர் என்போர் தெய்வ மகளிர். இயல்பாகவே அழகு வாய்ந்த இவர்கள், தம்மை மேலும் அழகு செய்து கொண்டு ஆடியும் பாடியும் முருகப் பெருமானின் சேவற் கொடியை வாழ்த்தினர். அவர்தம் அழகும் அணிகளும் அடிமுதல் முடியீறாகக் கூறப்பட்டுள்ளன.

அரமகளிர் தம் சிறிய அடிகளில் சதங்கை அணிந்திருந்தனர்.

அவர்கள் ஆடை இந்திர கோபப் பூச்சியின் நிறம் போன்று இயல்பாகவே செந்நிறம் உடையதும் பூத்தொழில் நிறைந்ததும் ஆகும்.

அழகும் இளமையுமுடைய அவர்கள், இடையில் மேகலை அணிந்து கொண்டிருந்தனர். சாம்பூநதம் என்னும் பொன்னாலாகிய அணிகளை அணிந்திருந்தனர்.

இத்தகைய அழகியர் தம் வகிர்ப்பெடுத்த கூந்தலில் வெட்சி மலரின் இதழ்களைச் சூடினர். அவற்றிடையே நீலமலரின் இதழ்களையும் கிள்ளி அமைத்துக் கொண்டனர்.

தலையில் சீதேவி, வலம்புரி என்னும் தலைக்கோலங்களையும் அணிந்து கொண்டனர். நெற்றியில் திலகம் பொருத்தினர். மேலே மகரமீன் வடிவுள்ள தலைக்கோலத்தையும் அணிந்தனர்.

இவ்வாறு சிறப்புற முடித்துக் கொண்ட கொண்டையில் சண்பக மலரையும் மருதம்பூக் கொத்துக்களையும் செருகிக் கொண்டனர்.

சிவந்த அரும்புகளால் கட்டிய மாலையை, கொண்டையைச் சுற்றிலும் வளைவாகக் கட்டிக் கொண்டனர்.

காதுகளில் அளவொத்துச் செருகிய அசோகந் தளிர்கள் அழகியதும் அணிகலன் பொருந்தியதும் ஆகிய மார்பின் மேல் கிடந்தசையும்.

நிறம்மிக்க சந்தனக் குழம்பைக் கோங்கின் அரும்பு போன்ற கொங்கைகளில் மருதம்பூவை அப்பினாற்போல அப்பிக் கொண்டனர். அஃது உலரும் பொருட்டு வேங்கை மலரின் பூந்தாதுகளைத் தூவிக் கொண்டனர்.[1]

சீதையின் ஒப்பனை

அமிழ்தினை மேலும் சுவை செய்தது போல இயல்பாக அழகே உருவான சீதாப்பிராட்டிக்கு மேலும் அழகு செய்தார்கள்.

இராமனின் நிறத்தையொத்த கனத்த வட்டமான கூந்தலில், வானில் நிலைபெற்ற சந்திரன் போன்று மெல்லிய பூமாலையை வட்டமாகச் சூட்டினர்.

நெற்றியில் கூந்தலினின்று சுட்டியைத் தொங்க விட்டனர். பின் இருளையொத்த கூந்தற் கற்றையில் பூட்டு என்னும் அணியை அணிவித்தனர்.

ஒளிவிடும் காதில் ஊசலாடும் குழைகளைப் பொருத்தினர்.

திருமாலினது கையில் தாங்கிய சங்கு போன்ற கழுத்தில் பொருத்தமான கழுத்தணிகளை அணிவித்தனர். பின் நட்சத் திரங்கள் கோத்த மாலையைப் போன்ற முத்துமாலையை அணிவித்தனர்.

செந்நிறம் வாய்ந்த ஓரின மணிகளாகிய பதும ராகங்களை முத்துடன் கோத்துத் தோளணிகளாக அணிவித்தனர்.

ஒளிவிடும் மணிகள் இழைத்துச் செய்த கடகத்தைக் கையில் அணிவித்தனர்.

பிராட்டியின் தனங்களின் மீது கத்தூரிக் குழம்பால் காம வல்லி, மன்மதனின் கரும்பு வில் ஆகியவற்றைத் தொய்யிலாக எழுதினர்.

பட்டாடை உடுத்திய இடையில் மேகலையையும் அதன்கீழ் முத்துத் தொகுதியாலாகிய தாரகைச் சும்மை என்னும் ஓர் அணிகலனையும் அணிவித்தனர்.

செந்தாமரை மலர்போன்ற அடிகளில் பொருந்துமாறு சிலம்பு களை அணிவித்தனர்.

விழிகட்கு அஞ்சனம் எழுதி, நெற்றிக்குத் திலகம் தீட்டினர்.

கூந்தலில் விடுபூவையும் செருகும் மெல்லிய பூவையும், மலரும் பருவத் தரும்புகளையும் காதுகளில் வைத்தற்குரிய பூக் களையும் சூட்டினர்.

புன்னை மலர்களின் மகரந்தத் தாதுக்களை நிகர்த்த பொற் பொடிகளையும் அப்பினர்.[2]

ஆடவன் ஒப்பனை

பலகாலும் எண்ணெய் நீவிய முடியில் குளிர்ச்சிமிக்க நறிய மயிர்ச் சந்தனத்தைப் பூசியிருந்தான். பின் அதன் ஈரம் புலரும்படி நறுமணம் கமழும் அகிற்புகையை ஊட்டினான். முடிக்கு அகிலின் நெய்யை, வண்டுகள் மொய்க்கும்படி தடவிக் கொண்டான்.

நீலமணி போன்ற நிறமுடைய முடியில், மலையில் பூத்தனவும் நிலத்தில் மலர்ந்தனவும் கொம்பில் அலர்ந்தனவும் சுனையில் விரிந்தனவுமாகிய பன்னிற மலர்களைத் தொடுத்து மாலையாக்கி முருகன் என்று அச்சமுறும்படி சூடிக்கொண்டான்.

அழகிய இதழ்களையுடைய பிச்சிப்பூவால் தொடுத்த மாலையைத் தலையில் வடமாகச் சுற்றிக் கொண்டான்.

திரண்ட தோளில் வீழ்ந்து அலையும்படி, சிவந்த நெருப்புப் போன்ற ஒளிமிகுந்த பூக்களையுடைய அசோகினது தளிரை ஒரு காதில் செருகிக் கொண்டான்.

வலிய மார்பில் சந்தனத்தைப் பூசிக் கொண்டான். மேலும் தொன்றுதொட்டு வரும் பேரணிகலன்களையும் நறுமணமிக்க மாலைகளையும் அணிந்து கொண்டான்.

முன்னங்கைகளில் பூண்களைப் பூட்டிக் கொண்டான்.

நுட்பமான தொழில்களையுடைய கச்சை கட்டின சேலையைக் கட்டிக் கொண்டான்.

பொன்னாற் செய்த நல்ல வீரக்கழலைக் காலில் அணிந்து கொண்டான்.[3]

குடும்பப் பெண் ஒப்பனை:
தலைவன் தலைவிக்குச் செய்தது

'நெருங்கிய கொத்தாக உள்ள கூந்தலுக்கு மயிர்ச்சாந்து அணிவித்தான். பின் அதனைப் புலர்த்தி மலர்களை அணிவித் தான். இனிய மணங்கமழும் நெற்றியில் பொட்டு அணிவித்தான்.

பல இதழ்களையுடைய புதுமலர்களைக் கிள்ளி அவற்றுடன் நிறம் வேறுபட, அவ்வவற்றின் மகரந்தப் பொடிகளையும் இளைய நகில்களில் , அப்பினான். பெரிய தோள்களில் தொய்யில் எழுதினான்.

சிறிய பரட்டினையுடைய அழகிய சிவந்த சிறிய அடிகளில் செம்பஞ்சிக் குழம்பைத் தடவினான்.

இவ்வாறெல்லாம் என்னை ஒப்பனை செய்து பாராட்டி, மலர்ப்பள்ளியில் என்னை அமர்த்தி, பகற்காலத்திலும் என்னைப் பிரியானாகியவன் என் தலைவன்' என்றாள் ஒரு தலைவி.[4]

சிறுவர் ஒப்பனை

காலில் உருக்கிய பசும்பொன்னால் பண்ணிய இரண்டாய் அமைந்த காற்சரியோடு கூடிய நிறம் பொருந்திய சதங்கை, கைத்தொழிற் திறனால் கவின் பெற்ற, பொன்மணிகளை வரிசையாகக் கோத்த மணிவடத்தை இடுப்பில் அணிவித்தனர். அதன்மேல் குற்றமற்ற சிவந்த பவளமாலை; இவை இரண்டிற்கு மேல் பூந்துகிலாடை அணிவிக்கப்பட்டது.

கைகளில் நண்டின் கண்கள் போல் காட்சி தரும் அழகிய பொற்றொடி; கழுத்தில் வாள் போலவும், மழுப் போலவும் பண்ணிய அணிகளை நெருக்கமாகக் கட்டி, அவ்விரண்டிற்கும் இடையே தொங்கும்படி தம்பளப் பூச்சியின் மேனி போன்ற செந்நிறப் பவழத்தில் ஆனேற்று உருவம் அமைந்த ஆரம்.

முத்துக்களையும் நவமணிகளையும் ஒருங்கு கோத்து உருள் வடிவில் பண்ணிய மூன்று வடம் அணிவித்தனர். அதன்மேல் மலர் மாலை; இவை இரண்டிற்கும் நடுவே அரும்பற மலர்ந்த நீலமலரும் நாணும், கண்டவர் மருளுவதுமான நீலமணிமாலை.

இவையனைத்தும் குழந்தையின் ஒப்பனையாகக் கலித் தொகையில் ஒரு பாடல் கூறுகிறது.[5]

மாதவியின் ஒப்பனை

மணங்கமழும் நெய் தடவிய கரிய கூந்தலை, பத்துவகைத் துவர், ஐந்துவகை விரை, முப்பத்திரண்டு வகை ஓமாலிகை

ஆகியவை ஊற வைக்கப்பட்ட மணநீர் கொண்டு கழுவித் தூய்மை செய்தாள்,

அங்ஙனம் நீராட்டித் தூய்மை செய்த பொலிவுமிக்க கூந்தலை அகில், சந்தனம் ஆகியவற்றின் புகையினால் ஈரம் புலர்த்தினாள்.

புலர்த்திய கூந்தலை ஐந்து வகைபெற வகுத்து வகை தோறும் மான்மதத்தின் கொழுஞ்சேற்றை ஊட்டினாள்.

தன் அழகிய சிவந்த சீறடிகளில் செம்பஞ்சிக் குழம்பைப் பூசிக் கொண்டாள்.

பஞ்சி ஊட்டிய அடிகளின் மெல்லிய விரல்களில் மகரவாய் மோதிரம், பீலி, கால்மோதிரம் முதலிய அணிகளைப் பூட்டினாள்.

கணைக் கால்களில் பாதசாலம், சிலம்பு, பாடகம், சதங்கை, காற்சரி என்னும் காலணிகளைப் பொருத்தமுற அணிந்து கொண்டாள்.

நீலநிறம் விளங்கும் பூத்தொழிலையுடைய நீலச்சாதர் உடையின் மீது, பருமுத்தக்கோவை முப்பத்திரண்டால் ஆன விரிசிகை என்னும் நுசுப்பணியை மாட்டினாள்.

குறங்குசெறி என்னும் தொடையணியைத் தொடைகளில் பூட்டிக் கொண்டாள்.

மாணிக்க வளையுடன் நீங்காமல் பொற்றொடரால் பிணித்த முத்து வளையைத் தோளுக்கு அணிந்தாள்.

முகப்பில் கட்டிய மாணிக்கத்தோடு பத்திகளில் வயிரம் பதித்த வேலைப்பாடுகள் நிறைந்த சூடகம், செம்பொன்வளை, நவரத்தின வளை, சங்கு வளை, பவள வளை என்னும் முன்னங்கை வளைகளைப் பொருத்தமுற அணிந்து கொண்டாள்.

காந்தள் மலர் போன்ற கைகளின் விரல்களில் நெளி மோதிரத்தையும் மாணிக்க மோதிரத்தையும் வைரம் சூழ்ந்த மரகதக்கல் பதித்த மோதிரத்தையும் போட்டுக் கொண்டாள்.

வீரச்சங்கிலி, நேர்ஞ்சங்கிலி, பொன்ஞாண் என்னும் இவற்றுடன் வேலைப்பாடு மிக்க சவடி, சரப்பளி முதலியனவற்றை அழகிய கழுத்தில் முத்தாரத்துடன் அணிந்தாள்.

பன்மணிக் கோவையால் தூக்காகச் செய்யப்பட்ட பின் தாலியால் முதுகை மறைத்துக் கொண்டாள்.

நீலத்தில் உயர்ந்த இந்திர நீலத்தை நடுவில் எழிலுறப் பதித்த வைர நீலக்குதம்பை, சந்திரபாணி முதலிய காதணிகளைக் காதில் அணிந்தாள்.

தலையில் தெய்வ உத்தியொடு, வலம்புரிச்சங்கு, தொய்யகம், தென்பல்லி, வடபல்லி என்னும் இவை தொடர்ந்த தலைக் கோலத்தைக் கரிய தலைமயிர் அழகுபெறும்படி அணிந்து கொண்டாள்.

இவ்வாறு மாதவி, தான் கற்ற எழிற்கலையின் இலக்கணம் ஒரு சிறிதும் வழுவாமல் அணிகலன்களை அணிந்தும் ஆடைகளைப் புனைந்தும் தன்னை ஒப்பனை செய்து கொண்டாள்.[6]

அடிக்குறிப்புகள்

1. திருமுரு. 12-41.
2. கம்ப. அண்ணா. பதிப்பு, கோலங்காண். 1204-1218.
3. குறிஞ். 107-127,
4. அகம். 389:1-10.
5. கலி. 85:1-20.
6. சிலம்பு. 6: 74-108.

நிறைவுரை

மனிதன் ஒப்பனை செய்து கொள்வது எப்போது தோன்றியது என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல இயலாது.

ஆனால் நீர்நிலையிலோ, கண்ணாடியிலோ தன் உருவத்தைப் பார்த்துச் சரிசெய்து கொண்ட நாள் முதல் அவன் ஒப்பனையில் ஈடுபட்டான் என்று மட்டும் உறுதியாகச் சொல்லலாம்.

ஒப்பனைக் கலை அழகுக் கலைகளில் ஒன்று. இவ்வழகுக் கலையில் பண்டைத் தமிழர் காட்டிய ஆர்வத்தையும் அதைப் போற்றிய முறையையும் இலக்கியங்களின் துணைகொண்டு பகுத்தும் தொகுத்தும் கொடுத்திருக்கின்றேன்.

மேலை நாடுகளில் இத்துறையில் ஏராளமான நூல்கள் தோன்றியுள்ளன. இன்றைக்கும் இதைப் பற்றிய ஆய்வுகள் அறிவியல் முறையில் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன.

'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்'. எனவே உடல்நலமும் ஒப்பனைநலமும் சிறக்க, நம் தமிழிலும் மேலும் மேலும் பல ஆய்வு நூல்கள் வெளிவர வேண்டும். அதற்கு இவ்வாய்வு ஊக்கம் தரும் எனக் கருதுகின்றேன்.

பின்னிணைப்பு - 1

கலைகள் - 64

ஆடல்; பாடல், இசைக் கருவிகள்; வீணை தமரு வாத்தியங்கள்; ஓவியம்; கவிதை; நிகண்டு; யாப்பு; அணி இலக்கணம்; நாடகம் ஆடுதல்; செய்யுளின் ஓர் அடியைக் கொண்டு ஏனைய அடிகளை நிரப்பிப் புதிய பாடல் இயற்றுதல்; ஒருவர் கூறும் இறுதி எழுத்தைத் தொடக்கமாகக் கொண்டு மற்றொரு பாடலைப் பாடுதல்; புதிர் போல அமைந்த பாடல்களை இயற்றுதல்; எளிதில் ஒலிக்கவியலாத கடினம் அமைந்த பாடல்களைப் படித்தல்; மறை பொருளாகச் செய்யுளில் பொருள்களை அமைக்கும் புதிர்வகை; பிறரை ஏமாற்றுவதற்கான பாடல்களை அமைத்தல்; பலநாட்டு மொழிகளைக் கற்றல்; கீழோர் மொழிகளை அறிதல்; நூல்களை அழகாகவும் தெளிவாகவும் படித்தல்; முன்பு படிக்காத நூலை ஒருவருடன் கூடிப் படிக்கும் திறமை; மனத்தில் ஒரு செய்யுளை வைத்துக் கொண்டு சில குறிப்புக்களை மட்டும் ஒருவர் தர மற்றவர் அச்செய்யுளைக் கூறுதல்; மனப்பாடம் செய்வதற்குரிய முறைகள்; மனையடி சாத்திரம், தச்சுக்கலை, பருவங்களின் தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ப, தரையை மாற்றி அமைத்துக் கொள்வது; தோட்டக்கலை; அரிசி, பூ முதலியவற்றால் ஆன கோலங்கள்; பல்வகைத் தின்பண்டங்களைத் தயாரிப்பது; பல்வகைக் குடிநீர்களைத் தயாரிப்பது; நூல் நெசவும் தையலும்; பிரம்புப்பின்னல்; பூவேலைகள்; மாலை கட்டுதல் தலைக்கொண்டை முடிச்சு அலங்காரங்கள், உடை அலங்காரம்; காதணிகள்; வாசனைப் பொருள்கள்; நகைகள்; உடம்பு பிடிப்பது; உதட்டிற்கு வண்ணம் தீட்டுவது, முகம் முதலிய உறுப்புகளுக்கேற்ப மண-நிறப் பொடிகளைப் பயன்படுத்தல்; இலைகளில் தன் எண்ணத்தைத் தெரிவிக்கும் ஓவியங்களைவெட்டி அவற்றைக் காதற் செய்தி அனுப்பப் பயன்படுத்தல்; ஆண்களும் பெண்களும் சேர்ந்து நீராடும்பொழுது விளையாட்டாக நீரில் மிருதங்கம் போல ஒலிகளை எழுப்பும் கலைகள் இரண்டு; படுக்கை தயாரிப்பது முதல் இன்புற்றிருப்பதற்கு உதவியான கலைகள் நான்கு; உலோகம், நாணயம், இரத்தினங்கள் இவற்றை மதிப்பிடுவது; இந்திர ஜாலம்; பொருள்களைக் கையில் மறைப்பது; பொருள்களைத் துணியைக் கொண்டு மறைப்பது; இரசவாதம்,

உலோகம், மணிகள் இருக்கும் நிலத்தைக் கண்டறிவது; சகுன அறிவு; எந்திரங்களைச் செய்வது; வீட்டில் கிளி, மைனா முதலிய வற்றைப் பேசப் பழக்குவது; சூதாட்டம்; சொக்கட்டான்; ஆடு, கோழி முதலியவற்றைச் சண்டையிடச் செய்வது; பொம்மைகளைக் கொண்டு குழந்தைகட்கு உரிய விளையாட்டுகளைச் செய்து காட்டுவது; கயிற்றைக் கொண்டு விளையாடுவது; நல்ல நடத்தைக்குரிய பயிற்சிகள், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலியன; படைப்பயிற்சியும் வேட்டைப் பயிற்சியும் ஆகியன 64 கலைகளாகும்.

பின்னிணைப்பு - 2

கூந்தல் ஒப்பனை

மராட்டிய ஒப்பனை

விரித்தும் தொகுத்தும் வகுத்தும் வாரியும் கோதியும் தீண்டியும் நறுமணப் புகையை நிரம்ப ஊட்டியும் பேணப்பட்ட கருநிறக் கூந்தலை மராட்டிய தேயத்தாருடைய முறையில் ஒப்பனை செய்தலும் உண்டு.

— பெருங்கதை, 2:19: 68-72.

மாலை சூடும் பாணி

ஒப்பனை செய்யப்பட்ட கூந்தலில் பூச்சரங்களைக் கழுத்தின் பின்புறம் படிந்து அசைந்து தொங்கும்படி சூடிக் கொள்வதும் அக்காலத்தில் இருந்தது.

இக்காலத்தில் இம்முறை பரவலாகப் பின்பற்றப்படுவதைக் காண்கிறோம்.

''சீரங்காரச் சித்திர முடிமிசைத்
தாரணி கோதை தாழ்ந்துபுறத் தசைய''.

— பெருங். 3;24: 185-186.

பின்னிணைப்பு-3

பெண்களுக்குரிய பருவங்கள் ஏழு என்பர். அவை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்பன. இவ்வேழு பருவங்களையும் வகைப்படுத்திக் கூறிய முதற் புலவர் கொங்கு வேளிரே ஆவார். உஞ்சை நகர நீராட்டு விழாவில் ஈடுபட்ட மகளிரின் பருவத்தையும், இயல்புகளையும், ஒப்பனைகளையும் முறையே அவர் வருணித்துள்ளதைக் கீழே காணலாம்.

பேதை

இப்பருவத்தினர் காமப் பண்பினைத் தோற்றுவித்தல் இல்லாத இன்பம்தரும் வெள்ளை நோக்கினர். காதலை உண்டாக்காத மழலைச் சொற்களை உடையவர்.

அறல் போன்ற ஐம்பாலாகிய கூந்தலை உடையவர். சுடர் வீசி விளங்கும் கொடியாகி, மணி அணிகலன்களையும் முத்து மாலைகளையும் மார்பில் அணிந்தவர்கள். தம் சிவந்த அடிகளில் மூட்டுவாய்கள் பிணிக்கப்பட்ட பிளந்த வாயையுடைய கிண் கிணியை அணிந்தவர்கள் (பெருங். 1:41: 52-58).

பெதும்பை

அழகிய வெண்ணிலவு போன்ற முகத்தையுடையவர். கோங் கின் பருத்த அரும்பு போன்ற மார்பகங்களைப் பெற்றுக் கன்னிமை அழகோடு விளங்கினர்.

மார்பில் மின்னுக்கொடி யென்னும் பொன்னணிகலன் அணிந் திருந்தனர். தம் ஒப்பனை மகளிர், தாம்தாம் கற்று வல்லவாறு ஒப்பனை செய்யப்பெற்றவர். ஒப்பனைப் பொருளாகிய மயிர் முடியை அணிந்திருந்தனர். கழுத்தில் முத்துவடம் அணிந்திருந் தனர். மலர் போன்ற சிவந்த அடிகளில் சிலம்பினை அணிந்திருந் தனர். தேர் போன்ற அல்குலில் பலவாகிய மேகலைகளை அணிந் திருந்தனர். (பெருங். 1:41: 59-68)

மங்கை

பெதும்பைப் பருவத்தின் முதிர்ச்சி மங்கைப் பருவம். மூங்கிலையும் தோற்கடிக்கும் அழகுமிக்க தோள்களை உடையவர். 'பைங்காசு' அணிந்த இடையினர். (பெருங். 1:41: 69-73)

மடந்தை

கருமுகிலில் கிடந்த பிறைநிலவு போன்று ஒப்பனை செய்த கூந்தலிடைத் தோன்றும் நெற்றியையும் வில்லைப் போன்ற புருவ ஒப்பனையையும் அதன் கீழ் அங்குமிங்கும் உலவிப் பிறழ்ந்த செவ்வரி படர்ந்த விழிகளையும் கிழித்து வெளிவரத் துடிப்பன போன்று வளர்ந்த பருத்த மார்பகங்களில் கச்சினையும் அணிந்திருந்தினர். (பெருங். 1:42: 74-81)

அரிவை

பெண்மை நலமும் இயற்கையழகும் மிக்க நாகரிகமும் உடைய அழகிய மெல்லிய சாயலை உடையவர்.

அணிகலன்களுள் அழகுமிக்க கண்ணிறைந்த 'களிகை' என்னும் அணிகலத்தின் அழகோடு விளங்கினர். (பெருங். 1:42: 82-88)

தெரிவை

கூந்தலில் பொன்னரி மாலை அணிந்திருந்தனர். மின்னல் துவள்வது போலத் தம் பொன்னணிகள் நீரில் பிறழும்படி நீரில் மூழ்கி எழுந்தனர்.

பூத்தொழில் அமைந்த ஆடையினை உடுத்தியிருந்தனர். கைகளில் வரியுடைய வளைகளை அணிந்திருந்தனர். மங்கல அணியையும் பேணியிருந்தனர். இதில் பொன்னரி மாலை கூந்தலணி என்பது தெரிய வருகிறது. (பெருங். 1:42: 90-96)

பேரிளம் பெண்

தேமல் படர்ந்த மெத்தென்ற அல்குலினர். கொய்து மட்டம் செய்த 'கச்சை' எனும் ஒருவகை ஆடையை உடுத்தியிருந்தனர். (பெருங். 1:42: 97-98)

துணைநூற் பட்டியல்

இராகவன், அ. சாத்தன்குளம்	**தமிழ்நாட்டு அணிகலன்கள்**, பாளையங்கோட்டை, 1970.
இராசமாணிக்கனார், மா.	**பத்துப்பாட்டு ஆராய்ச்சி**, முதற் பதிப்பு, சென்னை, 1970,
கம்பர்	**இராமாயணம்**, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதற் பதிப்பு, 1958.
குமரகுருபர சுவாமிகள்	**பிரபந்தத் திரட்டு**, குமரகுருபரன் பிள்ளை, பதிப்பாசிரியர், காசிமடம், திருப்பனந்தாள், 1961,
சாமிநாதையர், உ. வே. பதிப்பாசிரியர்	**பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்**, ஆறாம் பதிப்பு, சென்னை, 1961.
———————	**சிலப்பதிகாரம், அரும்பதவுரையும், அடியார்க்குநல்லார் உரையும்**, ஐந்தாம் பதிப்பு, சென்னை, 1950.
———————	உரை, **குறுந்தொகை**, நான்காம் பதிப்பு, சென்னை, 1962.
———————	பதிப்பு, **புறநானூறு**, மூன்றாம் பதிப்பு, சென்னை, 1935.
———————	பதிப்பு, **மணிமேகலை**, சென்னை.
செந்துறைமுத்து, புலவர்	**ஆயகலைகள் அறுபத்து நான்கு**, முதற் பதிப்பு, நல்வாழ்வுப் பதிப்பகம், சென்னை, 1978.

செல்லப்பன், சிலம்பொலி. **பெருங்கதை ஆராய்ச்சி**, முதல் பதிப்பு, சென்னை, 1976.

சோமசுந்தரம், பேரா. வே. **பெருங்கதை — விளக்கவுரை**, கழக வெளியீடு, மறுபதிப்பு, சென்னை, 1970.

கலித்தொகை விளக்கவுரை, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1970.

உரையாசிரியர், **பரிபாடல்**, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1964.

உரையாசிரியர், **ஐங்குறுநூறு**, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1966.

துரைசாமிப் பிள்ளை, சு. ஔவை. **பதிற்றுப்பத்து உரை மூலமும் விளக்கவுரையும்**, நான்காம் பதிப்பு, சென்னை, 1967.

பரிமேலழகர் உரையாசிரியர், **திருக்குறள்**, ஒன்பதாம் பதிப்பு, சென்னை, 1953.

பாலசுந்தரம் பிள்ளை, தி.சு. **நாலடியார் உரை**, கழக வெளியீடு, சென்னை, 1968.

புலியூர்க்கேசிகன் **முக்கூடற்பள்ளு தெளிவுரையுடன்**, புதிய பதிப்பு, சென்னை, 1972.

மாணிக்கவாசகர் **திருவாசகம்**, கே. சுப்பிரமணிய பிள்ளை பதிப்பு, ஸ்ரீவைகுண்டம், 1969.

மாதவன், மயிலை. பதிப்பாசிரியர், **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**, மணலி லட்சுமண முதலியார் வெளியீடு, சென்னை, 1950.

வேங்கடசாமி நாட்டார், ந. மு. & வேங்கடாசலம் பிள்ளை, ரா. **அகநானூறு பதவுரை, விளக்கவுரை**, ஆறாம் பதிப்பு, சென்னை, 1968.

வேங்கடசாமி, மயிலை சீனி. **தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்**, நான்காம் பதிப்பு, சென்னை, 1969.

கட்டுரைகள்

கலைக்களஞ்சியம், தொகுதி - 1.

ஆங்கில நூல்

Jamila Brij Bhushan, Indian Jewellary and ornaments and Decorative Designs.